


கல்கி
KALKI 22-2-1976 ✱75 காசு



நடத்திய பரிசோதனைகள் நிரூபிக்கின்றன...
பிஸ்கட் என்றால் இதுதான்—சுவைக்கும்
வைட்டமின்களுக்கும்
போஷாக்குக்கும் இதுதான்:
பிரிட்டானியா
க்ளுக்கோஸ்-D
பிரிட்டானியா க்ளுக்கோஸ்-Dயுடன மற்றெந்த முன்னணி க்ளுக்கோஸ் பிஸ்கட்டை ஒப்பிட்டுப் பார்க்க பரிசோதனைகளில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது: வைட்டமின் சத்திலும், மொத்த போஷாக்குத் தன்மையிலும் உயர்ந்தது க்ளுக்கோஸ்-D பிஸ்கட் தான். இனிமைக்கும், சுவைக்கும், மொறுமொறுப்புக்கும், அதிகமாக விரும்பப்படுகிறது. சக்தி வேண்டுமா— க்ளுக்கோஸையும் விட 20 சத விகிதம் அதிக சக்தியைத் தருகிறது க்ளுக்கோஸ்-D. பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D பிஸ்கட்— தித்திக்கும் சக்தி!
எனவேதான், வேறெந்த க்ளுக்கோஸ் பிஸ்கட்டையும் விட அதிக மக்களைக் கவர்ந்துள்ளது பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D
BRITANNIA Glucose
Glucose-D
இப்போது கண்கவரும் புதிய பேக்கிலே
பிரிட்டானியா பிரிட்டானியா பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
லின்டாஸ்-BBC-GL-19-140 TM


குதூகலத்துடன்
கொண்டாடும்
கோலாகலமான
வைபவங்களுக்கு
அழகு சேர்ப்பவை
சாரதாஸ்ஸின்
பட்டுப்புடவைகள்
சாரதாஸ்
பட்டுப்புடவைகளில் புதிய டிசைன்களுக்கு முன்னோடிகள்
தன் பில்டிங்ஸ்.
மவுண்ட் ரோடு.
சென்னை : 600002.
போன்: 87177.
N.S.B.ரோடு.
திருச்சி-620 002.
போன்:7477

இயற்கை உங்களுக்கு அளித்துள்ளது எழில்மிகு கேசம்...
அதனை அவ்வண்ணமே வைத்திருப்பீர்
ஹேலோ கேச பராமரிப்புமூலம்



HSR.G.I.TH

ஹேலோ ஷாம்பூக்கள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப்படுகின்றன—உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே

ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ:
இந்த விசேஷ ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெருகேறும், மிருதுவாகவும் இருக்கக் கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

ஹேலோ எக் ஷாம்பூ:
விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள வளமிக்க முட்டைப் புரதத்தின் பயனாக உங்கள் கேசம் கட்டுக்-கோப்புடன், கவர்ச்சியாகத் திகழ்கிறது.



ஹேலோ லெமன்—ஃப்ரெஷ் ஷாம்பூ:
உங்கள் கேசத்திற்கு இயற்கையான தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

ஹேலோ கான்செண்ட்—ரேட் ஷாம்பூ:
சாதாரமான நுரைவளத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.

இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு—இன்றே உபயோகிக்கத் தொடங்குவீர் ஹேலோ

கல்கி

ராக்ஷஸ
மாசி 10
பிப்ரவரி 22
1976





அடுத்தது குஜராத்?.

(குஜராத்தில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனமாவதற்கு ஏற்ற சூழல் படிப்படியாக வளர்ந்து வருகிறது. (பிற கட்சிகளின் ஒத்துழைப்புடன் காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கவும் முயலலாம்.)

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு ஏதும் கூற முடியாத நிலையில் நகராட்சித் தேர்தல்கள் சமயத்தில் வன்முறைகள் நடைபெற்றதாகச் சட்ட ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினர்கள். அது குறித்து நீதி விசாரணையைக் குஜராத் முதல்வரே அறிவித்து எதிர்த் தரப்பின் நோக்கத்தைத் தகர்த்து விட்டார்.

அதன் பின் ஏதேதோ காரணங்களைக் கூறிக்கொண்டு கே. எம். எல். பி. கட்சியின் ஒத்துழைப்பை ஜனதா அரசுக்கு மறுத்து விட்டார் அதன் தலைவர் சிமன்பாய் பட்டேல். ஆனல் அக்கட்சியின் எம். எல். ஏ.க்கள் இந்த வலையில் விழவில்லை. அவர்கள் தங்கள் சட்டசபைக் கட்சியின் தலைவர் வல்லபபாய் பட்டேலின் யோசனைப் படி தொடர்ந்து ஜனதா அரசுக்கு ஆதரவளிக்கவே விரும்பினர்கள்.

எனவே இப்போது திடும்மென்று சிமன்பாய் பட்டேல் கே.எம். எல். பி. கட்சியையே தாம் கலைத்து விட்டதாக அறிவித்திருக்கிறார். சட்ட சபையில் பலப் பரீட்சை நடக்க வழி வகுத்துள்ளார்.

அரசியல் பகடைகளை எப்படி யெல்லாம் உருட்டலாம் என்பது பாரதம் படித்தவர்களுக்குத் தெரியும். சிமன்பாய் பட்டேலுக்கும் தெரிந்திருக்கிறது.

குஜராத்திலோ அல்லது தமிழகத்திலோ ராஷ்டிரபதி ஆட்சி ஏற்பட்டு விட்டதால் அரசாங்க நடவடிக்கைகள் ஸ்தம்பித்துவிடப் போவதில்லை. மக்களும் அவதிப்படப் போவதில்லை. பிரச்னை அது வல்ல. எதிர்க் கட்சிகள் படிப்படியாகப் பலமிழந்து வருவதே கவலைக்குரிய விஷயம்.

ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகள் சக்தியுடன் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை ராஜாஜி வலியுறுத்தினர். அவர் சொன்னது தமிழகத்துக்கு மட்டுமல்ல, பாரதம் முழுமைக்கும் மட்டுமல்ல, ஜனநாயக நாடுகள் அனைத்துக்குமாக.

ஏக கட்சி ஜனநாயகம் அல்லது க்ஷீணித்துப்போன எதிர்க் கட்சிகளையுடைய ஜனநாயகம் இங்கு ஏற்படுவதைப் பிரதமர் விரும்ப மாட்டார். விரும்பவும் கூடாது. மாறாக அவர், நாடு தழுவிய நோக்கில் பொறுப்புள்ள நல்ல எதிர்க் கட்சி அமையச் சொல்லாலும் செயலாலும் ஊக்கம் அளிக்க வேண்டும்.

கல்கி

மலர் 35

இதழ் 30

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

தூய்மை பெறட்டும்!

சுதந்திர பாரதத்தின் சரித்திரத்தில் ராஷ்டிரபதி ஆட்சியையே இதுவரை கண்டிராத தமிழகத்தில் அந்நிலை ஏற்பட்டுவிட்டதே என்று மெய்யாலும் வருந்துவோர் கூட லஞ்ச ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் மலிந்து விட்ட ஒரு கட்சிக்கு முடிவு ஏற்பட்டதில் மகிழவும் செய்கிறார்கள். அழுதுகொண்டே சிரிக்கிற நிலை!

இங்கிருந்து போன ஏராளமான தந்திகளைப் புறக்கணித்து விட்டு ராஷ்டிரபதி ஆட்சியைக் கொணர வேண்டுமானல், தி.மு.க. அரசின் சாதனைகள் கணிசமாக இருந்த போதிலும் வேதனைகளும் மிகுந்திருந்ததுதான் காரணம்.

குற்றச்சாட்டுகள் குறித்து நீதி விசாரணை அறிவிக்கப்பட்டிருப்பதால் அவை பற்றித் தாம் பிரஸ்தாபிக்கவோ பதில் கூறவோ

விரும்பவில்லை என்கிறார் கலைஞர். இது கண்ணியமான போக்கு. ஆட்சி மாற்றம் அமைதியாக நடக்கவேண்டும் என்ற கருத்தில் 'வன்முறைகள் எதிலும் ஈடுபடாதீர்கள்' என்று கழகத் தோழர்களுக்கு அவர் அறிக்கை விட்டதை ''விவேகம்'' என வர்ணித்திருக்கிறது ''ஸ்டேட்ஸ்மன்'' நாளேடு.

அதே நேரத்தில் பொழுது விடிந்தால் பொழுது போனால் ஏராளமான தி. மு. க. தொண்டர்களும், இரண்டாவது, மூன்றாவது அணித் தலைவர்களும் கட்சியிலிருந்து அச்சம் காரணமாகவோ அருவருப்புக் காரணமாகவோ விலகுவதைப் பார்க்கிறோம். மேல் மட்டத்திலிருந்து அடி மட்டம் வரை தி. மு. க. தூய்மை பெற்றால் அதை நாடு வரவேற்கும்.

கம்யூனிஸ உலகில் புரட்சிக் கருத்து

பட்னாவில் கூடிய வழக்கறிஞர்கள் மகாநாட்டில் நம் உயர்நீதி மன்ற நீதிபதி திரு வி. ஆர். கிருஷ்ணய்யர் பின்வருமாறு பேசியிருக்கிறார் :

''ஒரு காலத்தைச் சேர்ந்த மக்கள் தங்கள் சந்ததியார் இன்னபடிதான் வாழ வேண்டும் என்று நிர்ப்பந்திக்க முடியாது. அரசியல் நிர்ணயச் சாஸனத்தை திருத்தங்கள் மூலமும் சட்டங்கள் மூலமும் மாற்ற இக்காலச் சந்ததி யாருக்கு உரிமையுண்டு. ஒவ்வொரு காலத்தைச் சேர்ந்த சந்ததியாரும் தங்களுக்கு விருப்பமான முறையில் அரசியல் சாஸனத்தை வகுத்துக் கொள்ளலாம்!''

உண்மை; ஆனால் நமது சாஸனத்தைத் திருத்த வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறதா என்று யோசிக்க வேண்டும். ஒரு பிடிவாதத்துக்காகத் திருத்தியே தீருவது என்று முடிவு செய்ய வேண்டியதில்லை.

சாஸனத்தை எந்த நோக்கம் கொண்டு எந்தக் கொள்கையின் அடிப்படையில் மாற்ற வேண்டும், திருத்தி அமைக்க வேண்டும் என்று கருதுகிறார்களோ, அந்த நோக்கமும் கொள்கையும் பத்தாம் பசலிக் கொள்கையாகி வருகிறதே!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவ சமுதாயம் ஒழிந்துவிடும்; தொழிலாள வர்க்கத்தின் ஆட்சி நிலைபெறும்; எதிர்காலம் அப்படித்தான் உருவாகப் போகிறது என்றார்.

முதலும், முதலாளியும் லாப நோக்கமும் வெறுக்கத் தக்க, ஒதுக்க வேண்டிய, ஒழித்துக் கட்டவேண்டிய விஷயங்கள் என்றார்.

இந்தக் கொள்கையின் அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது. புரட்சியே அதன் வழிமுறை. அதற்கு அடையாளமாக மூடிய முஷ்டியே தொழிலாள உலகின் வன்முறைக்கும் வலிவுக்கும் சின்னமாக விளங்கி வருகிறது.

சமீபத்தில் பிரெஞ்சு நாட்டுத் தலைநகர் பாரீஸில் கூடிய கம்யூனிஸ்ட் கட்சியில் புரட்சிகரமான கொள்கை மாறுதல் ஏற்பட்டுள்ளது. அடிப்படைத் தளமே மாறி விட்டிருக்கிறது.

தொழிலாள வர்க்கத்தின் எதேச்சாதிகார ஆட்சியை (*Dictatorship of the Proletariat*) நிலைநாட்டுவது கம்யூனிஸ்ட் கொள்கை. இந்த அடிப்படைக் கொள்கை அடியோடு கைவிடப்பட்டது பாரீஸ் மகாநாட்டில்.

மற்றொரு முக்கிய முடிவு, முஷ்டியைக் காட்டி வன்முறையில் கம்யூனிஸ்ட் ஆட்சியை நிலைநிறுத்துவதைக் கைவிட வேண்டும் என்பது. இனி எல்லா மக்களுக்கும் நேசக்கரம் நீட்டிச் செயல்படுவதென முடிவாகியிருக்கிறது.

இம்முடிவுகள் புரட்சிகரமானவை. புலி தனது உடலின் மேல் உள்ள பட்டைகளை உதிர்த்தால் எவ்வளவு அதிசயப்படுவோமோ, அவ்வளவு அதிசயமான முடிவுகள்.

இம்முடிவுகளுக்கு முக்கிய காரண புருஷரான பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரான ஜார்ஜ் மார்செய்ஸ் சில நாட்களாகவே மேற்கண்ட கருத்துக்களைக் கூறி வந்தார். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியின் குரு பீடமான மாஸ்கோ ஏற்கவில்லை; கண்டித்து வந்தது. இப்போது பத்து லட்சத்து ஐம்பதாயிரம் பேர் கொண்ட பிரஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சி ருஷ்யாவை உதறிவிட்டு மார்செய்ஸின் கொள்கையை ஏற்றுக்கொண்டிருந்து, கம்யூனிஸ்ட் உலகின் பழைய புரட்சிக் கொள்கைகள் பத்தாம் பசலிக் கொள்கைகள் என்பதற்குப் புதிய நிரூபணம் கிட்டியிருக்கிறது. அந்த நிரூபணத்தை கம்யூனிஸ்டுகளே தந்திருக்கிறார்கள்.

இன்றைய பொருளாதார உலகில் தொழிலாளர் நலனும் – முதலும் – லாப நோக்கமும்

ராஜாஜி சிந்தனை

அன்பின் சக்தி

நீங்கள் குதிரையை ஓட்டிப் பழக்கப்பட்டிருந்தால் நல்ல வார்த்தைகளால் தான் நல்ல குதிரையாகச் செய்ய முடியும் என்பதை அறிந்திருப்பீர்கள். சில சமயங்களில் பயமுறுத்தி வேகமாக ஓடும்படி செய்துவிடலாம். ஆனால் அது சிறிது நாட்களுக்குத்தான். குதிரையோ மாடோ வைத்துப் பழக்கமானவர்களிடம் கேட்டுப் பாருங்கள். அன்பு ஒன்றினால்தான் அவைகளை வசமாக்கலாம் என்று கூறுவார்கள். பலாத்காரத்தை உபயோகித்தால் பலன் ஏற்படாது. அதேபோல்தான் மனித மக்கள் விஷயமும். நம் மனத்தில் நல்ல எண்ணங்கள் இருந்தால் பிறர் மனத்திலும் நல்ல எண்ணங்கள் உற்பத்தியாகும்.

– ராஜாஜி மணிவாசகம்

''பெரிய திட்டங்களை விட, சிறிய சாதனைகள் சிறந்தவை.''

— பீட்டர் மார்ஷல்

சம்பத் குமாரி — ஆதாரம்: மிர்ரர்



இம்மூன்றும் சேர்ந்து தொழில் பட்டால்தான் நாடு சுபிட்சமடைய முடியும் என்ற கருத்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்றும் ஒன்றுக்கொன்று முரணானவை, விரோதமானவை என்ற மார்க்ஸீயக் கொள்கை அபத்தம் என்ற முடிவுக்குப் பொருளாதார நிபுணர்கள் வந்திருக்கிறார்கள். ஆகவே, முதலாளிகளும், தொழிலாளர்களும் வர்த்தகர்களும் பரஸ்பர விரோதிகள் அல்ல; இணைந்து செயல்பட வேண்டியவர்கள். இந்தப் பிரத்தியட்ச நிலையைக் கம்யூனிஸ்டுகளே உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

இச்சூழ்நிலையில் — காலம் மிக வேகமாக முன்னேறி வரும் இந்நிலையில் — பத்தாம் பசலிக் கொள்கையாகிவிட்ட சோஷலிஸக் கொள்கைகளின் அடிப்படையில் நமது அரசியல் சாஸனம் திருத்தப்பட வேண்டுமா?

பண்பல்ல

சென்னை சினிமா அரங்கு ஒன்றில் 'ஃபார் பீட்ஸ் ஸேக்' என்றொரு படம். சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாயிற்று. அத்தனைக் கத்தனை வேதனை தந்தது—அதற்கு முன்பாகக் காட்டப்பட்ட ஒரு டாக்குமெண்டரி திரைப் படம்.

நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்குப் பிறகு, அரசியல் பூசல்கள் ஓய்ந்து, வேலைநிறுத்தங்கள் நின்று, உழைப்பார்வம் பெருகி, உற்பத்தியும் அதிகரித்துள்ளதை வரவேற்கிறோம். ஒப்புக் கொண்டு பெருமிதமடைகிறோம். இதனைப் பிரசாரம் செய்வதற்காக இன்றைக்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் உள்ள சில அகில இந்தியத் தலைவர்களைப் பழிப்பது முறையல்ல.

இந்தப் படத்தில் அவர்களைக் கேவலமான முறையில் இழிவுபடுத்தியிருக்கிறார்கள். வேண்டுமென்றே விகாரமான முகபாவங்களையுடைய புகைப்படங்களைத் தேர்ந்தெடுத்துக்காட்டியுள்ளார்கள். இதைவிட மோசம் இவர்களையும் ஹிட்லரையும் மாறி மாறிக் காட்டுவது. இது அநாகரிகத்தின் உச்ச கட்டம்.

அந்தத் தலைவர்கள் சில தவறுகளைச் செய்திருக்கிறார்கள்; அளவு மீறினார்கள் என்பதில் ஐயமில்லை. ஆயின் அப்படி அளவு மீறி நடந்து கொள்ளத் தூண்டிய சந்தர்ப்பங்கள் என்னென்ன என்பது இந்தப் படத்தில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஒரு தரப்பு வாதம் மட்டுமே இடம் பெறுகிறது.

காவலில் உள்ள தலைவர்களுக்காக இங்கே நாம் பரிந்து பேசவில்லை; அதற்கு அவசியமும் இல்லை. ஆனால் எதிர்க் கட்சியினர் எதிர்ப்புப் பணியைக் கண்ணியமுடன் நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களே அந்தக் கண்ணியத்தை மத்திய அரசின் செய்திப் படப் பிரிவும் கையாள வேண்டும் என்றுதான் கூறுகிறோம்.

பேரம் பேசுகிறார்!

அ. இ. மு. க. தலைவர் திரு எம். ஜி. ஆர். இப்போதே பேரம் பேசத் தொடங்கி விட்டார்.

அடுத்த தேர்தலில் எந்தக் கட்சி தமக்கு அதிக ஸ்தானங்களை ஒதுக்குமோ அந்தக் கட்சியுடன்தான் கூட்டுச் சேருவாராம்.

''அடி'' என்று அழைக்க அகமுடையானைக் காணோம். அதற்குள் அஷ்ட புத்திரர் எத்தனை பேர் என்று ஒருத்தி கேட்டாளாம். அந்தக் கதையாக இருக்கிறது எம். ஜி. ஆர். பேச்சு. இப்போதுதான் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

அமைச்சர்கள் மீது நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் முடிவு தெரிய ஓர் ஆண்டு அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறது.

டில்லி மக்கள் சபையின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது.

கேரள மந்திரி சபையின் ஆயுளும் நீடிக்கப் படலாம்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிகள் இணைந்து ஒரு கட்சியாகச் செயல்படுமா என்று பார்க்க வேண்டியிருக்கிறது.

தலைவர் காமராஜ் கருத்துக்களுடன் நெருங்கி வரும் ஸ்ரீமதி இந்திரா அம்மையார், 'தி. மு. க. வை விட ஆபத்தானது அ. தி. மு. க.' என்று காமராஜ் சொல்லி வந்த கருத்தைச் சிரமேற்கொண்டு செயல் படுவாரோ என்னவோ!

இப்படிப் பல விஷயங்கள் தேர்தல் உடனடியாக வரும் என்ற சூழ்நிலையையே உருவாக்கவில்லை. இந்நிலையில் திரு எம். ஜி. ஆர். தேர்தலில் ஸ்தானங்கள் ஒதுக்குவதைப் பற்றிப் பேரம் பேசத் தொடங்கியிருக்கிறார்.

என்னத்தைச் சொல்லுவது, போங்கள்!

வேத மதத்தின் விசேஷ அம்சங்கள் 2

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

நம் மதப்படியும் கர்ம பலனைத் தந்து தீர்ப்புத் தருகிற பலதாதாவான ஈசுவரன் பரம கருணாமூர்த்திதான். ஆனால் கருணை காரணமாகப் பாபியைக்கூட ஸ்வர்க்கத்துக்கு அனுப்பி வைத்து, அதனால் லோகத்தில் எவருமே பாபம், புண்ணியம் என்று வித்தியாசம் பார்க்காமல் அதர்மத்தில் மனமறிந்து விழட்டும் என்று விட்டுவிடுகிறவன் அல்ல அவன். அதனால் என்ன பண்ணுகிறான்? நம் பாப பலனை (புண்ணிய பலனையும்தான்) அநுபவிப்பதற்காக நமக்கு இன்னொரு ஜன்மா கொடுத்து மறுபடியும் இந்த உலகுக்கே அனுப்பி வைக்கிறான். ஸ்வர்க்க ஆனந்தம், நரகக் கஷ்டம் இரண்டும் இந்த உலகிலேயே தான் இருக்கின்றன. நாம் கலந்தாங்கட்டியாகப் பாபம், புண்ணியம் இரண்டும் போன ஜன்மாக்களில் பண்ணியிருப்பதால் இப்போது கெட்டது, நல்லது இரண்டையும் சேர்த்து அநுபவிக்கிறோம். ரொம்பப் பாபம் செய்தவர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறோம். ரொம்பப் புண்ணியம் செய்தவர்கள் நிறையச் சந்தோஷப்படுகிறோம். பொதுவிலே பார்த்தால் ரொம்பக் கஷ்டப்படுகிறவர்கள், அல்லது சமமாக கஷ்ட—சுகம் உள்ளவர்கள் தான் இருக்கிறோமே தவிர, தாங்கள் பரம சுகமாக இருப்பதாக நினைக்கிறவர்கள் ரொம்பவும் துர்லபமாகவே இருக்கிறார்கள் இதிலிருந்தே நாம் அனைவரும் பொதுவில் பாபமே அதிகம் பண்ணியிருக்கிறோம் என்பது புரிகிறது.

பகவான் கருணை காரணமாக, 'இன்னொரு ஜன்மாவிலாவது இவன் பாபத்தைக் கழுவிக் கொள்வானா' என்று பார்ப்பதற்காக ஒரு பெரிய வாய்ப்பாக (opportunity) பிறவியைக் கொடுக்கிறார். அதிலே குரு, சாஸ்திரம், க்ஷேத்திரங்கள் இத்யாதி வசதிகளை எல்லாம் கொடுத்து இவனுடைய அழுக்கைத் துடைக்க முன் வருகிறார். 'இவன் கையாலாகாதவன், ஒரு நாளும் தானாக முன்னேற மாட்டான்' என்று அடியோடு உதவாக்கரையாக நினைத்து, இவனுக்குப் பாபியானாலும் கூட ஸ்வர்க்கத்தைக் கொடுத்து விடுகிறார் என்பதை விட, இப்படி இவனைக்கூட நம்பி, இவன் தன்னைத் தானே கடைத்தேற்றிக் கொள்வான் என்று நம்பிக்கை வைத்து, புனர் ஜன்மா தந்து, இதில் இவனுடைய நன் முயற்சிகளுக்குப் பல விதத்தில் கைகொடுக்க ஸ்வாமி முன்வருவதாகச் சொல்வதுதான்



பறக்கும் கார்கள்!

சென்னையிலிருந்து மோட்டார் ரேஸ் பிரியர்கள் சோழவரத்தில் பத்தொன்பதாவது அகில இந்திய மோட்டார் பந்தயத்தைக் காணக் குழுமினர்.


வெகுநாட்களுக்கு முன்பு ஜப்பான், ஷெரீப் தயானுக்கு 'யமஹா' என்ற விசேஷ மோட்டார் சைக்கிளைப் பரிசளித்தது நினைவிருக்கும். இந்த 'யமஹா' மோட்டார் சைக்கிளை ஓட்டிய ஷெரீப் தயான் 'கிராண்ட் ப்ரி' வெற்றியாளர்.


கார்களுக்கான ஐம்பது பிரதட்சண 'கிராண்ட்ப்ரி'யில் வெற்றிவாகை சூடியவர் இலங்கையைச் சேர்ந்த டேவிட் பியரிஸ். (David Pieris).

'ஆண்களோடு சரிநிகர்' சமானமாகப் போட்டியிடும் பெண்களுக்கும் கார்ரேஸில் பங்குண்டு. முதல் பரிசு ஸ்ரீமதி ரவிதல்வாரும், இரண்டாம் பரிசு குமாரி ராஜிராஜனும் பெற்றனர்.

சோழவரம் விமானதளத்திலிருந்து விமானங்கள் பறப்பதில்லை. ரேஸ் கார்களும், மோட்டார் சைக்கிள்களுமாவது 'விர் விர்' என்று 'பறப்பது' ரேஸ் பிரியர்களுக்கு அரிய விருந்து.

—குண்டுமணி





நன்றாக இருக்கிறது. பொருத்தமாக இருக்கிறது. அதுதான் பரம கருணையாகவும் இருக்கிறது. 'எனக்கென்று முயற்சி என்ன இருக்கிறது? எல்லாம் உன் செயல்' என்று ஜீவன் சரணாகதி செய்கிறபோது ஸ்வாமியே இவனை ஒரே தூக்காகத் தூக்கி விடுகிறார் என்பது வாஸ்தவம். ஆனால் இவனாக முயற்சியை விடுகிற சரணாகதியில் அநுக்கிரகம் செய்வது வேறு. இவனுக்கு முயற்சி செய்யவே லாயக்கில்லை என்று நினைத்து அநுக்கிரகம் செய்வது வேறுதான். புருஷ யத்தனம் என்று ஒன்று இருப்பதாக நினைக்கிற வரையில் அதில் ஜீவனை நம்பி விட்டு வைப்பதுதான் பரம கருணை. அதுதான் நிஜமான அநுக்கிரகம்.

நிரந்தர நரகத்துக்கு ஸ்வாமி எவரையும் அனுப்புவதில்லை என்பது ஒரு தனிப்பட்ட பாதிரியாரின் அபிப்பிராயம்தான். அதுவேதான் கிறிஸ்துவம் முதலான 'ஒரே பிறவி' மதங்களின் கோட்பாடு என்று சொல்வதற்கில்லை. ஒரே ஜன்மத்தில் ஒருத்தன் பண்ணுகிற புண்ணியத்துக்காக, அல்லது பாபத்துக்காக அவனை ஸ்வாமி ஸ்வர்க்கம் அல்லது நரகத்துக்கு நிரந்தரமாக அனுப்பி விடுகிறார் என்பதுதான் அம்மதங்களின் பொதுக் கருத்து. அதிலும் நாம் பொதுவாக பாபமே பண்ணுவதால், நரக தண்டனை பெறுகிறவர்கள்தான் ஜாஸ்தியாக இருப்பார்கள் என்பதால், தீர்ப்பு நாளைக்கே ரொம்பவும் பயங்கரமான பெயர் - Doomsday என்றே வைத்திருக்கிறார்கள். இது பகவானின் கருணைக்குக் குறைவாகத்தான் எனக்குத் தோன்றுகிறது.

நம் மதத்தின் புனர்ஜன்மக் கொள்கைக்கு ஆதரவாக ஒன்றை அழுத்தமாகக் காட்டலாம். வெள்ளைக்காரி ஒருத்தி என்னிடம் வந்து இந்த reincarnation விஷயத்துக்கு நிரூபணம் (proof) கேட்டாள். நான் அவளிடம் வாதம் ஒன்றும் செய்யவில்லை. அப்போது மடத்து முகாமில் ஒரு பண்டிதர் இருந்தார். அவருக்கு இங்கிலீஷும் வரும். அவரிடம் அவளை அங்கே உள்ள பிரசவ ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போய் அங்கே பிறந்திருக்கிற குழந்தைகளைப் பற்றி விவரங்களைக் குறிப்பெடுத்துக் கொண்டு வரும்படி சொன்னேன். அவளும் அப்படியே பிரசவ ஆஸ்பத்திரிக்கு அவரோடு போய்க் குழந்தைகளைப் பற்றிய விவரங்களைக் குறித்துக்கொண்டு வந்தாள். (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

எப்போதோ நெடுங்காலம் கழித்துத் தான் பயன்தருவதா ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்? அதுதானில்லை. விரைவில் வருவாய் பெற வழி உள்ளது உங்களுக்கும் உங்கள் மனைவி மக்களுக்கும்; எப்படி என்று பாருங்கள் இதோ:

எல்ஐஸீயின் "மணி பேக்" (பண மீட்பு) திட்டம் பற்றிப் படித்தறியுங்கள்.




நல் வாழ்வுடன் பாதுகாப்பு

முப்பது வயதிலே நீங்கள் ஓர் 20-ஆண்டு ''பணமீட்பு'' பாலிஸி எடுப்பதாக வைத்துக்கொள்வோம். மாதம் ரூ. 75.30தான் நீங்கள் கட்டவேண்டும். நீங்கள் பெறும் தொகைகள் பின்வருமாறு:

10 ஆண்டுகள் கழித்து ரூ. 3,000.
அதோடு கூட, 5 ஆண்டுகள் கழித்து ரூ. 3,000.
அதோடுகூட,மேலும் 5 ஆண்டுகள் கழித்து ரூ.14,280*
ஆக மொத்தம் ரூ. 20,000.

இந்த 20 ஆண்டுகளுக்குள் பாலிஸிதாரர் இறக்க நேரிட்டால், அவருடைய குடும்பம், ஏற்கனவே பெற்



றுக்கொண்ட தவணைத் தொகைகளுக்கும் மேலாக முழு இன்ஷ்யூரன்ஸ் தொகையான 15,000 ரூபாயையும் பெறும்.**

* தற்போதுள்ள விகிதங்களில் போனசும் இதில் அடங்குகிறது.

** இது ஒரு உதாரணமே தவிர. உங்களுக்குக் கட்டுப்படியாகும் சக்திக்கேற்ப, பெரிய தொகைக்கோ, சிறிய தொகைக்கோ பாலிஸி எடுத்துக்கொள்ளலாம்



நீங்கள் பணிபுரியுமிடத்திலேயே சம்பளச்சேமிப்புத் திட்டத்தின்மூலம் ஏதேனும் ஒரு வித எல்ஐஸி பாலிஸியை எடுத்துக் கொள்ளுங்களேன். உங்கள சார்பிலே பிரீமியங்களைச் செலுத்திவரும் பொறுப்பு உங்கள் எசமானருக்கு உண்டு: இந்தப் பிரீமியங்களோ சாதாரண மாதாந்தரப் பிரீமியங்களைவிடக் குறைவானவையே.



தேவைப்படும் போது பணம்.

கல்வி, மருத்துவம், விடுமுறை, திருமணம்.. எதற்காயினும் சரி, அவ்வப்போதையத் தேவைகளுக்கு வேண்டிய பணம் கிடைத்துவிடும் உங்களுக்கு. அதையும் தவிர, பிரீமியங்கள்மீது வருமானவரித் தள்ளுபடியும் கிடைக்கும்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் போல ஆதரவு தருவது எதுவுமில்லை.

dCA/LIC/83 Tam


இரு வகை சேமிப்பு!
காட்பரீஸ் போர்ன்விடா
ரீ-ஃபில் பாக்கெட்*
வாங்கினால்.
உங்களுக்கு
75
காசு
மிச்சம்
ஒவ்வொரு
பாக்கெட்டும்
அதிக
கோப்பைகள்
தருகிறது, மற்றெந்த
உணவுப் பானத்தை-
யும்விட.
ஆம்; உண்மை! போர்ன்விடா, மற்ற உணவுப் பானங்களைவிட மிகவும் சிக்கனமானது. (மற்றெந்த உணவுப் பானத்தையும் போலவே) ஒரு கோப்பைக்கு 2 ஸ்பூன் போர்ன்விடாவின் ரீ-ஃபில் பாக்கெட் அல்லது டின் அதிக நாட்கள் வருவதை நீங்கள் கண்கூடாகக் காண்பீர்கள். சுவையும் பிரமாதமாக இருக்கும்! ஒரு முறை பருகிப் பாருங்கள்; அதை நீங்களே உணர்வீர்கள்.
உங்கள் கவனத்திற்கு:
போர்ன்விடா ரீ-ஃபில் பாக்கெட் விசேஷமாக தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் புதுமை சற்றும் குறையாமலிருக்க, வழக்கமான போர்ன்விடா டின்னிற்குள் நிரப்பி இறுக்கமாக மூடவும்.
*ஹெர்மெடிகலி ஸீல்டு கொடெய்னர் கார்டன்ஸ்
Bournvita
காட்பரீஸ்
போர்ன்விடா
ஒவ்வொரு பாக்கெட்டிலும் அதிக கோப்பை, ஒவ்வொரு கோப்பையிலும் அதிக சுவை!
சக்தி, வலிமை மற்றும் இன்சுவை கிட்டும் உன்னத உணவு பானம்
OBM/5911 TM



ஒரு நாள்:

ராஷ்டிரபதி பஃக்ருதீன் அலி அகமத்

காலை ஐந்து மணிக்கெல்லாம் விழிப்பு வந்து விடுகிறது. இது நெடுநாளைய பழக்கம். இளம் வயதில் ஹாக்கி, கால்பந்து போன்ற பல விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டி, உடலிலும் உள்ளத்திலும் ஏற்றிக் கொண்ட சுறுசுறுப்பு உணர்ச்சி இன்னும் மீதம் இருக்கிறது. ஆகவே காலையில் ராஷ்டிரபதி பவனை ஒட்டியுள்ள மொகல் கார்டனில், ஒரு மணி நேரத்துக்கும் மேலாகவே நடக்கும் வழக்கத்தைக் கடைப் பிடிக்கிறேன். இது வாரத்தில் மூன்று நாட்கள். நான்கு நாட்கள் அருகே உள்ள சிறிய கோல்ஃப் மைதானத்தில் — கோல்ஃப் ஆடுகிறேன். இன்று நடைப்பயிற்சிதான். வெளியூர்ப் பிரயாணங்களின் போது தங்குமிடங்களிலும் இந்த நடைப் பயிற்சியை நான் கைவிடுவது இல்லை.

நேற்றுக் குடியரசு தினத்தைப் பாரதம் கோலாகலமாகக் கொண்டாடியது. எனக்கும் ஓய்வின்றிப் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் அவசியம் ஏற்பட்டது. இன்று சற்று சாவகாசமான தினம். காலையில் நல்ல குளிர். ஆனால் அது பழக்கமாகிவிட்டது. நான் தில்லியிலே பிறந்து வளர்ந்த ஆசாமிதானே? 'வாக்கிங்' போய்விட்டு வருகிறேன். மழை பெய்யும் நாட்களில் கூடக் குடையைப் பிடித்துக் கொண்டு கிளம்பிவிடுவேன்.

ஒன்பது மணி சுமாருக்குக் காலை ஆகாரம். முன்பெல்லாம் நான் ஒரு நல்ல சாப்பாட்டு ரசிகன். இப்போது என் ரசிகத் தன்மையை டாக்டர்கள் அனுமதிப்பதில்லை. ஏன்? நான் உப்பு சேர்த்துக் கொள்வதைக்கூடத் தடை செய்திருக்கிறார்கள். ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ஏற்பட்ட உடல் நலக் கோளாறே இதற்குக் காரணம்.

எளிய முறையில் வேக வைக்கப்பட்ட கனமில்லாத ஆகார வகைகள். முன்பெல்லாம், இந்தக் காலை ஆகாரத்தின்போது குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து கலகலப்பாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவேன். இன்று நானும் என் மனைவி பேகம் அபிதாவும்தான். மூத்த பையனும் அவன் மனைவியும் ஸ்டேட்ஸில் டாக்டர்களாகப் பணியாற்றுகிறார்கள். என் மகனும் அவள் கணவனும் ஸ்டேட்ஸில்தான் இருக்கிறார்கள். என் கடைசிப் பையன், கேம்பிரிட்ஜில் படித்துக் கொண்டிருக்கிறான்.

காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு, கீழ்த் தளத்தில் உள்ள என் காரியாலய அறைக்கு இறங்கி வருகிறேன். அரசாங்க அலுவல்கள் நிறையக் காத்திருக்கின்றன. மணி பத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. பதினொரு மணி சுமாருக்கு விஞ்ஞான பவனில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் புறப்பட வேண்டும் என்ற நினைவுடனேயே என் பணியில் ஈடுபடுகிறேன்.

விஞ்ஞான பவனுக்குப் போய்விட்டுத் திரும்பும்போது மணி பன்னிரண்டரை. பன்னிரண்டே முக்காலுக்கு ஃபிஜி நாட்டிலிருக்கும் நம் ஹைகமிஷனர் பகவன் சிங் என்னைச் சந்திக்க வருகிறார். பத்து நிமிடங்களில் விடைபெற்றுத் திரும்புகிறார். அவர் சென்றவுடன், சோவியத் நாட்டின் கனரகத் தொழில் அமைச்சர் திரு கோல்டின் என்னைப் பார்க்க வருகிறார். பொதுவான சில விஷயங்கள் பற்றிப் பேசுகிறோம்.

பகல் சாப்பாட்டுக்கு நான் வரும்போது மணி ஒன்றரை. சாப்பாடு முடிந்து சற்று ஓய்வெடுத்துக் கொள்கிறேன். இந்தப் பிரும்மாண்டமான ராஷ்டிரபதி பவனின் உயரமான மேல்தளங்களைப் பார்க்கும் போது, எனக்குப் பத்துக்கு எட்டு பரப்பளவுள்ள சிறைகளில் அடைந்து கிடந்த நாட்கள் நினைவுக்கு வரும். இரண்டாவது உலகப் போர் சமயத்தில், நானும் திரு கோபிநாத் பர்டோலாயும் ஜோர்ஹாட் சிறைச்சாலையில் ஒரே அறையில் வைக்கப்பட்டிருந்தோம். 1938ம் ஆண்டில், திரு கோபிநாத் பர்டோலாய் அஸ்ஸாம் மாகாணத்தில் முதல் மந்திரியான போது நான் நிதி வருவாய்த் துறை அமைச்சராகப் பணியாற்றினேன். காந்திஜி தனி நபர் சத்தியாக்கிரகத்துக்கு அழைப்பு விட்டபோது, நாங்கள் இருவருமே சிறை சென்றோம்.

ஒரு நாள் நள்ளிரவு. ஜப்பானிய விமானங்கள் குண்டுகள் வீசிய காலம். திடீரென்று பேரிரைச்சல். நான் விழித்துக் கொண்டேன். விமானப் படையெடுப்பு நடக்கிறது என்று அவசரம் அவசரமாகக் கட்டிலை விட்டு இறங்கி அதன் அடியில் போய் ஒடுங்கிக் கொண்டேன். பர்டோலாய் பாபுவையும் எழுப்பிக் கட்டிலுக்கு அடியில் போகத் தூண்டினேன். பாவம், பாபு மிகவும் சிரமப் பட்டார். கொஞ்சம் கனமான சரீரம்.

காலை வரை கட்டிலுக்கடியிலேயே முடங்கிக் கிடந்தோம். அப்புறம்தான் இரவில் கேட்ட பேரிரைச்சல், விமானப் படையெடுப்பினால் அல்ல. நில அதிர்ச்சியினால் என்று தெரிய வந்தது. ஆகாயத்திலிருந்து ஆபத்து வருகிறது என்று நினைத்தது தவறாகப் போயிற்று. அது பூமியிலிருந்தே வந்திருக்கிறது!

பத்திரிகைகளைப் புரட்டுகிறேன். புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு தொடர்ந்து படிக்க அவகாசம் எனக்கு என்றுமே கிடைத்ததில்லை. ஒரு காலத்தில் நான் கவிஞனாக ஆசைப்பட்டது உண்டு. உருது மொழியில் சில வரிகள் எழுத முயற்சி செய்தது உண்டு. ஆனால் என் நண்பர் நவாப் செயில் பட்டவர்த்தனமாக, "இதைவிட உருப்படியான ஒரு காரியம் செய்" என்று அழுத்தமாகச் சொன்னார். ஆகவே அந்த முயற்சியை விட்டு விட்டேன்.

என் மனைவி அபிதா பேகத்துக்கு, கவிதை, ஓவியம் போன்ற நுண் கலைகளில் நிறைய ஆர்வம் உண்டு. அவள் ஆர்வத்தில் நானும் பங்கு கொண்டு என் மனத்தைச் சமாதானப் படுத்திக் கொள்கிறேன்.

இதே போல் என் வாழ்க்கையின் நோக்கங்கள் திசை மாறிய வேறு சந்தர்ப்பங்களும் உண்டு. கேம்பிரிட்ஜில் படித்து ஐ. சி. எஸ். பரீட்சை எழுத வேண்டிய நேரத்தில் "மம்ப்ஸ்" என்ற 'பொன்னுக்கு வீங்கி' உபாதை வந்து பரீட்சை எழுத முடியாமல் போயிற்று. அதனால் பார் அட் லா ஆக முடிந்தது. ஐ. சி. எஸ். ஆகியிருந்தால் ஒரு வேளை அரசியலுக்கு வந்தே இருக்கமாட்டேனோ என்னவோ? இதற்காகவும் என் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொள்கிறேன்.

மணி நான்கை நெருங்குகிறது. பொதுவாக இந்த நேரத்தில் என் பணிகளைக் கவனிக்க என் காரியாலய அறைக்குப் போய்விடுவேன். ஆனால் இன்று வேறு நிகழ்ச்சிகள் இருக்கின்றன.

நானும் என் மனைவியும் நாலே கால் மணியிலிருந்து ஐந்து வரை மொகல் கார்டனில், குடியரசு தினத்துக்காக வந்திருக்கும் நாஷனல் காடெட் கோர் அணியினருடன் அளவளாவிவிட்டுத் திரும்புகிறோம்.

ஐந்தேகால் மணிக்கு பம்பாயிலிருந்து வந்திருக்கும் அகிலபாரத சிந்தி சாகித்திய சபாவைச் சேர்ந்த ஐந்தாறு நபர்கள் என்னைச் சந்தித்துவிட்டுப் போகிறார்கள். அவர்களுக்கு அதிக நேரம் ஒதுக்குவதற்கில்லை. ஐந்தரை மணிக்கு, மேஜர் ஜெனரல் சோப்ராவுக்குப் பிரிவுபசார விருந்து. இங்கே ராஷ்டிரபதி பவனில் உள்ள மற்றொரு பகுதியிலேயே நடக்கிறது. அதில் பங்கெடுத்துக் கொண்டாக வேண்டும். ராஷ்டிரபதி பவன ஊழியர்களே ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சி.

ஆறு மணி அளவில் கொஞ்சம் ஓய்வு கிடைக்கிறது. பிற்பகலில் கவனிக்க விட்டுப் போயிருக்கும் விஷயங்களைப் பரிசீலிக்க என் காரியாலய அறைக்கு வருகிறேன்.

ஏழே முக்காலுக்கு என் மனைவி அபிதா பேகம், அன்றிரவு, டாக்டர் ஆகா அவர்கள் இல்லத்தில் விருந்து என்று நினைவுபடுத்துகிறாள். உடை மாற்றிக் கொண்டு துக்ளக் ரோட்டிலுள்ள டாக்டர் இல்லத்துக்குக் கிளம்பும் போது மணி எட்டரை.

ராஷ்டிரபதி பவன் திரும்பும்போது மணி இரவு பத்துக்கு மேலாகிவிடுகிறது. கொஞ்சம் அலுப்பும் தோன்றுகிறது.

மறு நாள் நிகழ்ச்சிகளை மனத்தில் எண்ணிப் பார்த்துக் கொண்டே படுக்கை அறையை நோக்கி நடக்கிறேன். தூக்கம் என்னைக் காத்திருக்க வைக்கவில்லை.

கேட்டு எழுதியவர்: **கோமதி ஸ்வாமிநாதன்**

வட்ட மேஜை

எம். சுப்பிரமணியன் எழுதிய போட்டிக் கதை "மரணமற்று" படித்தேன். இதே போன்று எனது தந்தை 3–2–72 அன்று இயற்கையாக மரணம் அடைந்தார். அவர் கார்ப்பொரேஷனில் பணிசெய்து (69ல்) ஓய்வு பெற்று விட்டார். ஆனால் அவருக்குச் சேர வேண்டிய எந்தவித தொகையும் அவரது மனைவியான எனது தாயாருக்குத் தரவில்லை. இது போன்ற கதையைப் படித்துவிட்டாகிலும் அரசு அலுவலகங்களில் பணி புரியும் அலுவலர்கள் தங்களிடமுள்ள பென்ஷன் பைல்களைச் சீக்கிரம் தீர்த்தால் நலம்.

சென்னை – 34
5 - 2 - 76 எம். எஸ். சுவாமிநாதன்

பிப்ரவரி 8ந் தேதி இதழில் ஓர் என்.ஜி.ஓ. தமிழகஅரசு எழுத்தரின் சம்பள விகிதங்கள், மத்திய அரசின் அல்லது மற்ற மாநில அரசுகளின் எழுத்தர்களுடைய சம்பள விகிதங்களை விடக் குறைவாக இருப்பதைச் சுட்டிக் காட்டி ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் அவர் எடுத்துக்காட்டாகக் கொடுத்திருந்த சம்பள விகிதங்களில் சில தவறுகள் இருப்பதைத் தெரிவித்து நமக்குச் சில கடிதங்கள் வந்துள்ளன. தொகையிலே வித்தியாசம் இருப்பினும் அடிப்படை வாதம் – அதாவது தமிழக அரசு எழுத்தர்களின் சம்பள விகிதங்கள் தாம் குறைவானவை என்ற வாதம் – சரியாகவே உள்ளது. -ஆர்

சேரமான் காதலி

கண்ணதாசன்



அத்தியாயம் 16

"அசைந்தால் போதுமே!"

மன்னவர் மகுடம் துறப்பதாக அறிவித்த அன்றே ரவிவர்மன் தீட்டிய திட்டங்களில் ஒன்று யூஜியானுவை மதுரைக்கு அனுப்புவது என்பது.

வஞ்சியை ஆளும் உரிமை தனக்குக் கிடைத்தால் சேர நாட்டுக்குக் கப்பம் கட்டுவதிலிருந்து மதுரையை விடுவித்து விடுவதாகத் தூது சொல்லவே அவன் யூஜியானுவை மதுரைக்கு அனுப்ப விரும்பினான்.

வேறு திறமையுள்ள தூதுவர்கள் இல்லை என்பதாலா? இல்லை. தன்னுடைய எந்த ரகசியத்தையும் காப்பாற்றக் கூடியவள் அவள் என்பதால்; அன்றியும் அவள் ஓர் அழகான பெண் என்பதால்.

ஆடவர்கள் நுழைய முடியாத இடத்தில் அழகிகள் நுழைந்துவிட முடியும்.

யூஜியானுவுக்கு சாகஸம் தெரியாது; ஆனாலும் அழகு இருக்கிறது. தான் சொல்கிற செய்தியைக் கிளிப்பிள்ளை போல் சொல்லி, கிடைக்கிற பதிலை அப்படியே ஒப்புவிக்கிறவள் யூஜியானு என்பதால், அவளை அனுப்ப விரும்பினான் ரவிவர்மன்.

மேலும் அது ஒற்று வேலையல்லவே; தூதுதானே! ஒற்றனுக்கும் தூதனுக்கும் ஒரு பேதம் உண்டு. யாருக்கும் தெரியாமற் போய், யாருக்கும் தெரியாமல் வருகிறவனுக்குப் பெயர் ஒற்றன். எல்லோருக்கும் தெரியும்படி சென்று, தெரியும்படி திரும்பி வருகிறவன் தூதன்.

எனினும் யூஜியானுவின் தூது வேறு வகையானது. அவள் ஒற்றனைப் போல் சென்று, தூத

லைப் போல் நடந்து கொண்டு, ஒற்றலைப் போல் திரும்பி வரும்படி அனுப்பி வைக்கப்பட்டாள்.

இலங்கைக்கு அனுமான் போனதும் அப்படித்தானே! அது, அவனை அனுப்பிய ராமனுக்கு நியாயம் என்ருல், இது ரவிவர்மனுக்கு நியாயம் இல்லையா?

வெகுவேகமாகச் செல்லும் குதிரைகளில் ரவிவர்மனுக்கு வேண்டிய நால்வர் பின்தொடர மதுரை போய்ச் சேர்ந்த யூஜியானு, ரவிவர்மனுக்கு வேண்டியவனும், மதுரை தளபதிகளில் ஒருவனுமான **அரச மாணிக்கத் தேவன்** இல்லத்தில் தங்கினுள்.

அவன் மூலம் பெருந்தனக்காரர் ஒருவரின் உதவியால் திருவிழா நடனத்துக்குத் தன்னை ஏற்பாடு செய்து கொண்டாள்.

அவள் முன்பின் ஆடிப் பழகியவள் இல்லை என்ருலும், ஆடத் துணிந்தாள்.



''தாளத்துக்கு ஏற்றபடி நீ அசைந்தாலே போதுமே; அதைவிடவா ஒரு நாட்டியம் இருக்கிறது?'' என்று அவளைத் தயார் செய்து அனுப்பியிருந்தான் ரவிவர்மன்.

தூது, நாட்டியம் இரண்டுமே அவளுக்குப் புதிய காரியங்கள். முதலில் யோகோவா அதற்குச் சம்மதிக்கவில்லை. மதுரையில் அவளது கற்புக்கு உள்ள பாதுகாப்புப் பற்றி ரவிவர்மன் விளக்கியதும் யோகோவா சம்மதித்தார்.

ஒரு நாள் ஒத்திகையும் பார்த்துக் கொண்டுதான் யூஜியானு புறப்பட்டாள். ஆடல் அரங்கில் யூஜியானு தோன்றியதும் கூட்டமே மெய்ம்மறந்து நின்றது. அரங்குக்கு முன்னல் அழகிய ஆசனங்கள் போட்டுப் பெருந்தனக்காரர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் நாட்டியம் பார்க்க வருவதே, நாட்டியம் முடிந்ததும் அந்தப் பெண்ணை அழைத்துப் போகலாமா என்பதற்காகவே. பாண்டிய நாட்டில் அது மிகவும் சகஜமாக நடப்பது. கணிகையர் குலம் மட்டுமே ஆடிக் கொண்டிருந்த காலமாதலால் ஆடுபவரெல்லாம் கணிகையரே என்று அந்நாளில் கருதப்பட்டது.

யூஜியானுவின் அழகைப் பார்த்த பெருந்தனக்காரர்கள் பலர் தங்கள் பணியாட்களிடம் ரகசியம் பேசத் தொடங்கினர்.

இதை முன்கூட்டியே எதிர்பார்த்திருந்த தளபதி அரச மாணிக்கம் சில சேவகர்களையும் முச்சந்திக்கு அனுப்பி வைத்திருந்தான்.

யூத மொழியில் மட்டுமின்றிக் கொடுந்தமிழிலும் பயிற்சியுடைய யூஜியானு, வெப்பக் காற்றில் வியர்வை வழிய வழிய ஆடிக் கொண்டிருந்தாள். அந்த வியர்வைத் துளிகள் எல்லாம் அவள் உடம்பில் ஒளிவிடும் வைரங்களாகத் தோன்றின.

ஆட்டத்தினிடையே ஒரு பெருந்தனக்காரர் ஐந்நூறு வராகன் மதிப்புள்ள ஒரு தங்க மாலையை மேடைக்குச் சென்று அவள் கழுத்தில் அணிவித்தார். இன்னொருவர் ஆயிரம் பொன் பண முடிப்பை அளித்தார்.

போட்டி போட்டுக் கொண்டு பெருந்தனக்காரர்கள் அவள் காலடியில் தங்கத்தைக் குவித்தனர். அவ்வளவையும் அரச மாணிக்கத்தின் ஆட்கள் வாங்கி மூட்டை கட்டிக் கொண்டனர்.

கூடி யிருப்போர் அனைவரும், ''யார் அவளை அழைத்துப் போகப் போகிருர்?'' என்று வேடிக்கை பார்க்கக் காத்திருந்தபோது கூட்டத்தை விலக்கிக் கொண்டு தளபதி அரசமாணிக்கம் மேடைக்கு வந்துவிட்டான்.

யூஜியானுவுக்கு அப்போதுதான் உயிரே வந்தது.

மேடையில் தோன்றிய அரசமாணிக்கம் ஜனங்களைப் பார்த்து, ''சேர நாட்டின் யூதக் குடிமகள், ஒரு குலமகள். அவள் எனது விருந்தாளி'' என்று சொல்லியபடியே தன் மகளைக் கைத் தாங்கலாக அணைப்பது போல் அவளை அணைத்துக் கொண்டு கூட்டத்தை விட்டு வெளியேறினன்.

கூட்டம் முழுவதும் அதைக் கவனித்தது.

ஏமாற்றத்தோடு பெருந்தனக்காரர்கள் கவனித்தார்கள். அவர்கள் மட்டுமா கவனித்தார்கள்?



தலையில் வல்லவட்டுக் கட்டிக் கொண்டு பாண்டிய நாட்டுக் கிராமத்துக் குடிமகனைப் போல் காட்சியளித்த சங்கர நம்பூதிரியும் ஒரு மூலையில் நின்று அதைக் கவனித்தார்.

அத்தியாயம் 17

இது கொங்கு நாடு

பச்சைப் பாவாடை கட்டி வெண்மையும் கருமையும் கலந்த தாவணி போட்டது போல் அழகாக நிற்கும் மலை முகடுகள்.

இனிய வாசத்தோடு அதிலிருந்து பிறந்து வரும் இளங் காற்று.

மங்கையர் கூந்தலெல்லாம் சங்கம் சேர்ந்தது போல் வானிலே தவழ்ந்து வரும் மேகங்கள்.

கோடையின் கொடுமையே அறியாத பூமி.

கொள்ளைச் சுவையை அள்ளித் தரும் தண்ணீர்.

வஞ்சகமே அறியாத மக்கள்.

அவர்கள் குடியிருக்க மூங்கில்களாலும், தென்னங் கீற்றுகளாலும் வளையப் பெற்ற சிறிய இல்லங்கள்.

ஒழுங்கற்ற சாலைகள்.

உயர்ந்து நிற்கும் மரங்களுக்கிடையே ஓடி விளையாடும் மான், மயில் கூட்டங்கள்.

துறவு பூண்ட இளங்கோவடிகள் உதகை முதுகில் ஏறி இறங்கித் தங்கி இருந்ததாகச் சொல்லப்படும் கொங்கு நாட்டின் தலைநகரம் இதுதான்.

நதியும் அதிகமில்லாமல், நிலமும் பாறைகள் நிறைந்ததாக இருந்ததால், நிலத்தடி நீரையும் பயன்படுத்த முடியாமல் வறண்டு போய்க் கிடந்த நிலங்கள் கொங்கு நாட்டை வளமில்லாமல் செய்து வைத்திருந்தன.

வளமிழந்த அந்நாட்டின் வலுவிழந்த மன்னனே, கவுடதேவன்.

கவுட தேவன் காதல் ரசனை மிக்கவன். மது மயக்கத்தில் திளைப்பவன்.

மக்களிடம் ஆறில் ஒரு பங்கு கடமை வாங்கி அதில் ஒரு பங்கை வஞ்சிக்குக் கப்பமாகக் கட்டிவிட்டு ஆனந்தமாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

அவனது அரண்மனையின் அந்தப்புரத்தில் மட்டுமல்ல, எந்தப்புறத்திலும் பெண்களே காணப்பட்டார்கள்.

இளம் வயதில் முறை தவறி ஒரு பெண்ணை நாடும் உள்ளம், வயது ஆக ஆகப் பல பெண்களை நாடுகிறது.

கவுட தேவனின் நிலையும் அதுதான்.

போரைப் பற்றிய சிந்தனையே இல்லாததால், அவன் காதற் போரிலே காலம் கழித்தான்.

அரசர்கள் அவனைச் சந்திப்பதை விட அழகிகள் அவனைச் சந்திப்பது சுலபம்.

அன்று கொங்கு நாட்டுத் தலைநகருக்கு ஒரு பேரழகு வந்து சேர்ந்தது. சரஸ கலாசாலையில் பட்டம் பெற்ற தங்க மயில் அது.

மங்கலக் குலமகள்போல் காட்சிதரும் பொதுப் பொருள் அது.

நடனம் வல்ல நகைமுக மாது;
நளினம் வல்ல மன்மதன் தூது!
இடையின் அளவே இலக்கிய அளவு.
இனிய முகமோ சித்திரை நிலவு.
நடையில் பிறரைச் சுண்டி இழுக்கும்;
நாட்டியம் தொடங்கினால் ஊரையே மயக்கும்.
பள்ளி அறையில் கன்னென இனிக்கும்;
பகைவரைக் கூடப் பணியவும் வைக்கும்.

எது அந்த அழகு? யாரந்த நிலவு?
வஞ்சியில் அவளோர் நாட்டியக்காரி.
அவள் பெயர் மாதவி.


சிலம்பு பிறந்த பின் சேர நாட்டு நாட்டியக்காரிகள் மாதவி என்று பெயர் வைத்துக் கொள்வது வழக்கமாயிற்று. பின்பு அது குலமகளிரிடையேயும் பரவிற்று.

ஆனால் அந்த மாதவி ஒரு விலைமகள்.

பாதுகாப்பாக மதுரைக்கு பூஜியானையை அனுப்பிய ரவி வர்மன் எப்படி வேண்டுமானாலும் நடக்கக் கூடிய மாதவியைக் கொங்கு நாட்டுக்கு அனுப்பி வைத்திருந்தான்.

அரண்மனைக்குள் நுழைவதற்கு அவள் யார் தயவையும் எதிர்பார்க்கவில்லை. அவள் அழகைக் கண்டதும் அரண்மனைக் கதவுகள் தாமாகத் திறந்தன. அந்தப்புரக் கதவுகள் தாமாக வழி விட்டன. கவுட தேவனின் பள்ளியறைக் கதவு தாழிடப் படாமலேயே இருந்தது. அங்கே ஒரு பஞ்சணையில் ஒரு பெண்ணின் மடி மீது தலையையும் இன்னொரு பெண்ணின் மடி மீது காலையும் வைத்தவாறு மதி மயங்கிக் கிடந்தான் கவுட தேவன். அந்தப் பெண்களும் குடிபோதையில் உட்கார்ந்த படியே தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

காமதேவனின் அந்தப் பூஜையறைக்குள் சேர நாட்டின் ரதி தேவி காலடி எடுத்து வைத்தாள். (தொடரும்)



தன்னைவிடப் பெரியவர்களிடத்தில் பணிவோடு இருப்பது கடமை. தனக்குச் சமமானவர்களிடத்தில் பணிவோடு இருப்பது மரியாதை. தன்னைவிடக் கீழானவர்களிடத்தில் பணிவோடு இருப்பது பெருந்தன்மை.

—பெஞ்சமின் பிராங்க்ளின் -வி. ந. ஸ்ரீதரன்

டாக்டர்கள் கூறுகிறார்கள், 3 மாதங்கள் ஆனவுடன் உங்கள் குழந்தைக்குப் பால் மட்டும் போதாது. சீரான வளர்ச்சி பெற உங்கள் குழந்தைக்குத் தேவை ஒரு திட உணவு–பாரெக்ஸ்.



இதோ, வளரும் உங்கள் குழந்தைக்கு பாரெக்ஸ் வழங்கும் நன்மைகள் :


- ஆரோக்கியமான இரத்தத்திற்கும் வலிமைக்கும் போதுமான இரும்புச் சத்து.
- உறுதியான பற்களுக்கும் எலும்புகளுக்கும் தேவையான கால்சியம் மற்றும் வைட்டமின் டி2.
- விரைவான வளர்ச்சிக்குதவக் கூடிய எளிதில் சீரணமாகும் புரதம்.
- அவளது வயதுக்கும் மாறிவரும் தேவைகளுக்கும் ஏற்ற போதுமான சக்தி.

வளர்ந்துவரும் உங்கள் குழந்தைக்குத் தேவையான பாரெக்ஸ் அளவு

உங்கள் குழந்தையின் வயது	பாரெக்ஸ் அளவு
3-6 மாதங்கள்	1-2 தேக்கரண்டி-தினசரி இருமுறை
6-9 மாதங்கள்	3-4 தேக்கரண்டி-தினசரி மும்முறை
9 மாதங்கள்-3 வயது	4-6 தேக்கரண்டி-தினசரி நான்கு முறை

பாரெக்ஸ்

சீரான உடல் வளர்ச்சிக்கு உங்கள் குழந்தையின் முதலாவது திட உணவு – 3 மாதங்கள் ஆனபின்



இலவசம்! பாரெக்ஸ் புத்தகம். உங்கள் பெயர், முகவரியுடன் (எந்த மொழியில் வேண்டுமெனக் குறிப்பிட்டு) 25 பை. தபால் தலையுடன், த. பெ. எண் 16558, பம்பாய் 400 025 என்ற முகவரிக்கு எழுதுக.

க்ளாக்ஸோ

CMGF-47 203. TM

பல் வைத்தியர்கள் கூறுகிறார்கள்:

தவறாமல் பிரஷ் கொண்டு பல் துலக்கி, ஈறுகளைத் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்.

போர்ஹேன்ஸ் பற்பசையைத் தவறாமல் உபயோகிப்பவர்கள் தாங்களாகவே கூறுகிறார்கள்:

"இப்பொழுது எனக்கு வயது இருபது. நான் பனிரெண்டு வயது முதலே போர்ஹேன்ஸ் உபயோகித்து வருகிறேன். முதன் முதலாக போர்ஹேன்ஸ் உபயோகிக்கத் தொடங்கியபோது, என் ஈறுகளுக்கு சிறிது தொல்லை ஏற்பட்டது. ஆனால் இப்போது அது சரியாகிவிட்டது: தொல்லை ஏதும் இல்லை.... முதலில் நான் இரவில் பற்களைத் துலக்குவதில்லை. இரவில் 10 மணிவரை படிப்பது வழக்கம். அப்போது தினமும் உங்கள் விளம்பரம் 'ஒரு புதிய பழக்கத்தை நினைவுறுத்தும்'"

(கையொப்பம்)
எஸ். மித்தல், பி.ஏ. (எலெக்ட்ரிகல்),
பாட்டியாலா.

"நான் புகை பிடிப்பவன் அல்ல. எனினும், ஓர் ஆண்டுக்கு முன்பு, என் பற்கள் மஞ்சளாக இருப்பதைக் கவனித்தேன். முப்பது ஆண்டுகளாக போர்ஹேன்ஸ் உபயோகித்து வரும் என் தந்தை, நான் உபயோகித்து வந்த பற்பசையை விட்டு விட்டு, போர்ஹேன்ஸுக்கு மாற்றிக் கொள்ளச் சொன்னார். அப்படியே செய்தேன்; என்ன ஆச்சரியம்! இப்பொழுது என் பற்கள் வெண்மையாகப் பளிச்சிடுகின்றன. அதற்குக் காரணம் உங்கள் போர்ஹேன்ஸ் பற்பசைதான். நீங்கள் கூறும் சிறப்புகள் அனைத்தும் அதில் உள்ளன. **ஒரு பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை அது** என்பது மட்டுமே போதும் அதன் சிறப்புக்கு!

(கையொப்பம்) எஸ்.எஸ். சட்டர்ஜி,
கோயம்புத்தூர்.



(மேற்கண்ட சான்றிதழ்களின் புகைப்பட நகலை ஜெப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிமிடெட்டின் எந்த அலுவலகத்திலும் காணலாம்.)
சீரான பற்பராமரிப்புக்கு இரவிலும் காலையிலும் போர்ஹேன்ஸ் பற்பசை மற்றும் போர்ஹேன்ஸ் டபுள்-ஆக்ஷன் டூத் பிரஷ் உபயோகியுங்கள்... உங்கள் பல் வைத்தியரையும் தவறாமல் கண்டு வாருங்கள்.

இலவசம்! "உங்கள் பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்னும் விவரமான வண்ணப் புத்தகம்.
இப்புத்தகம்* பெற (தபால் செலவுக்காக) 25 பைசா தபால் தலையுடன் இக் கூப்பனை "மேனர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய்-1" என்னும் முகவரிக்கு அனுப்புக.

பெயர் ____________________ வயது ________

முகவரி ____________________________

*எந்த மொழியில் வேண்டுமோ, அதன் கீழ் கோடிடவும். ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, பஞ்சாபி, வங்காளி, அஸ்ஸாமி, தமிழ் தெலுங்கு, மலையாளம், கன்னடம்.

TO-101

போர்ஹேன்ஸ் – பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை

129 F-182 TAM



வஸந்த் தேசாய் பற்றி வாணி ஜெயராம்

"இவள் என் மகள், இவர் என் மருமகன்!"

ஒரு நித்திய பிரும்மசாரி பகிரங்கமாகப் பலருக்கும் ஓர் இளம் தம்பதியை அறிமுகப் படுத்துவதென்றால், அவர் ஒழுக்கத்தில் எவ்வளவு உயர்ந்தவராக இருக்க வேண்டும்? அந்தத் தம்பதிகளும் எவ்வளவு பாக்கியம் செய்தவர்களாக இருக்க வேண்டும்?

காலஞ்சென்ற இசை மன்னர் வஸந்த தேசாயைத் தமது இசைத் தந்தையாகப் பேணும் பேறு பெற்றவர் ஸ்ரீமதி வாணி ஜயராம்.

'ஆண்டவனே உன் அடிமை நாங்கள்' என்னும் பொருள் தரும் 'ஐ மாலிக் தேரே பந்தே ஹைஹன் ஹம்' என்னும் பாடலுக்கு மெட்டு அமைத்து ரசிகப் பெருமக்கள் பலரையும் தம் இசைப் புலமைக்கு அடிமை யாக்கிக் கொண்ட அவர் இன்று இறைவனுக்கு அடிமையாகி விட்டார்.

அவரைப் பிரிந்த துயரம் தாளாமல் ஸ்ரீ சாந்தாராம், "இன்று இறைவனிடம் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. தனது குரூரக் கரத்தை நீட்டி மிக நேர்த்தியான மனிதப் பிறவியை எப்படி நிர்த்தாட்சிண்யமாகப் பறித்துக் கொண்டு விட்டார்? தவறு இழைப்பது எனக்கு மனித இயல்பாகப் படவில்லை; தெய்வத்தின் இயல்பாகவே தோன்றுகிறது!" என்று சாடியுள்ளார்.

மராட்டிய மண்ணில் பிறந்தவர் என்றாலும் வஸந்த தேஸாய் தமது 'கனசியாம சுந்தர' பாடலின் இசை அமைப்பு மூலம் தென்னாட்டு ரசிகர்களின் இதயத்தில் நீக்கம் அற இடம் பற்றிக் கொண்டவர். வஸந்த தேசாயின் இசைப் புகழ் பாட எத்தனையோ படங்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றன வென்றாலும், 'தோ ஆங்கேன் பாரஹ் ஹாத்' 'ஜனக் ஜனக் பாயல் பாஜே' 'கூன்ஜ் உடீ ஷெஹனாயீ' போன்ற சாந்தாராமின் வெற்றிப் படங்களை மறக்க முடியாது. இந்த நினைவுகளில் தோய்ந்து உரையாடும் வேளையிலே, வாணி ஜெயராமின் தொண்டை அடைத்துக் கொள்கிறது. விழிகளில் நீர் பனித்து நிற்கிறது. சற்று நேரத்துக்குப் பின் தம்மைச் சுதாரித்துக் கொண்டு கூறுகிறார்:

"நான் ஹிந்துஸ்தானி இசையில் பயிற்சி பெற்றது உஸ்தாத் அப்துல் ரஹ்மான் கான் ஸாஹப் பிடம். 1970ம் ஆண்டில் ஒரு நாள் அவர் என்னை ஸ்ரீ தேசாயிடம் அழைத்துச் சென்றார். எனது இசையறிவையோ, பயிற்சியையோ சோதிக்காமல், 'நானே வந்து என்னைப் பார் - மகளே!' என்றார்.

'ஒரு பாட்டு....' என்று இழுத்தேன் நான்.

'வேண்டாம். குரு இன்னார் என்று தெரிந்த பின் சிஷ்யர்களின் தரத்தை எடை போட நான் யார்?' என்றார்.

மறுநாள் அவர் குறிப்பிட்ட நேரத்துக்குப் போனேன். பால் சந்திர பெண்டார்கரின் நகைச்சுவை நாடகமான 'சாபாஷ், வீர்பல்! சாபாஷ்!' என்னும் மேடை நாடகத்தில் என்னைப் பாட வைத்து விட்டார். அது மட்டுமின்றி குமார் கந்தர்வ என்னும் இசை மேதையோடு என்னை 'டூயட்' பாடவும் பணித்து விட்டார். 'குட்டி' படத்தில் 'போல் ரே பபீஹரா' பாட்டின் மூலம் என்னை உச்சாணிக் கிளைக்கே கொண்டு சென்றுவிட்டார்.

இன்று பல மொழிகளிலும் ஐந்நூறு பாடல்களுக்கு மேல் பாடிப் பெயர் எடுத்துள்ளேன் என்றால், அத்தனைக்கும் காரணம் அவரே!"

இப்படிக் கூறி மேஜை டிராயரிலிருந்து ஒரு கடிதத்தை எடுக்கிறார் வாணி ஜெயராம். அது வஸந்த தேசாய் 22-12-75 அன்று அவருக்கு எழுதிய கடிதம்; கடைசிக் கடிதம்.

அந்தக் கடிதத்தின் கடைசிப் பாராவைச் சுட்டிக் காட்டும்போது மீண்டும் வாணியின் கண்களில் நீர் திரையிடுகிறது.

'இறுதியாக, இத்தருணத்தை என் நல் வாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கப் பயன்படுத்திக் கொள்கிறேன். இனி வரும் ஆண்டுகளில் உன் புகழ் இன்னும் சிறந்து ஓங்குவதாக!' என்னும் பொருள்பட அக் கடிதம் முடிவடைகிறது.

"சரியாக ஐந்து ஆண்டுகள்! 22-12-70ல் என்னைப் பாட வைத்துப் பதிவு செய்தார். 22-12-75ல் என்னை வாழ்த்தி விடை பெற்றார். அவ்வளவுதான் நான் கொடுத்து


வைத்தது'' என்று கூறியவாறு விழி நீரைச் சுண்டி எறிகிறார் வாணி ஜெயராம்.

''ஸ்ரீ வஸந்த தேசாய் தெய்வ பக்தி மிக்கவர். அவருக்கு மெய்யான ஈடுபாடு பக்திப் பாடல்களில்தான். இசையில் தெய்வ சாந்நித்தியம் பெறலாம் என்று நம்பியதோடு மட்டுமின்றி நிரூபித்துமே காட்டியவர். பணம் காசுக்குத் துளியும் ஆசைப்படாமல் எல்லாச் சின்னஞ் சிறு கிராமங்களுக்கும் இட்டுச் சென்று அபங்கங்களும் பக்திப் பாடல்களும் பாடவைத்து மக்களைப் பக்தியில் நாட்டம் கொள்ளச் செய்து தம் பக்தர்களாகவே ஆக்கிக் கொண்டவர். இதனை உணர்ந்த மகாராஷ்டிர அரசு அவருக்கு ராஜ்ய இசை இயக்குநராகப் பதவியளித்து ஆயிரம் ரூபாய்க்கும் மேலாக மாத ஊதியம் அளிக்க முன் வந்தது. ஸ்ரீ தேஸாய் அந்தப் பதவியை ஏற்றார். மக்களுக்கு நல்வாழ்வு வழங்க உதவும் என்பதற்காக! ஊதியத்தை மறுத்தார். அந்தப் பணம் மக்கள் நல்வாழ்வுக்குப் பயன் படட்டும் என்பதற்காக.

''ஸ்ரீ தேசாய் சகல கலா வல்லவர். மற்போர்கூட அவருக்குக் கைவந்த கலை. பண்பிற் சிறந்தவர். பழகுவதற்கு இனியவர். அவருடைய பண்புக்கு ஓர் உதாரணம், நான் லதா மங்கேஷ்கரிடம் குறைபட்டுக் கொண்ட விஷயம். என் முன்னேற்றத்துக்கு லதா தடையா யிருப்பதாக நான் கருதினேன். இது அவர் காதில் விழுந்ததும், என்னை அழைத்துச் சொன்னார்: 'மகனே! என்னால் லதாவைப் பற்றி அப்படி நினைக்க முடியவில்லை. அவள் வரட்டும். நானே கேட்டு விடுகிறேன். மனத்துள் கறட்டோணானை விழுங்கிக் கொண்டிருப்பதுதான் உன் முன்னேற்றத்துக்கு ஊறு செய்வதாக முடியும். சிறி ஆற்றிக் கொண்டு விட்டால் கவலை இல்லை, பார்!'

''சுருங்கச் சொல்லப்போனால், யாருக்குமே தீங்கு நினைக்காத தங்க மனம் படைத்தவர். அவரும் ஸ்ரீ சாந்தாராமும் இணைந்து உருவாக்கிய படம் ஒன்று தோல்வியைத் தழுவி விட்டது. வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் நெல்லும் கல்லுமெனக் கலந்து வருவது தான் என்றாலும், அடுத்த படத்துக்கான ஏற்பாடு தொடங்கியபொழுது, 'சாந்தா

××××××××××××××××××××××



லேடி செக்ரட்டரி எப்படி இருக்க வேண்டும்?

ஓர் அழகிய பெண்ணைப் போல் தோற்றமளிக்க வேண்டும். ஒரு ஆணைப் போல யோசனை செய்ய வேண்டும். ஒரு வயதான ஸ்திரீயைப் போல் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். ஒரு நாய் போல உழைக்க வேண்டும். — பாபு - வீக் எண்ட்

சிரிப்புச் சங்கம்



பெங்களூரில் நகைச்சுவையை அனுபவிக்கவும், அபிவிருத்தி செய்யவும் 'HUMOUR CLUB UNLIMITED' என்ற பெயரில் நரசிம்மமூர்த்தி என்பவர் ஒரு கிளப் ஆரம்பித்திருக்கிறார். இதில் நிறைய உறுப்பினர்கள் சேர்ந்திருக்கிறார்கள். — ஜே. எஸ். - பாலி

××××××××××××××××××××××

ராம்! காலத்துக்கு ஏற்ற இசை எனக்கு அமைக்க வரவில்லை என்று தோன்றுகிறது. நீங்கள் லக்ஷ்மிகாந்த்–பியாரேலால் போன்றவர்களை வைத்துக் கொண்டு வெற்றி தேடிக் கொள்ளுங்கள்!' என்றார் தேசாய்.

'' 'எத்தனையோ படங்கள் நாம் இணைந்து எடுத்து வெற்றி கண்டிருக்கிறோம். உங்கள் இசையினால் படம் தோல்வி கண்டது என்பதை நான் ஏற்கத் தயாராயில்லை. என் திறனுமே என்னை ஏமாற்றி யிருக்கலாம் அல்லவா?' என்று கேட்டு மறுத்துவிட்டார் ஸ்ரீ சாந்தாராம்.

''தெய்வ பக்தியைப் போலவே தேசபக்தியிலும் ஸ்ரீ தேசாய் ஆர்வம் மிகக் கொண்டவர். நாட்டின் நலனுக்கு இருபது அம்சத் திட்டங்கள் பற்றிப் பாடப்பட்ட பாடல் ஒன்றுக்கு இசை அமைத்துக்கொடுத்துவிட்டுத் திரும்பியவரைத்தான் காலன் குரூரமாக உருச் சிதைத்து விட்டான். அதைக் கண்ணுற்றபொழுது எனக்கும் சாந்தாராமைப் போலத்தான் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ஆனால், 'நாம் அவனது கைப் பொம்மைகள். அவன் ஆட்டுவிக்கிறபடி ஆடவேண்டியவர்கள், உடைய வேண்டியவர்கள்!' என்ற தேசாயின் தத்துவப் பேச்சு கோபத்துக்கு அணைபோலியது.''

இசையும் பக்தியும் இழைந்து வாழ்ந்த ஸ்ரீ தேசாய் தம் வாழ்க்கையில் கிடைத்தற்கரிய பாக்கியம் ஒன்று கிடைத்ததை வாய்க்கு வாய் கூறிப் பெருமைப்பட்டுக் கொள்வது உண்டு. ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பெரியவர்கள் வையம் வாழ வாழ்த்தி சம்ஸ்கிருதத்திலே வழங்கிய 'மைத்ரீம் பஜத' சுலோகத்துக்கு இசை அமைத்து, அதை ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் இனிய குரலில் இசைக்க வைக்கும் பணி தமக்குக் கிடைத்ததை எண்ணிப் பரவசமுறுவார். பாரதத்தில் மட்டுமின்றிப் பாரெங்கிலுமே தமக்குப் புகழ் தேடித் தந்த இசை மூலம் நடமாடும் தெய்வத்துக்கும் சிறு பணி புரிந்து பேரருளை அல்லவா வஸந்த் தேசாயால் பெற முடிந்தது? எனவே, அவருடைய பூத உடல் மாய்ந்தாலும், புகழுடல் நிலைத்திருக்கக் கேட்பானேன்? பேட்டி: **ரா. வீ.**


உங்களுக்கு விருப்பமான ப்ரூ
இப்போழுது குறைந்த விலைக்கு
ரீ:பில் பாக்கெட்டில்
கிடைக்கிறது
200 கிராம்-(ஜாடியைவிட ஒரு ரூபாய் குறைவு)
50 கிராம்-(ஜாடியைவிட 50 பைசா குறைவு)
Refill Pack
Brooke Bond
BRU
INSTANT
CHICORY
Brooke Bond
BRU
INSTANT
BLEND OF COFFEE AND CHICORY
கெட்டியான
ஸ்ட்ராங்கான
ப்ரூ ருசி
சிறந்த காப்பியின் ருசி
OBM-4381A/3 TAM

பொன்னியின் புதல்வர்



சுந்தா

21. காந்திக்கு ஒரு கோயில்

நெஞ்சிலே நிறைந்தார்
எழுத்திலே எழுந்தார்
பணியிலே பதிந்தார்
நினைவிலே நிலைத்தார்

மா மணியைத் தோற்போமோ?

இந்த வேதனை வினா, கல்கித் தலையங்கம் ஒன்றின் தலைப்பு. நம் நாடு சுதந்திரம் அடைந்த ஆண்டின் இறுதியில் வெளியான கல்கி இதழில் அந்தத் தலையங்கம் வெளியாயிற்று.

நாளது 1947ம் வருஷத்தில் இந்தியா மகத்தான நன்மைகளை அடைந்தது; நினைக்கப் பயங்கரமான தீமைகளையும் அடைந்தது.

ஆயிரம் ஆண்டு அடிமைத்தனம் நீங்கி இவ்வருஷம் ஆகஸ்டு மாதம் 15ம் தேதி இந்தியா சுதந்திரம் அடைந்தது. அதே சமயத்தில் சென்ற நூறு வருஷங்களாக ஒன்றுபட்டிருந்த தேசம் பிளவுபட்டது.

''வந்தது சுதந்திரம்!'' என்று கோடிக்கணக்கான மக்கள் குதூகலமாக விழாக் கொண்டாடினார்கள். கொண்டாடிய இரண்டு தினங்களுக்குள்ளே, வடமேற்குப் பிரதேசத்திலிருந்து சொல்ல நாக்கூசும் செய்திகள் – எழுதப் பேனா நடுங்கும் செய்திகள் – வந்தன. வந்து, குதூகலத்தில் ஆழ்ந்திருந்த மக்களைத் துயரக் கடலில் ஆழ்க்கச் செய்தன.

நாற்பது லட்சம் மக்கள் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்தார்கள். பதிலுக்கு நாற்பது லட்சம் மக்கள் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்றார்கள். இரண்டு பகுதியிலும் எத்தனையோ ஆயிரம் பதினாயிரம் பேர் பயங்கரமாகக் கொல்லப்பட்டு, சிதைக்கப்பட்டு, யமனுலகம் சென்றார்கள்....

சாதாரணமாய் ஒரு தேசத்தார் சுதந்திரத்தைப் பெறுவதற்காகவும், சுதந்திரத்தைக் காப்பதற்காகவும் செய்யும் தியாகத்தில் பத்தில் ஒரு பங்குகூட நாம் செய்யவில்லை. அப்படியிருந்தும் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது என்றால், நமது அரும் பெரும் தலைவரான மகாத்மா காந்தியின் ஆத்ம சக்தியே அதற்குக் காரணம் என்று சொல்லலாம்.....

உலகம் வியக்கும்படியாகக் கிடைத்திருக்கும் அற்புத சுதந்திரத்தை நாம் காப்பாற்றிக் கொள்ளப் போகிறோமா? அல்லது கைசோர விடப் போகிறோமா? – என்பதுதான் அடுத்த 1948ம் ஆண்டின் இந்திய மக்கள் முன்னுள்ள முக்கிய பிரச்னை.

''ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த
மாமணியைத் தோற்போமோ?''...

[கல்கி இதழ் 28-12-47]

சுதந்திர ஆனந்த அலைகளின் ஆரவாரத்துடன் சுபமாய் முடியும்படியாக ''அலை ஓசை'' என்ற மகுடத்துடன், தேசிய இயக்கத்தையும் மகாத்மாவின் மகிமையையும் பின்னணியாகக்



○ சொல்லில் அடங்குவதில்லை; நினைவுக்குள் நிறைவதில்லை; கற்பனைக்கு எட்டுவதில்லை - காந்தி மகாத்மாவின் பெருமை.

○ காந்தி மண்டபத்தில் பதிக்கப்பெற்றுள்ள செப்பேடு — காரியதரிசி ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) என்பதாகவும் அவர் காலமானபின் டாக்டர் பி. வி. செரியன் அப்பொறுப்பை ஏற்றதையும் குறிப்பிடுகிறது.





கொண்டு, ஒரு நாவல் எழுதுவதற்குக் கல்கி திட்டம் இட்டிருந்தார். ஒரு கற்பனைக் கப்பலாக அத்திட்டம் அவருடைய அகக் கடலில் விரைந்து கொண்டிருக்கையில், அந்தச் சுதந்திர அலைகளின் ஆனந்த ஓசையுடன் பயங்கர அலைகளின் குமுறலும், அவல அலைகளின் ஓலமும் சேர்ந்து கொண்டன.


புத்தாண்டின் மூன்றும் மாதத்தில் ஒரு தொடர்கதையாய் ''அலை ஓசை'' தொடங்கும் என்று, முதல் மாதத்தில் கல்கி விளம்பரம் வெளியிட்டார். ஜனவரி 25ம் தேதிய கல்கி இதழில் அந்த விளம்பரம் வந்தது. அதற்கு ஐந்தாம் நாள் மாலை, தியாகராஜ ஆராதனையை முன்னிட்டுத் திருவையாற்றிலிருந்து வானொலி மூலம் வந்த இசை அலைகளைக் கல்கி அனுபவித்துக் கொண்டிருக்கையில், திடீரென அவை ஒய்ந்து உலகம் முழுவதிலும் ஒவ்வொரு நெஞ்சிலும் சோக அலைகளை எழுப்பிய செய்தி, மகாத்மா காந்தி கொலையுண்டு உயிர் நீத்தார் என்ற செய்தி ஒலிபரப்பாயிற்று. அதைக் கேட்டுப் பலரைப் போலவே கல்கியும் செயலற்றுப் போனார். ஆயினும், கடமை உணர்ச்சி மேலோங்க, அந்நிலையிலிருந்து விடுபட்டு வீட்டிலிருந்து அலுவலகத்துக்கு விரைந்து, ஓடிக் கொண்டிருந்த அச்சுப் பொறியை நிறுத்தி ஒரு பக்கத்தைக் கலைக்கச் செய்தார். அவசர அவசரமாகச் சில வாக்கியங்களை எழுதி, அண்ணலின் உருவப்படத்தின் கீழே அவற்றை அந்தப் பக்கத்தில் அச்சடிக்கச் செய்தார். பிப்ரவரி முதல் தேதியிட்ட அந்த இதழின் பெரும்பாலான பிரதிகள் ஏற்கனவே அச்சாகி வெளியூர்களுக்குச் சென்று விட்டிருந்தன. ஆகவே, சென்னை நகர விநியோகத்துக்கான பிரதிகளில் மட்டும் அந்த வாக்கியங்கள் இடம் பெற்றன :

பாரத நாடு வாழப் பிறந்த மகாத்மா காந்தியின் உலக வாழ்க்கை, 30-1-48ல், இறுதியான மகா தியாகத்தில் முடிவுற்றது. அன்று மாலை பிரார்த்தனைக்குச் செல்லும் போது அம்மகாபுருஷர் யாரோ ஒரு கொடும் பாதகனால் சுடப்பட்டு மண்ணுடலை நீத்துத் தெய்வமானார். கோடிக் கணக்கான மக்கள் கண்ணீர் வெள்ளம் பெருக்கி அந்த மகானுடைய தெய்விக வடிவத்தை இதயக் கோயிலிலே வைத்துப் பூஜிக்கிறார்கள்.

மூன்றே வாக்கியங்கள் ! நெஞ்சின் கொதி நீர் கண்களை மறைக்க, உடம்பின் பதற்றம் விரல்களை நடுக்கிட வரைந்த வாக்கியங்கள் !

இவற்றை எழுதியபின், துல்லியமான செய்திகள், விரிவான விவரங்கள், துக்க

○ ஸ்தூபிக்குப் பதிலாக ஒரு பிரார்த்தனை மண்டபமே மகாத்மாவுக்கு ஏற்ற நினைவுச் சின்னம் என்ற ராஜாஜியின் யோசனையை மறுப்பின்றி ஏற்றார் கல்கி.





''உங்கள் மிருகக்காட்சிச்சாலையில் எத்தனை பறவைகள் மிருகங்கள் உள்ளன?'' என்று கேட்டபோது, வாச்மேன் 30 தலை, 100 கால் என்றான். பறவை எவ்வளவு? மிருகம் எவ்வளவு?

விடை: பறவை – 10 (× 2 = 20) மிருகம் – 20 (× 4 = 80)

— ப்ளேபாய் - பாபு

மொழிகள் முதலியன மேலும் மேலும் வந்தவண்ணம் இருந்தன. அவற்றை அறிந்து அடுத்த இதழில் கல்கி எழுதிய அஞ்சலிக் கட்டுரையில், அந்த மூன்று வாக்கியங்கள் மூன்று பக்கங்களில் பெருகி மோதின. 'சத்தியம் செத்ததோ' என்று புலம்பிய அக்கட்டுரை, உடன் கால வாசகர்களின் மனத்தில் பேரலைகளாகச் சோகத்தை எழுப்பிற்று. எப்படி என்பதை, இத்தனை நாள் ஆன பின்பும், சில மாதிரி வாக்கியங்கள் மூலம் ஓரளவு உணரலாம் :

கண்களே! கண்ணீர் பெருக்குங்கள்! ஒரு துளிக் கண்ணீர் பாக்கியுள்ள வரையில் கண்ணீர் பெருக்குங்கள்! கருணாமூர்த்தியான காந்திமகானின் புனிதத் திருமுகத்தை நீங்கள் இனி காணமாட்டீர்கள்! அவருடைய தாமிர வர்ணத் திருமேனியைப் பார்க்க மாட்டீர்கள்!

நெஞ்சே! ஏன் துடிக்கிறாய்? இதயமே! ஏன் இப்படித் தவிக்கிறாய்? ''ஆத்மாவுக்கு மரணம் இல்லை'' என்பதை மறந்துவிட்டாயோ? ஆத்மாவுக்கு மரணமில்லை என்றால் மகாத்மாவுக்கு மரணம் உண்டோ?

விரல்களே! ஏன் இப்படி நடுங்குகிறீர்கள்? அவருடைய திருநாமத்தை எத்தனையோ ஆயிரம் தடவை எழுதியிருக்கிறீர்களே? இப்பொழுது என்ன தயக்கம்? ஏன் நடுக்கம்? அந்தக் கொலை பாதகனின் துப்பாக்கி பிடித்த கை நடுங்கவில்லையே? அந்தச் சண்டாளனின் விரல்கள் தடுமாறவில்லையே? சரியாகக் குறி பார்த்துச் சுட்டானே? அஹிம்சா மூர்த்தியின் அருகில் நின்று மார்புக்கு நேரே இலக்கு வைத்துச் சுட்டானே? யமனும் செய்ய நடுங்கக்கூடிய காரியத்தை அந்த மனித உருக் கொண்ட அரக்கன் செய்துவிட்டானே? அதைப் பற்றி எழுதுவதற்கு நீங்கள் ஏன் நடுங்க வேண்டும்?

சத்தியமே! நீ செத்துப் போனாயோ? தர்மமே! நீ மாண்டு போனாயோ? கடவுளே! நீ என்ன செய்கிறாய்? எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு சாட்சியாக விளங்குகிறாயோ?...

தீர்க்கதரிசிகள், அவதார புருஷர்களின் கூட்டத்திலே மகாத்மா காந்தி ஒரு தனிப்பட்ட உன்னத ஸ்தானத்தை அடைந்தவர். உலகிலே இதற்கு முன்னால் தோன்றிய எந்த மகாபுருஷரும் தீர்க்கதரிசியும் இவ்வளவு பெருந்திரளான மக்களால் போற்றப்பட்டதில்லை; இவ்வளவு லட்சக் கணக்கான பக்தியுள்ள சீடர்களைப் பெற்றதில்லை. மரணம் அடைந்தவுடனே இவ்வளவு கோடானு கோடி மக்களின் இதயத்தில் கோயில் கொண்டதும் கிடையாது.

அத்தகைய மகாபுருஷர் இந்தப் புண்ணிய பூமியின் மண்ணிலே நடந்து சென்ற நாளிலே நாமும் வாழக் கொடுத்து வைத்திருந்தோம். இது நமது மகத்தான பாக்கியம். பூர்வ ஜன்மத்துப் புண்ணியம்.

அந்த மகாபுருஷரின் மனத்துக்குச் சொல்ல முடியாத வேதனை தந்தோம். நம்முடைய குற்றங்களுக்காகப் பலமுறை உண்ணாவிரதமிருக்கப் பார்த்திருந்தோம். கடைசியில், ஒரு கொடிய ராட்சதன் கையால் அவர் சுடப்பட்டுத் தரையில் சாய்ந்த செய்தியைக் கேட்க உயிரோடிருந்தோம். இவையெல்லாம் நமது பூர்வ ஜன்மத்துப் பாவத்தினால் விளைந்த விளைவுகள்.

ஆகா! மகாத்மா இறந்த செய்தி கேட்டதும் தாங்களும் விழுந்து இறந்த ஸ்திரீகளும் புருஷர்களும் புண்யாத்மாக்கள். காந்திஜி போகும் பாதையிலேயே அவர்களும் விண்ணுலகத்துக்குப் போவார்கள் அன்றோ?...

மகாத்மாவை இழந்துவிட்ட நமது வாழ்க்கையை நாலாபுறமும் அந்தகாரம் சூழ்ந்துதானிருக்கிறது. எனினும் அந்த இருளினிடையே நமக்கு வழி காட்ட ஒளி ஒன்று தோன்றாமற் போகவில்லை. அன்பே தகளியாகவும், அஹிம்சையே நெய்யாகவும் என்புருகும் தியாகமே இடுதிரியாகவும் கொண்டு ஓர் அமர தீபத்தை, அழியாத சத்திய விளக்கை, மகாத்மா காந்தி ஏற்றி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். அந்தச் சத்திய தீபத்தைத் தினம் தினம் போற்றி வழிபடுவோம்; காற்றும் புயலும் அதை அணைத்துவிடாமல் பாதுகாப்போம். *(கல்கி 8–2–48)*

இந்த அஞ்சலிக் கட்டுரை வெளியான இதழிலேயே ''மாந்தருக்குள் ஒரு தெய்வம்'' என்ற மகுடத்துடன் மகாத்மாவின் வாழ்க்கை வரலாற்றைக் கல்கி எழுதத் தொடங்கினார். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அந்த வரலாற்றுத் தொடர் ஓடி, அண்ணலின் எரவாடா சிறைவாச கட்டத்தில், இரண்டாம் பாகத்துடன் நின்று போயிற்று — மொத்தம் 106 அத்தியாயங்கள். மகாத்மாவின் மகாத்தியாகம் வரை அதைக் கொண்டு போய் நிறைவு செய்ய, இன்னும் மூன்று பாகங்களாவது எழுதும்படி இருந்திருக்கும். ''மீண்டும் உசிதமான சமயத்தில் மூன்றாம் பாகம் ஆரம்பிக்கப்படும்'' என்று கல்கி அறிவித்தார். ஆனால் அந்த உசித



வின்ஸ்டன் சர்ச்சிலிடம் ஒரு பழைய மஞ்சள் நிற ஆஸ்டின் கார் இருந்தது. அதன்மீது அவருக்கு எவ்வளவு ஆசையோ, அவ்வளவு வெறுப்பு அவரது மனைவிக்கு. ஒருநாள் அவர் மனைவி அந்தக் காரைப் பழைய கார் வியாபாரியிடம் 40 பவுனுக்கு விற்று விட்டார். இதைக் கேள்விப்பட்டதும் சர்ச்சிலுக்குக் கோபம் வந்துவிட்டது. காரைத் திரும்பி வாங்கி வர அந்தக் கடைக்குப் போனார். கார் இருந்தது. விலை கேட்டார். '100 பவுன்' என்றார் கடைக்காரர்.

''இப்பொழுதுதானே 40 பவுனுக்கு வாங்கினீர்களாம்'' என்றார் சர்ச்சில்.

''ஆமாம். ஆனால் இது பிரிட்டிஷ் பிரதமர் உபயோகித்த கார் ஆயிற்றே'' என்றாராம் கடைக்காரர்.

பாபு - வீக் எண்ட்

மான சமயம் வரவேயில்லை. உழைப்புக்கு அஞ்சாத கல்கியே அந்த வரலாற்றைத் தொடர்ந்து எழுதுவதற்கு எவ்வளவு ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதை எண்ணி மலைத்துவிட்டார் போலும்.

காந்தியின் இந்த வாழ்க்கை வரலாறு இயல்பாக முடிந்திருக்க வேண்டிய கட்டத்தில், காந்திய நாவலான 'அலை ஓசை' முடிவடைகிறது. அறிவித்தபடியே 1948 மார்ச் 28ம் தேதிய கல்கி இதழில் தொடங்கி, பதினெட்டு மாத காலம் ஓடி நிறைவு பெற்ற அந்தப் பெருங் கதை, வாழ்க்கைக் கடலின் வித விதத் தட்ப வெட்பக் காற்று நிலைகளின் படி விதம் விதமான ஓசைகளை எழுப்புகிறது ; உச்ச கட்டத்தில் மகாத்மாவின் மகா தியாகம் என்ற துயரப் பேரோசை.

அந்த மகாத் தியாகம் பற்றிய அதிர்ச்சிச் செய்தியை எப்படிக் கல்கி சூரியாவை அறியச் செய்கிறார் என்பதையும், அவன் எப்படி சீதாவை அறியச் செய்கிறான் என்பதையும் வாசகர்களுக்கு அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அண்ணலின் அந்திம யாத்திரையைக் கண்ட போது, சீதா அனுபவித்த உணர்ச்சிகளை எப்படி ஆசிரியர் வர்ணித்துள்ளார் என்பதை மட்டும் சிறிது ஞாபகப் படுத்தினால் போதும் :

புஷ்பங்களைக் கொட்டி அலங்கரித்திருந்த மோட்டார் ரதத்தில் மகாத்மாவின் திருமேனி கிடந்த நிலையையும், அவருடைய திருமுகத்தின் தோற்றத்தையும், பக்கத்தில் மாபெரும் தலைவர்கள் உட்கார்ந்திருந்த காட்சியையும் சுற்றிலும் நின்ற மக்கள் கூட்டத்தின் சோக முகங்களையும், கண்ணீரையும் கம்பலையையும் பார்த்துச் சீதாவுக்கு விஷயம் விளங்கி விட்டது.

லட்சக் கணக்கான ஜனங்கள் திரண்டிருந்த அந்தக் கூட்டத்தில் காது செவிடுபடும்படியான ஓலம் எழுந்து கொண்டிருந்தது. சீதாவின் காதில் இடை விடாமல் கேட்டுக்கொண்டிருந்த அலை ஓசையானது ஜன சமுத்திரத்தின் இரைச்சலோடு ஒன்றாகக் கலந்தது... பின் கழுத்துக்கு மேலே இரு செவிகளுக்கும் மத்தியில் ஏதோ ஒரு நரம்பு, வீணையின் மந்திரத் தந்தி அறுந்தாற்போல் படீரென்று வெடித்து அறுந்தது. அந்த ஓசை மேற்கூறிய இரு வகைப்பட்ட அலைஓசைகளையும் பிளந்து கொண்டு சென்று அவளுடைய மண்டைக் குள்ளேயே பாய்ந்தது....

பிற்பகல் சுமார் நாலு மணிக்கு யமுனை நதிக் 'கரைக்கு வந்து ஊர்வலம் முடிந்தது. சிதையும் அடுக்கப்பட்டது. இறுதிக் கிரியைகள் நடைபெற்றன...

சிதையில் நெருப்பு வைத்தாகி விட்டது! செந்தழலின் கொழுந்து அதோ கிளம்பி வானை எட்டப் பார்த்தது. ஏழு கடல்களும் கொந்தளித்தாற் போன்ற ஒரு பெரும் ஓலக் குரல் அப்பெருங் கூட்டத்தில் எழுந்தது. அதற்கு மேல் சீதாவினால் அங்கே நிற்க முடியவில்லை....

நடந்து, நடந்து, நடந்து சீதா போய்க் கொண்டிருந்தாள். எங்கே போகிறோம் என்று தெரியாமல் சீதா போய்க் கொண்டிருந்தாள். கடைசியாக ஓரிடத்துக்கு வந்ததும் கால் ரொம்ப வலிக்கிறதென்று தெரிந்தது. உடம்பு தள்ளாடிற்று. காலையிலிருந்து உணவு இல்லையல்லவா? ஒரு பங்களாவின் வெளி மதில் சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றாள். வீட்டுக்குள்ளே யிருந்து கீதம் ஒன்று கேட்டது. வானொலியின் மூலம் வந்த கீதம்! உள்ளத்தை உருக்கிக் கண்ணீர் வருவிக்கும் கீதம்! உடலையும் உயிரையும் நெகிழச் செய்யும் கீதம்!

''ஹரி! தும் ஹரோ ஜனகீ பீர!''

(ஹரி! மக்களின் துன்பத்தைப் போக்குவாயாக!)

ஆகா! இது என்ன நமக்குக் காது கேட்கிறதே! பாட்டுக் கேட்க முடிகிறதே! அமுத வெள்ளத்தைப் போல் காதில் பாய்கிறதே! இத்தனை நாள் கேட்ட அலைஓசை எங்கே போயிற்று! அந்த இடைவிடாத பயங்கரச் சத்தம் எப்படி மறைந்தது!

காந்தி அடிகளே! கருணை நிதியே! தங்களுடைய மரணத்திலே எனக்கு வாழ்வு அளித்தீர்களோ!

இது நாவலின் உச்ச கட்டமேயன்றி இறுதிக் கட்டம் அல்ல. அடுத்து வரும் கடைசி ஏழு அத்தியாயங்களில், சீதாவின் மரணம், தாரிணியின் சிதைந்த தோற்றம், அவள் மீது சூரியா கொள்ளும் 'தெய்வீகக் காதல்', அவளை அவனே 'மணக்கிறான் என்று எல்லா

ஒரே கட்டுரைக்கு அதிகப் பணம் வாங்கியவர் எர்னஸ்ட் ஹெமிங்வே. மாட்டுச் சண்டை பற்றி எழுதிய 2000 வார்த்தை கட்டுரைக்குப் பத்தாயிரம் பவுன்கள் வாங்கினாராம்.

— டிட்பிட்ஸ் - 'பாபு'

ரும் எண்ணியிருக்கையில் ராகவன் மணக்கிறான் என்ற திருப்பம் —இப்படி சுருதி பேத, சுவை மாற்ற அலைகள்.

''அலை ஓசை'' கதை ஓய்கிறது ; ஆனால் அது எழுப்பும் உணர்ச்சி அலைகள் ஓய்வதில்லை.

இந்த நாவலைத் தமது ஆசைப் படைப்பாகவும் சிறப்புச் சாதனையாகவும் கல்கி கருதினார் என்பது, புத்தக வடிவில் இது வந்த போது அவர் எழுதிய முன்னுரையிலிருந்து தெரிகிறது. அவரே சுட்டிக்காட்டியுள்ள இதன் சிறப்புக்களில் ஒன்று, இதில் பொதிந்துள்ள காந்திய மகிமை :

> காந்தி மகாத்மாவினுடைய ஆத்ம சக்தி கோடானு கோடி மக்களின் உள்ளங்களில் ஆட்சி புரிந்தது. மக்களின் வெளி வாழ்க்கையிலும் உள்ளப் போக்கிலும் எத்தனை எத்தனையோ புரட்சிகள் நடந்தன. அவையெல்லாம் ''அலை ஓசை''க்குப் பின்னணி சங்கீதமாய்த் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதை நேயர்கள் இந்நூலில் காண்பார்கள்.

இந்த நாவலும் ''மாந்தருக்குள் ஒரு தெய்வம்'' வரலாறும் ஒரே சமயத்தில் இரு தொடர்கதைகளாய் வெளியாகிக் கொண்டிருக்கையில், மகாத்மாவின் அஸ்திக் கலசம் ஒன்றைத் தமது அலுவலக அறை ஒன்றில் கல்கி வைத்திருந்து வழிபட்டுக் கொண்டிருந்தார். வெள்ளிக்கிழமை தோறும், அந்தக் கலசத்தின் முன், தமது ஆசிரியர் குழாமும் மற்றச் சிப்பந்திகளும் சூழக் கல்கி அமர்ந்து பஜனை பாடி அஞ்சலி செய்தார். அந்தப் பூஜை அறைப் பாதுகாப்பும் வழிபாட்டு ஏற்பாடுகளும் உதவி ஆசிரியர் பகீரதனின் பொறுப்பில் இருந்தன. ''மகாத்மாவின் நினைவை எங்கள் ஆசிரியர் அவ்வளவு பக்தியுடன் போற்றியதைக் கண்டு நாங்கள் சிலிர்த்துப் போனோம்'' என்று, உணர்ச்சியுடன் கல்கி பஜனை செய்த காட்சியை நினைவுகூர்ந்து பகீரதன் சொல்கிறார்.

ஏற்கனவே சொன்னபடி, காந்தி மகான் சில நாட்கள் தங்கி இருந்ததன் மூலம் பெருமை கொண்டிருந்த கட்டடம், கல்கி அலுவலகம். மாந்தருக்குள் ஒரு தெய்வமாய் மகாத்மா உலவி மறைந்த பிறகு, அவருடைய மானிட உருவின் சின்னம் ஒன்று நிலையம் கொண்டதன் மூலம், அந்தக் கட்டடம் அப்பெருமையுடன் புனிதமும் அடைந்தது. (ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் வசமிருந்து கல்கியின் பொறுப்புக்கு மாற்றலாகி வந்த கலசம் அது. சுமார் ஆறு மாதங்களுக்குப் பிறகு அது ஹிந்திப் பிரசார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது.)

அந்த அஞ்சலி நடந்து கொண்டிருக்கையில், தமிழ் நாட்டின் தலைநகரில் மகாத்மாவுக்கு ஒரு நினைவாலயம் நிறுவ வேண்டும் என்ற ஓர் ஆசை கல்கியின் மனத்தில் தோன்றி வளர்ந்தது. முன்பு பாரதியாருக்கு எட்டயபுரத்தில் நினைவு மண்டபம் கட்டி முடித்ததை, தெய்வச் செயலாய்த் தமக்கு வாய்த்த நற்பணியாய் அவர் கருதினார். இப்போதோ, அண்ணலுக்கு ஆலயம் எழுப்பும் திருப்பணியை, தாமே தம் செயலாய்க் கொண்டு, அதை நிறைவேற்றத் தீர்மானித்தார்.

சென்னைக் கடலோரத்தில் வானளாவி நிற்கும் வண்ண ஸ்தூபி ஒன்றைக் கற்பனையில் கண்டார் கல்கி; அந்தக் கற்பனைக் காட்சியை ஓவியர் மணியத்திடம் வர்ணித்துச் சொல்லி, ஒரு சித்திரமாய் வரையச் செய்தார் ; தேசத் தந்தை வானுலகை அடைந்ததற்கு அடுத்த காந்தி ஜயந்தி மலரில் அதை அவர் வெளியிட்டு, அத்தகைய உன்னத சின்னமே மகாத்மாவின் மகிமைக்கு ஏற்றதாகும் என அறிவித்தார். அதற்கும் அடுத்த ஜயந்தி மலரில், அந்த உத்தேசச் சின்னத்தை வர்ணித்து எழுதினார் : மகாத்மா வாழ்ந்த வருடங்களைக் குறிக்கும் வகையில், அந்தக் கீர்த்திக் கம்பம் எழுபத்து ஒன்பது அடி உயரமாய் இருக்கும். அதன் அடிப்பாகத்தில் நீலக் கடலை நோக்கியவாறு கருணாமூர்த்தி காட்சி அளிப்பார். அண்ணல் இம்மண்ணுலகில் தோன்றிய நாளிலும், விண்ணுலகை அடைந்த நாளிலும், ஆயிரம் ஆயிரம் அடியார்கள் அதைச் சூழ்ந்து நின்று அஞ்சலி செய்வார்கள். எல்லா நாட்களிலுமே நூற்றுக்கணக்கான மக்கள் அதை வலம் வந்து வணங்குவார்கள். அல்லும் பகலும் எக்கணமும், ஓயாக் கடலோசை காந்திப் புகழோசையாய் ஒலித்துக் கொண்டிருக்கும்.

கல்கியின் ஆசைக் கனவான அந்த ஸ்தூபித் திட்டத்துக்கு, நண்பர் சதாசிவம் ஆதரவு அளித்து, வழக்கம் போலவே கல்கியும் தாமும் சேர்ந்த ஒரு

கூட்டுப் பணியாகவே அதை நிறை வேற்ற முன் வந்து, எடுப்பான ஆயத் தங்களில் முனைந்தார். அப்போது சென் னைப் பிரதம மந்திரியாய் இருந்த ஓமந் தூர் ரெட்டியாருக்கும் அந்தத் திட்டம் உவப்பாய் இருந்தது. அவரை அடுத்து அப்பதவிக்கு வந்த பி. எஸ். குமார சாமி ராஜாவும் பொதுப்பணித் துறை மந்திரி எம். பக்தவத்ஸலமும் அதை ஆமோதித்தார்கள். எல்லாருமாய்ச் சேர்ந்து, பல்கலைக் கழக கட்டட வரிசைக்கு எதிரே உள்ள இடத்தைக் காந்தி ஸ்தூபியை நிறுவுவதற்கு ஏற்ற தாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

சொல்லில் அடங்குவதில்லை; நினைவுக்குள் நிற்பதில்லை; கற்பனைக்கு எட்டுவதில்லை— காந்தி மகாத்மாவின் பெருமை.

கவிதை திகைக்கிறது: காவியம் திணறு கிறது: கலைகள் தலைவணங்குகின்றன — காந்தி அடிகளின் சரிதத்தை எண்ணி.

இமயத்தைக் காட்டிலும் உயர்ந்து நின்ற வர்; கங்கையைக் காட்டிலும் புனிதமானவர்; சூரியனை விடத் தேஜஸ் படைத்தவர்; தாயைக் காட்டிலும் கருணை உள்ளவர்; கடவுளைப் போல நம்மைக் காக்க வந்தவர்; சத்தியத் தைப் போலச் சலியாது நின்றவர்; உலகம் போற்றும் உத்தமர்.

இந்த வாக்கியங்களுடன் தொடங் கிய சிறப்புக் கட்டுரை ஒன்றை, 1949 காந்தி ஜயந்தி மலரில் கல்கி வெளி யிட்டு, அந்த உத்தமருக்கான நினைவுச் சின்னத் திருப்பணிக்கு மக்களின் காணிக்கையை வேண்டினார். அதற்கு இணங்க, முன்பு பாரதி மண்டபநிதிக்கு வந்தது போல — அதைவிட விரைவாக வும் அதிகமாகவும் — நன்கொடைகள் வந்து குவியலாயின.

அண்மையில் கஸ்தூரிபாய் நினைவு நிதிக்காக இசை நிகழ்ச்சிகள் மூலம் பெருந் தொகைகளைத் திரட்டிக் கொடுத்திருந்த எம். எஸ். சுப்புலக்ஷ்மி, அந்தப் புனிதவதியுடன் விண்ணுலகில் சேர்ந்து கொண்ட மகானின் அஞ்சலி நிதிக்காகவும் ஆயிரம் ஆயிரமாகச் சேர்த்துக் கொடுத்தார். இன்னும் எத் தனையோ இசைக் கலைஞர்களும் நாட கக் கலைஞர்களும் கொடுத்தார்கள்; வெவ்வேறு சங்கங்களும் சபைகளும் கொடுத்தன. சென்னை நகரசபையின் ஐயாயிரம் ரூபாய் நன்கொடை சிறப் பாய்க் குறிப்பிடத்தக்கது.

நிதி மிகுந்தவர் குறைவாய்ப் பணம் கொடுத்தால், ''இவ்வளவுதான் நீங்கள் கொடுப்பதா?'' என்று கல்கி கேட்டுக் கூடு தலாய்க் கறந்து விடுவார். நிதி குறைந்த வர், காந்தி மீதான பக்தியினாலோ கல்கி மீதான அன்பினாலோ, சக்திக்கு மிஞ்சி அதிகமாய்க் கொடுத்தால், ''இவ் வளவு வேண்டியதில்லை'' என்று சொல் லிக் குறைத்து வாங்கிக் கொள்வார். எதிர் வீட்டுச் சமுசாரி ஒருவரிடமிருந்து அவ்வாறு கல்கி குறைத்து வாங்கிக் கொண்ட விவரத்தை ருக்மிணி அம் மாள் தெரிவித்தார்.

''பல துளி பெரு வெள்ளமாகப் பெருகட்டும்'' என்பதாக, முதன் முதல் விடுத்த நிதிக் கோரிக்கை விண் ணப்பத்தில் கல்கி கூறியிருந்தார். அப் படிப் பெருக்கிக் கொடுப்பதில், அக் காலத்தில் ஒரு பிரபல சினிமாப் பத்





"என் பெண் கல்யாணத்துக்கு டேபிள் லைட் பிரஸண்ட் செய்தீர்களே...!"

"நன்றாக எரிகிறதா?"

"ஓ! தொட்டால் போதும் தூக்கி எறிகிறது."

திரிகையாய் நடந்து வந்த "குண்டூசி"யின் ஆசிரியர், கே. ராதாகிருஷ்ணன் ஈடுபட்டார்; விற்பனையான தமது பத்திரிகையின் ஒவ்வொரு பிரதிக்கும் காலணா வீதம் கணக்குப் பண்ணிக் கணிசமான தொகை ஒன்றை உதவினார். அவருடைய ஆர்வத்தைக் கண்ட கல்கி, யோகாசன நிபுணர் குமாரசாமியின் காரை அவருடைய உபயோகத்துக்கு உதவச் செய்து, சினிமா உலகப் புள்ளிகளிடமிருந்தெல்லாம் பணம் பிரித்து வரச் செய்தார்.

இதைப் போன்ற பல விவரங்களைப் பத்தி பத்தியாய்த் தமது பத்திரிகையில் கல்கி எழுதி, பலரும் போட்டி போட்டுக் கொண்டு நிதி திரட்டி அனுப்பும்படி செய்தார். எம். எல். வசந்தகுமாரியின் இசை நிகழ்ச்சி ஒன்றின் வசூலை; திருவல்லிக்கேணி இந்து இளைஞர் சங்கத்தார் வழங்கியதைக் கல்கி குறிப்பிடுகையில், "ஸ்தூபி நிதியின் பொக்கிஷதாரரான கனம் சிவசண்முகம் பிள்ளையையும் காரியதரிசியையும் அவர்கள் கச்சேரிக்கு வருந்தி அழைத்துக் காணிக்கை சமர்ப்பித்தார்கள்" என்று எழுதினார். இந்த வாக்கியத்தில் "காரியதரிசி" என்பதாகத் தன்மையில் அல்லாமல் படர்க்கையில் தம்மைக் கல்கி சொல்லிக் கொண்டது கவனிக்கத் தக்கது. அந்த ஸ்தூபி சம்பந்தமான பல கட்டுரைகள் குறிப்புக்கள் எதிலும், தம் பெயரைப் போட்டுக் கொள்ள வில்லை அவர். (செயலாளர் என்ற பதவிப் பெயருடன் மட்டுமே இலங்கி, அந்தப் பெயரின் முழுப் பொருளுக்கு எடுத்துக்காட்டாக முழு ஆர்வத்துடன் இயங்கிய அவருடைய நற்பெயர் உரியதோர் இடத்தில் பின்னர் பிறரால் பொறிக்கப் பட்டது.)

கல்கியின் கருத்திலே காந்தி ஸ்தூபி தோன்றியது முதல், அதற்கென அவர் எடுத்த முயற்சிகளும் செய்த காரியங்களும் எத்தனை எத்தனையோ! சதாசிவத்தின் துணையுடன் மற்றும் பலருடைய துணையையும், பிற பத்திரிகைகளின் உதவியையும் அவர் நாடிப் பெற்றது, சென்னையிலும் வெளி ஊர்களிலும் அதன் நிதிக்கென வசூல் குழுக்களை அமைத்தது, வெவ்வேறு தலைவர்கள் நிபுணர்களுடன் ஆலோசனை கலந்தது, வெகுவாகப் பயணப் போக்குவரத்தும் கடிதப் போக்குவரத்தும் நடத்தியது— இவைகளைப் பற்றி விவரமாய்ச் சொல்ல வேண்டியதே இல்லை. இவற்றின் வீச்சையும் விரிவையும் இறுதிப் பலனிலிருந்தே மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

காந்தி ஸ்தூபி நிதி ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு மேல் பெருகி, அந்தச் சின்னத்தை நிறுவுவதற்குக் கல்கி ஆயத்தம் செய்து கொண்டிருந்த போது, அந்த ஸ்தூபித் திட்டமே வேறொன்றாக மாறி விட்டது. நாட்டின் அரசியல் மாறுதல்களில் ஒன்றாக, 1952 ஏப்ரல் மாதத்தில், சென்னை மாகாண முதல் அமைச்சராய்ப் பதவி ஏற்ற ராஜாஜி, ஸ்தூபிக்குப் பதிலாக ஒரு பிரார்த்தனை மண்டபமே மகாத்மாவுக்கு ஏற்ற நினைவுச் சின்னமாய் இருக்கும் என்று யோசனை கூறினார். மறுப்பின்றி அந்த யோசனையைக் கல்கி ஏற்று, தமது கடலோர ஸ்தூபிக் கனவை, கோபுரம் வைத்த ஒரு மணி மண்டபக் கனவாக மாற்றிக் கொண்டு, அதை நனவாக்குவதில் புது ஊக்கத்துடன் ஈடுபட்டார்.

அப்போது கவர்னராய் இருந்த ஸ்ரீபிரகாசாவும் அந்த யோசனையை ஆமோதித்து, கிண்டியில் உள்ள ராஜ்பவன் தோட்டத்திலேயே அந்த மண்டபத்தைக் கட்டலாம் என்று சொன்னார். அதன்படியே அங்கே பத்து ஏக்கர் நிலத்தை அரசின் தானமாக ராஜாஜி வழங்கினார். அந்த நிலத்தைத் தேர்ந்தெடுப்பதற்காகப் புதர்களிடையே — சேற்றிலும் சகதியிலும் கல்கி அலைந்த அலைச்சலை, அவருடன்கூட அலைந்த பகீரதன், அவர் எடுத்துக் கொண்ட சிரமத்துக்கும் அக்கறைக்கும் ஓர் உதாரணமாய்ச் சொல்கிறார்.

1953 அக்டோபர் 17ம் தேதி, விஜயதசமி நன்னாளின் காலையில், காந்தி மண்டப மங்களத் துவக்கவிழா நடை பெற்றது. மண்டபத்துக்கும்

கோபுரத்துக்கும் அடிக் கற்களைப் பாவும் பெருமை கவர்னர் ஸ்ரீபிரகாசாவுக்கு வாய்த்தது. அந்தப் பெருமையுடன் அவர் விலகிக் கொள்ளாமல், மண்டப நிர்மாணிப்பைத் தமது மேற்பார்வையில் ஏற்றுக் கொண்டார். அடிக்கடி கவர்னர் மாளிகைக்குக் கல்கி சென்று, தாம் மேலும் திரட்டிய நிதியைச் சேர்ப்பித்துக் கொண்டும், தேவையான உதவிகளைச் செய்து கொண்டும் இருந்தார். ஒவ்வொரு சமயமும், கவர்னருடனோ தனியாகவோ மண்டபத் திருப்பணி நடக்கும் இடத்துக்கு அவர் சென்று, அங்கே நடைபெறும் வேலைகளைப் பார்த்து மகிழ்வது வழக்கம்.

மண்டபம் கட்டி முடிந்ததும் அது எவ்வித வடிவில் இருக்கும் என்பதை, ஓவியர் மணியத்தைக் கொண்டு, கல்கி ஊகமாய் வரையச் செய்து, தமது பத்திரிகையின் 1954 மே 23ம் தேதிய இதழின் அட்டையில் அதை வெளியிட்டார். அது பற்றிய விளக்கக் குறிப்பில், தாம் கண்ட மண்டபச் சிற்ப வேலைகளையும், தாம் கேட்ட கல்லுளி ஒலிகளையும் வர்ணித்துவிட்டு அவர் சொன்னார் :

தமிழ் நாட்டின் புராதனமான சிற்பக் கலைக்கு இணங்கிய முறையில் பிரார்த்தனை மண்டபம் கட்டப்படுகிறது. அதே சமயத்தில் காந்தி மகானுடைய எளிய வாழ்க்கைமுறைக்கு இணங்க, நுட்பமான வேலைப்பாடுகள் அதிகமில்லாமல் காந்தி ஞாபகார்த்தப் பிரார்த்தனை மண்டபம் கருங்கல் திருப்பணியாக அமைக்கப்படுகிறது...

பிரார்த்தனை மண்டபம் முழுவதும் கட்டப்படும்போது அதன் தோற்றம் எப்படி இருக்கும் என்பதன் அறிகுறியை நமது சித்திரக்காரர் காட்டியிருக்கிறார்.


சித்திரக்காரர் காட்டியதைச் சிற்பிகளின் கை வண்ணத்தால் காணக் கொடுத்து வைக்காதபடி, இந்தக் குறிப்பை எழுதிய ஏழாம் மாதம் கல்கி காலமாகிவிட்டார்.

காந்தி ஸ்மாரக் நிதியின் நன்கொடையான இரண்டு லட்சம் ரூபாய் உள்பட, மொத்தம் நாலு லட்சம் ரூபாய் செலவில் எழுந்த மகாத்மா மணி மண்டபத்தை, 1956 ஜனவரி 27ம் தேதி, தைப்பூசத் திருநாளில் ராஜாஜி திறந்து வைத்து, காணக் கொடுத்துவைத்தோருக்கெல்லாம் அதைக் காணிக்கை ஆக்கினார். எத்தனையோ பேர்கள் நிறைந்த அந்த விழாவில், தமது அன்புக்கும் பாராட்டுக்கும் உரிய ஒருவர், தம் பக்கத்தில் இல்லாததைப் பெரியதொரு குறையாக அவர் எண்ணியிருப்பார்.

அந்தக் குறையைச் சிவசண்முகம் பிள்ளை வாய்விட்டுச் சொல்லி, சென்னையில் காந்திக்கு நினைவுச் சின்னம் அமைப்பதற்கு மூலகாரணமாய் இருந்து, தீவிர ஈடுபாட்டுடன் அதற்கென உழைத்த கல்கியைப் புகழ்ந்து பேசினார். மொத்த நிதி வசூலில் கால் பங்கு கல்கியின் முயற்சியால் கிடைத்ததாகும் என்பதையும் அவர் பாராட்டுடன் அறிவித்தார்.

காந்தி மண்டபத்தின் தலை வாசல் படிகளில் ஏறி இடப்புறம் திரும்பினால், அங்கே உள்ள சுவரில் ஆவணச் செப்புத் தகடு ஒன்றைக் காணலாம். அதிலே, மகாத்மா நினைவுச் சின்னக் குழுவினரின் பெயர்களில் ஒன்றாக, ''செயலாளர் — ஆர். கிருஷ்ணமூர்த்தி (கல்கி)'' என்று பொறித்திருப்பதைப் பார்க்கலாம்.

அந்தச் செப்பேட்டில் மட்டுமின்றி, மண்டபம் முழுதிலுமே, காந்தி பக்தியினாலும் பணியினாலும் அடைந்த புகழ் வடிவிலே, கல்கியின் பெயர் பதிந்துள்ளது. (தொடரும்)



''அவர் எதையுமே அவசர முடிவெடுக்க மாட்டார். நீர ஆலோசித்துத்தான் முடிவு எடுப்பார்.''

''அப்படியா? எதைக் கொண்டு அப்படிச் சொல்கிறாய்?''

''அவர் மகனுக்கு ஐந்து வயது ஆகிறது. இன்னும் என்ன பெயர் வைக்கலாமென்று தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்!''

— சம்பத் குமாரி

ஒன்று முதல் 100 வரை எத்தனை 9 இருக்கிறது?

விடை 19.

9, 19, 29, 39, 49, 59, 69, 79, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99.

- ப்ளோபாய் — பாலி



பொன்னிக் கரையில் பொறி இயல் கலை

கி. ராஜேந்திரன்

அது 1962ம் ஆண்டு. இந்தியா எஃகு உற்பத்தியில் தன்னிறைவு பெறாத நிலை. அதனை ஏற்றுமதி செய்வது பற்றி யாரும் சிந்தித்துக்கூடப் பாராத கட்டம். அன்று திரு வி. டி. சுவாமி யோசித்தார். இன்னும் சிறிது காலத்தில் எஃகு ஏற்றுமதி பற்றி இந்தியா தீவிர கவனம் செலுத்த வேண்டியிருக்கும். ஆனால் அதற்குள் வெளி நாட்டுச் சந்தைகளை வேறு பல முன்னேற்றமடைந்த நாடுகள் கைப்பற்றிக் கொண்டிருக்கும். எனவே இந்தியா இப்போதே முயற்சியைத் தொடங்கி ஓரளவுக்கேனும் ஏற்றுமதி செய்து வெளிநாட்டுச் சந்தையில் அறிமுகமாகவேண்டும். இன்றைக்கே கதவைத் தட்டி வைத்தால் நாளை நல்ல வரவேற்பைப் பெறலாம்.

இந்தக் கருத்தில் முயற்சியை ஆரம்பித்தவருக்கு சூடான் நாட்டில் ரயில்வே தண்டவாளங்களுக்குக் கணிசமான ஆர்டர் கிடைத்தது. மிகுந்த மகிழ்ச்சியுடன் ஹிந்துஸ்தான் ஸ்டீல் என்ற நமது அரசுத் துறை நிறுவனத்தை அணுகியவருக்கு ஓர் ஏமாற்றம் காத்திருந்தது. சூடான் நாட்டவர் தண்டவாளங்களைத் தருவிக்கு முன்னர் அதனை ''பெண்டுலம் டெஸ்ட்'' என்ற ஒரு சோதனைக்கு உட்படுத்த விரும்பினர். நமது ஹிந்துஸ்தான் ஸ்டீல் நிறுவனத்திலோ பெண்டுலம் டெஸ்ட் நடத்தத் தேவையான கருவிகளே இல்லை.

- ஏற்றுமதிக்கென கப்பலேறுகிறது காவேரி ஸ்ட்ரக்சரல்ஸின் மாபெரும் தயாரிப்பு ஒன்று.
- எவ்வளவு பெரிய அமைப்புக்கள் உருவாகின்றன என்பதை அருகில் உள்ள மனிதனின் அளவினைக் கொண்டு உணரலாம்.


வி. டி. சுவாமி அவர்கள் மனம் தளரவில்லை. உடனே பெண்டுலம் சோதனைக் கருவி மேனாட்டில் எங்கே இருக்கிறது என்று பார்த்து ஆராய்ந்து அதே போல் இந்தியாவில் ஒரு கருவியைத் தாமே தமது செலவில் தயாரிக்கச் செய்தார். இந்தியத் தண்டவாளங்கள் சோதனையில் தேறி சூடானுக்கு ஏற்றுமதியாயின. பெண்டுலம் டெஸ்ட் கருவியை ஹிந்துஸ்தான் ஸ்டீல் நிறுவனத்துக்கே பரிசளித்துவிட்டார் சுவாமி. அது இன்றளவும் பயன்பட்டு வருகிறது.


சுவாமி அன்று நடந்து கொண்ட விதத்துக்குப் பெயர்: தீர்க்கதரிசனம்.

இந்தத் தீர்க்கதரிசன நோக்கு சுவாமிக்கு இளம் வயதிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். இல்லாமலா தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த இவர் உடுத்திய துணி தவிர வேறு சொத்து இல்லாதபோதிலும் தைரியமாகக் கல்கத்தாவுக்கு ரயிலேறினார்? வாழ்க்கையில் எதையோ பெரிதாகச் சாதிக்க வேண்டும் என்ற மன அரிப்புடன் கல்கத்தா சேர்ந்தவர், ஊழியராகத் தொடங்கி, உத்தியோகம் பார்த்து, பங்கு மார்க்கெட்டில் விளையாடி, வியாபாரம் நடத்தி, காண்ட்ராக்ட் எடுத்துப் படிப்படியாக உயர்ந்தார்.

வருவாய் கருதி அவர் ஈடுபட்ட காரியங்கள் பலப்பல என்றால் வருவாய் கருதாது அவர் ஈடுபட்ட நற்பணிகள் ஏராளம்:

சமச்சடங்குகள் செய்யப் பணமில்லாமல் தவிப்பவர்களின் உதவிக்குப் போவார். அதற்கென்றே ஒரு சங்கமும் அமைத்தார். பாடை தூக்க முன்னிற்பார். அச்சங்கத்தின் பெயர் *Pal Bearer's Association*. இந்தப் பணியில் இவர் ஈடுபட்டிருந்ததை இவரது ஆங்கிலேய மேலதிகாரி யொருவர் ஒரு சமயம் கேலி செய்ய, சுவாமி கோபம் கொண்டு அவரை அடித்தே விட்டார்! சக ஊழியர்





களுக்கு ஓரே வியப்புக் கலந்த உற்சாகம்! ஆங்கிலேயனை அடிமை இந்தியன் அடிப்பதா? வரலாறு காணாத விஷயமாயிற்றே! தோளில் அவரைத் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடினார்கள்.

அன்று அப்படி ஒரு சங்கத்தைப் பொறுப்பேற்று நடத்திய நினைவு இன்றும் சுவாமியின் உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கிறது. எனவே தான் அவர் சென்னை நகரில் ஓர் அழகிய இடுகாடு அமைய வேண்டும் என்று ஆசைப்பட்டு அதற்கான பூர்வாங்க வேலைகளைத் தொடங்கி யிருக்கிறார். இன்றைய இடுகாடுகள் அருவருப்பை அளிப்பனவாக உள்ளன. ஆனால் சுவாமி அவர்கள் கற்பனையில் உதித்துள்ள இடுகாடு இறை உணர்ச்சியையும் கலை உணர்ச்சியையும் ஊட்டும். எழிலார்ந்த தோட்டமும் அதில் ஆங்காங்கே இதிகாச புராண நிகழ்ச்சிகளை விளக்கும் சிற்பங்களும் இடம் பெறும்.

வெள்ளைக்காரனை அடித்த நேரம்தான், நேதாஜி அமைத்த இந்திய தேசிய ராணுவத்துக்கு சுவாமியை உதவப் பண்ணியது. யுத்த தளவாடங்கள் அச்சேனைக்குக் கிடைக்கச் செய்ய அவர் மேற்கொண்ட சாகச வேலைகள் குறித்துச் சுவையான ஒரு நாவலே எழுதலாம். இந்த ஈடுபாடு பின்னால் நேதாஜியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு திரைப் படத்தை உருவாக்க சுவாமிக்கு ஊக்கம் அளித்தது. ஆனால் இந்த ஊக்கத்தைத் திரைப்பட ரசிகர்கள் பிரதிபலிக்காததால் படம் தோல்வியே கண்டது!


இதற்கு முன்பாகவே சுதந்திர பாரத உதயத்துடன் ஹிந்து முஸ்லிம் கலவரங்களையும் கண்டார் சுவாமி. அவற்றின் மத்தியிலேயே வாழ்ந்தார். களத்துமேட்டில் போர் அடிப்பது போல் ஒரு ஹிந்து சிறுமியை முஸ்லிம் ஒருவன் சுழற்றி மரத்தில் அடிப்பதைக் கண்கொண்டு பார்த்த கணத்தில் சுவாமியின் மனம் கல்லாகியது. போர்க் கொடி உயர்த்தினார். அவருடைய ஆதரவுடன் நாட்டுக் குண்டுகள் தயாராயின. துப்பாக்கிகளும் தருவிக்கப்பட்டன. அதோடு இக்கலவரங்களின் விளைவாக வீடிழந்து, சொத்திழந்து பரிதவித்த பல ஹிந்துக்களுக்குப் புகலிடமும் அளித்தார். கல்கத்தா காஸ்மாபாலிடன் கிளப் அகதிகள் முகாமாகியது சில காலத்துக்கு. சமத்காரமாக இயங்கி ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் ஆபத்திலிருந்து தப்புவித்த தருணங்களும் பலப் பல.

இப்படி எத்தனையோ பல அனுபவங்களைப் பெற்றிருந்தாலும் அவை எல்லாவற்றிலும் பெரிதாக மதித்துப் பெருமிதப்படக்கூடியதாக ஸ்வாமி கருதுவது காந்திஜியைச் சந்

● நிலாவாகனம் அல்ல! பூமண்டலத்திலேயே பயன்படப் போகிற ஓர் உறுப்புத்தான்.

● திரு காளிதாஸ்.

● காவேரி ஸ்ட்ரக்சரல்ஸின் முதல் ஏற்றுமதியைத் துறைமுகத்தில் அங்குரார்ப்பணம் செய்கிறார் திரு ஆர். வி. இடதுபுறம் திரு வி. டி. சுவாமி. வலப்புறம் திரு பாலாஜி.







தித்து அவர் பாராட்டைப் பெற்ற சம்பவமாகும்.

வகுப்புக் கலவரங்கள் சற்றே ஓய்ந்திருந்த அத்தருணத்தில் காந்திஜி கல்கத்தாவிலிருந்து சிலமைல் தொலைவில் ஸோதப்பூர் ஆசிரமத்தில் தங்கியிருந்தார். தமிழகத்திலிருந்து கல்கத்தா வந்திருந்த காங்கிரஸ் தலைவர்கள் சிலர் அண்ணலைக் காண விரும்பினர். அவர்களைத் தமது காரில் ஏறச் செய்து சாரதியாகவும் அமர்ந்தார் சுவாமி. ஆசிரமத்தை அடைந்ததும் சுவாமியை இருக்கச் சொல்லி விட்டுப் பாபுவின் தரிசனம் பெறச் சென்றனர் அந்தத் தலைவர்கள். ஆனால் அவர்களுமே காந்திஜி வேறு முக்கிய அலுவலில் ஈடுபட்டிருந்ததால் காத்திருக்க நேர்ந்தது. இதற்கிடை

யில் பிரார்த்தனை நேரமும் வந்துவிட்டது. அது முடிந்ததும் மகாத்மாவின் தரிசனம் பெற வந்திருந்த ஏராளமான மக்கள் கல்கத்தாவுக்கு ரயிலேறப் பக்கத்து ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். அக்கூட்டத்தைச் சமாளிக்கக் கூடிய அளவில் ரயில்கள் விடப்படவில்லை. அந்த நெருக்கடியில் சிக்கிய ஒருவன் தட்டுத் தடுமாறித் தண்டவாளத்தில் விழ அவன் மீது ரயிலும் ஏறிவிட்டது.

அவ்வளவுதான், மக்கள் ஆவேசம் கொண்டனர். ரயிலை ஓட விடவில்லை. 'சிக்னல்'கள் உடைக்கப்பட்டன. கம்பிகள் துண்டிக்கப்பட்டன. ஒரே ஆர்ப்பாட்டம். கல்கத்தாவுக்குப் போய்ச் சேர வேண்டிய ரயில்கள், அங்கிருந்து புறப்பட வேண்டிய ரயில்கள் எல்லாம் ஸ்தம்பித்துப் போயின.

அண்ணல் மனம் நொந்தார். ஆசிரமவாசிகளோ என்ன செய்வதென்று புரியாது தவித்தனர். அவர்களில் ஒருவர் சுவாமியை அறிந்தவர். ஆசிரம வாசலில் அவர் நிற்பதைக் கண்டு, ''அடேடே! நீ எப்போது வந்தாய்?'' என்று கேட்டார். சுவாமி விவரம் கூறினார். ஆசிரம நிர்வாகி, ''அதெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். இப்போது இந்த அமர்க்களம் ஓய வேண்டும். அதற்கு ஏதாவது செய்'' என்றார். அவருக்குத் தெரியும் சுவாமியின் சாமர்த்தியம்.

''ஃபோன் இருக்கும் இடத்தைக் காட்டுங்கள். அதை எனக்கே சற்று நேரம் ஒதுக்கி விடுங்கள்'' என்று சுவாமி கேட்டுக் கொண்டார். கல்கத்தாவில் உள்ள உயர்தர ரயில்வே அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார். காரியாலய நேரமில்லையாதலால் அவர்களைப் பிடிப்பது எளிதாக இல்லை. மாறி மாறிப் பல இடங்களுக்கு ஃபோன் செய்ததில் பலன் கிட்டியது. ''பைலட் இஞ்சின் ஒன்று வருகிறது — தண்டவாளம் பெயர்க்கப்படாமல் இருக்கிறதா என்று பார்க்க. அதில் அதிகாரிகளும் வருகிறோம். லைன் கிளியர் ஆனதும் ரயில்கள் ஓடத் தொடங்கும். விசேஷ ரயில் ஒன்றும் விடப்படும். மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தாருங்கள்'' என்றனர் அதிகாரிகள்.

ஆசிரம ஊழியர்கள் சிலருடன் சுவாமி ரயில் நிலையத்துக்குச் சென்றார். அமைதி காத்தார். கூட்டம் கரைந்து, ஆசிரமத்துக்கு சுவாமி திரும்பியபோது இரவு வெகு நேரமாகிவிட்டது. விடைபெற முயன்ற சமயம் ''பாபுவைப் பார்த்துவிட்டுப் போகலாம். அவர் உங்களைச் சந்திப்பதற்காகவே இன்னமும் உறங்காமல் காத்திருக்கிறார்'' என்று பதில் கிடைத்தது. பாபு அவரை வாழ்த்தி நன்றி தெரிவித்தார்.

தமிழகத்திலிருந்து வந்திருந்த தலைவர்கள் சுவாமியை வாசலில் நிறுத்தி வைத்துவிட்டுப் போக, கடைசியில் சுவாமி கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களை அண்ணல் பார்த்துப் பேசும்படியாயிற்று. அதோடு விடவில்லை சுவாமி. பாபுவிடம், ''உங்கள் நன்றி எனக்கு மட்டுமல்ல. ரயில்வே நிர்வாகத்தில் உள்ள உயர் அதிகாரிகளுக்கும் உரியது. அவர்களை நாளை அழைத்து வருகிறேன்'' என்று கூறிப் பிரிந்தார். அதன்படி மறுநாள் அவர்களை அழைத்து வந்தபோது பாபுவுக்கு மௌன தினம். எனினும் ''நற்பணிகள் தொடரட்டும்'' என எழுதிக் காட்டினார்.

சுவாமி அவர்கள் ஆனந்தத்தின் சிகரத்திலும் இருந்திருக்கிறார், ஆழங் காண முடியாத துயரத்தையும் சந்தித்திருக்கிறார் என்பதை மேலே விவரித்த சம்பவங்கள் உணர்த்தும். இதனால்தானோ என்னவோ அவர் பெரிய வெற்றிகளால் இறுமாப்புக் கொண்டதுமில்லை. பேரிழப்புக்களால் இடிந்து போனதுமில்லை. பங்கு மார்க்கெட்டில் ஒரே நாளில் பல லட்சம் பார்த்ததும் உண்டு. கட்டிய துணி தவிர எல்லாம் பறிபோன நிலை ஏற்பட்டதும் உண்டு. எதையும் சம நோக்கில் ஏற்றதால்தான் இன்றைக்கும் நண்பர்கள் ''சுவாமி, சுவாமி'' என்று கொண்டாடுகிறார்கள். அவர்களில் ஒருவரான திரு சித்ரா நாராயணஸ்வாமி நினைவுகூர்வார்: ''சென்னை பங்குமார்க்கெட்டில் ஒரு நாளைக்கு மொத்தப் பேரமே ஐம்பதாயிரம் ரூபாயாக இருந்த காலத்தில் சில லட்சம் பெறுமானமுள்ள ஷேர்களை வாங்குமாறு கல்கத்தாவிலிருந்து தாக்கீது அனுப்பி எங்களைப் பிரமிக்கச் செய்தவர் சுவாமி!''


மொத்த வியாபாரம், பங்கு மார்க்கெட், காண்டிராக்ட் என்று பல துறைகளில் ஈடுபட்டு, ஏற்றத் தாழ்வுகளும் பல கண்ட சுவாமிக்கு, அலையாமல் நிலையாக ஏதாவது சாதிக்க வேண்டும் என்று ஒரு காலகட்டத்தில் தோன்றியது இயல்பே. அதன் விளைவாக வி.டி. சுவாமி நிறுவனம் உருவாகி ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டது. சிந்தனையையும் செயலையும் ஒருமுகப்படுத்திய சுவாமியின் தலைமையில் வெகு விரைவில் முன்னேறி அரசாங்கத்தின் பாராட்டையும் நற்சான்றிதழையும் பெற்றது—ஏற்றுமதி நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு இன்றியமையாததல்லவா ?

பெரிய அளவில் ஏற்றுமதி செய்ய 'காவேரி ஸ்ட்ரக்சரல்ஸ்' என்ற அவரது பொறி இயல் நிறுவனமும் கணிசமாக உதவியுள்ளது. இந்நிறுவனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் கூட சுவாமியின் வாழ்வில் நடந்துள்ள எத்தனையோ பல திகைப்பும் வியப்புமான விஷயங்களைப் போலவேதான்!

பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் பாய்லர் தொழிற்சாலை திருச்சிக்கு அருகே திருவெறும்பூரில் உருவானபோது அதற்குத் தலைமை ஏற்க திரு கிருஷ்ணன் வரவிருந்தார். அவர் திரு சுவாமியை ஒரு தேநீர் விருந்தில் சந்திக்க நேர்ந்தபோது, உரையாடலினிடையே ''திருச்சிக்குப் போகச் சொல்கிறார்கள். எனக்கு அங்கே யாரையும் தெரியாது. புதிய இடம்'' என்று சொல்லி வைத்தார்.

''நான் வேணுமானால் பேச்சுத் துணைக்கு வரட்டுமா?'' என்று சுவாமி வேடிக்கையாகக் கேட்டார்.

''வாயேன்'' என்றார் கிருஷ்ணன், சிரித்துக்கொண்டே. ''ஆனால் வெறும் கையோடு வராதே. ஒரு தொழிலகத்தை ஆரம்பிக்க ஏற்ற நல்ல திட்டத்தோடும் மூலதனத்



உலகின் எல்லாப் பகுதிகளிலும், எல்லாச் சீதோஷ்ண நிலையிலும் காணக்கூடிய ஒரே பிராணி நாய்தான்.

ஆதாரம்: மிர்ரர் தகவல்: வி. ஈ. ஸ்ரீதரன்



உன்னுடைய கைகளை எவ்வளவு தூரம் சுழற்றுவதற்கும் உரிமையுண்டு — அது அடுத்தவனின் மூக்கில் படாத வரைக்கும். —*கார்லைல்.*

— வி. ந. ஸ்ரீதரன்

தோடும் வா. பாய்லர் தொழிற்சாலையின் பிரும்மாண்டமான கூடங்களில் சிலவற்றை அமைத்துத் தரும் ஆற்றலைப் பெற்றதாக உன் தொழிலகம் இருக்க வேண்டும்.''

பாய்லர் தொழிலகத்தில் மட்டுமல்ல, வேறு பல நகரங்களிலும் பிரும்மாண்டமான ஆலைக் கூடங்களை அமைத்துத் தரும் வசதிகளைப் பெற்றதாய் காவேரி ஸ்ட்ரக்சரல்ஸ் வளர்ந்தது. எஃகுத் தூண்கள், அவற்றின் மேல் எஃகு விதானங்கள் எல்லாவற்றையும் 'வெல்டிங்' செய்து நிர்மாணித்து வந்தார்கள்.

ஆனால் இத்துடன் தம்மால் திருப்தி அடைய முடியாது என உணர்ந்தார் சுவாமி. நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரிய அளவில் உதவுவது என்றால் காவேரி ஸ்ட்ரக்சரல்ஸ் ஏற்றுமதியாகக் கூடிய பொருள்களை உருவாக்க வேண்டும். இந்த நோக்கில் பொறி இயல் துறையை அங்கே பொறி இயல் கலையாக மாற்றினர்.

விஞ்ஞானம் ஒரு கட்டம் வரை வளர்ந்த பிறகு நுண் கலையாக மாறுகிறது. டாக்டருக்குப் படிக்கும் மாணவன் விஞ்ஞானம் தான் பயில்கிறான். ஆனால் அபூர்வமான சஸ்திர சிகித்சைகளை ஆற்றலுடன் செய்கிற கட்டத்தில் அவன் கலைஞனாகிறான். அங்கே கலை உணர்வின்றி அவன் விரல்கள் நேர்த்தியாகச் செயல்பட முடியாது. அது போல் தான் பொறி இயல் துறையிலும்.

காவேரி ஸ்ட்ரக்சரல்ஸ் தொழிலகத்துக்குள் நுழைந்தால் மூலைக்கு மூலை கனமான எஃகுத் தகடுகளைப் பல அளவுகளிலும் வடிவங்களிலும் பார்க்கலாம். வெல்டிங் இயந்திரங்கள் சீறி நீல நிற தீ ஜ்வாலைகளைக் கக்கும். வெல்டிங் செய்யப்பட்ட இடங்களைச் சமன் படுத்தும் வட்ட வடிவ சாணைக் கற்கள் ஙீங் என்ற பேரோசையை இடைவெளியின்றி எழுப்பியபடி சுழன்று தீப்பொறிகளைச் சிதறச் செய்யும். எல்லாமே மேற்பார்வைக்கு முரட்டுத்தனமான காரியங்களாகத் தோன்றும்.

ஆனால் கூர்ந்து ஆராய்ந்தால் இரண்டாள் உயரத்திலும் மின்சார ரயிலின் நீளத்திலும் உள்ள மாபெரும் தயாரிப்புக்கள் நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்டவை எனத் தெரிய வரும். பொற்கொல்லர் ஒரு நகையையோ சிற்பி ஒரு கற்சிலையையோ உருவாக்குவது போல அத்தனை சிரத்தையும் நுணுக்கமும் இந்தத் தயாரிப்பிலும் காட்ட வேண்டும்.

இவ்விதம் சிருஷ்டிக்கப்படுகிற பாகங்கள் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, ரசாயனக் கூடம், ரசாயன உர உற்பத்திச் சாலை முதலியவற்றில் பயனாகிறவை. வாயுக் கலங்களின் தயாரிப்பும் உண்டு. எனவே தயாரிப்பில் சிறிதளவு பிசகு நேர்ந்தாலும் இவற்றைக் கொண்டு எந்தப் பொருள் உற்பத்தி செய்யப்படுகிறதோ அதன் தரம் குறைந்து போகும். உயிராபத்தை விளைவிக்கவும் கூடும்.

இதனால்தான் காவேரி ஸ்ட்ரக்ச்சரல்ஸில் உருவாகும் பாகங்கள் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாகி நற்சான்றிதழ் பெற வேண்டியிருக்கிறது. இப்படி நற்சான்றிதழ் வழங்குவதற்கென்றே அகில உலக ரீதியில் அமைந்த நிறுவனங்கள்—லாயிட்ஸ் ரிஜிஸ்டர், பீரோ வெரிடாஸ் போன்றவை — உள்ளன. லாயிட்ஸ் பிரதிநிதி ஒருவர் நிரந்தரமாகக் காவேரி ஸ்ட்ரக்சரல்ஸுடன் தொடர்பு கொண்டு திருச்சியிலேயே தங்கியிருக்கிறார். சோதனைகளை நடத்திப் பார்க்க மிக நவீனமான எக்ஸ்ரேக் கருவிகளும் உள்ளன. 'வெல்டிங்'கில் குறைபாடு இருக்குமேயானால் எக்ஸ்ரே காண்பித்து விடுகிறது. அல்லது ரசாயன நிற மாற்றம் உணர்த்திவிடுகிறது.

இத்தாலிய நிறுவனமாகிய ஸ்நாம் புரொஜெக்டி போன்ற மாபெரும் ஸ்தாபனங்கள் அயல்நாடுகளில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, ரசாயன உரத் தொழிற்சாலை போன்றவற்றை நிர்மாணிக்க ஒப்புக் கொள்கின்றன. அதற்கு உரிய பல பாகங்களைத் தயாரித்தளிக்கும் பொறுப்பைக் காவேரி ஸ்ட்ரக்ச்சரல்ஸ் போன்ற பல பொறி இயல் தொழிலகங்களிடம் ஒப்படைக்கின்றன. இதில் கவனத்துக்குரிய விஷயம் எல்லா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளும் ஒரே போல் இருப்பதில்லை. ஒவ்வொன்றிலும் ஒரு சில முன்னேற்றங்கள் இருக்கும். அத்துடன் அங்கு சுத்திரிகப்புக்கு உள்ளாகும் எண்ணெயின் தன்மைக்கு ஏற்ப ஒரு சில மாறுதல்களும் தேவைப்படும். இவற்றை உள்ளடக்கிய வரைபடங்களைத் தயாரித்துக் குறிப்பிட்ட பாகத்துக்கான தாக்கீதை அனுப்புவார்கள். அந்த வரைபடத்தைப் பல பகுதிகளாக்கி ஒவ்வொரு பகுதியையும் பெரிதுபடுத்திப் புதிய வரைபடங்கள் தயாரிக்க வேண்டும். நுணுக்கமான அமைப்புக்களைக் குறித்துப் பிறகு இவை இம்மியளவும் மாறுபடாத வகையில் எஃகினால் உருவாக்கிக் கப்பல் ஏற்ற வேண்டும். ரசாயனச் சாலைகளுக்கான உபகரணங்களை அந்த ரசாயனப் பொருள்களால் பாதிக்கப்படாத உலோகக் கலவைகளால் தயாரிப்பது அவசியமாகிறது. சில கலங்களினுள்ளே முலாம் பூசியது போல் கண்ணாடி பதிக்க நேரும். மிக அதிகமான உஷ்ணம் (550 °C), மிக அதிகமான குளிர்ச்சி (—40 °C) அல்லது மிக அதிகமான அழுத்தம் இவற்றால் பாதிக்கப்படாதவாறு உருவாக்குவது ஒரு சவாலாகவே அமைகிறது.

ஆக ஒவ்வொரு தயாரிப்பும் 'அடியைப் பிடிடா பாரத பட்டா' என்ற கதைதான். சோப்பு உற்பத்தி போலவோ அல்லது சைக்கிள் தயாரிப்பது போலவோ ஒன்றைப் போலவே மற்றொன்று என்று அடுக்கடுக்குச் செய்து குவிக்கிற காரியமல்ல.

இவ்வளவு நுணுக்கமான வேலைகளைச் செய்ய காவேரி ஸ்ட்ரக்சரல்ஸ் அயல்நாட்டு நிபுணர்களின் ஒத்துழைப்பை நாடவேயில்லை என்பது பெருமைக்குரிய விஷயம். திரு சுவாமி இளைஞர்களைத் தேர்ந்தெடுத்தார். பொறுப்புக்களை ஒப்படைத்துத் துணிந்து செயலாற்றுங்கள் என்று தட்டிக் கொடுத்தார். ஆரம்

பத்தில் சில தவறுகள் நேரத்தான் செய்தன. நஷ்டமும் கணிசமாக ஏற்பட்டது. ஆனால் அதுவே படிப்பினையாகவும் அமைந்தது.

காவேரி ஸ்ட்ரக்சரல்ஸில் நிர்வாகப் பொறுப் பேற்றிருக்கும் திரு காளிதாஸ் பொறி இயல் துறையில் கல்வி அறிவோடு இன்று அனுபவ நிபுணராகவும் விளங்குகிறார். அவருக்குக் கீழ் பொறி இயலாளரும் நிர்வாக ஆற்றல் உள்ள வர்களும் எழுபது பேர் உள்ளனர். மொத் தத்தில் கிட்டத்தட்ட ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் நிறுவனம் இரவு பகல் இருபத்திநாலு மணி நேரமும் இயங்குகிறது. ஞாயிற்றுக்கிழமையிலும் வேலை நடக்கிறது.

மற்றோர் இளைஞர் பாலாஜி ஏற்றுமதி வர்த்த கத்தைக் கவனிக்கும் வி. டி. சுவாமி நிறுவனத் தின் நிர்வாக இயக்குநராக விளங்குகிறார். சுகுமார், பஞ்சாபகேசன் ஆகியோரும் முக் கிய பொறுப்புக்களை ஏற்றுத் திறம்படச் செய லாற்றுகிறார்கள். மற்றோர் இளைஞர் குமார். அயல்நாடுகளில் சுற்றி அலைந்து ஆர்டர்கள் பிடிக்கிறார். இரான், பர்மா, குவெய்ட் முதலிய நாடுகளுக்குக் காவேரி ஸ்ட்ரக்சரல்ஸ் தயாரிப்புக்கள் செல்கின்றன.

இந்த இளைஞர்களை இயக்குவிக்கும் சூத்திர தாரியாக வி. டி. சுவாமி விளங்குகிறார். எப்படி என்பதைப் பக்கத்திலிருந்து பார்க்க வேண்டும். அதுவே ஓர் அலாதி அனுபவம். நான் திருச்சி சென்றிருந்த போது, சுவாமி காரியாலய அறையில் அமர்ந்து கணக்கு வழக்குகளைக் கவனித்தவாறே பேசினார்; தொழிலகத்தைச் சுற்றிப் பார்த்தபடி உரை யாடினார், வெளியே உபரி நிலம் வீணாகாமல் நெற் பயிராகியுள்ள வயல் வரப்பில் நடந்த வாறு யோசனைகளைத் தெரிவித்தார். நிறுவ னத்தின் வருவாய் பெருகவும், உற்பத்தித் திறன் அதிகரிக்கவும், எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் அருமையான கருத்துக்கள் வெளிப் பட்டன. அவற்றுள் ஒன்று: '' 'ஸ்பிக்' நிறுவ னத்தின் ரசாயன உர உற்பத்திப் பகுதியில் அமோனியா வாயு உபப்பொருளாக உற்பத்தி யாகி ஏராளமாக வீணாகிறது. நைட்ரஜன் அடங்கிய ரசாயன உரம் பயன்படுத்துவதற் குப் பதில் அமோனியாவை வாயுக் கலங் களில் அடைத்து நேரடியாக நிலத்தில் ஆழப் பாய்ச்ச மேனாட்டில் சில சோதனைகள் வெற்றி கரமாக நடந்துள்ளன. அதைப் பற்றி நாம் இப்போதே ஆராய்ந்தறிய வேண்டும். இதில் நல்ல எதிர்காலம் இருக்கிறது.''

காவேரி ஸ்ட்ரக்சரல்ஸில் தயாராகும் பாகங்கள் பல, மூன்று அங்குலத்துக்கும் அதிக மான கனமுள்ள எஃகினாலானவை. ஆயினும் என்ன, எஃகை இங்கே மெல்லிய தகரம் போல் வளைக்கிறார்கள்; மரப் பலகையாகக் கருதிச் செதுக்குகிறார்கள், இழைக்கிறார்கள்; பிறந்த நாள் கேக் வெட்டுவது போல் துண் டாக்குகிறார்கள்; காகிதங்களைச் சேர்த்து ஒட்டுவது போல இணைக்கிறார்கள். இதை யெல்லாம் நிறைவேற்ற மிக நவீனமான ராட்சத இயந்திரங்கள் உள்ளன. இவற்றுள் சில — தலைக்கு மேலே கூரையை யொட்டித் தண்டவாளங்கள் மீதாக நகரும் பிரும் மாண்டமான பாரம் தூக்கி உள்பட — இவர்களே தயாரித்தவை. தொழிலகத்தில் உற்பத்தியாகும் பண்டங்களோ விசுவரூபம் எடுத்தவை. அவற்றை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குக் கொண்டு போவதே பெரும் பிரச்னை. சில இடங்களில் சாலை குறுகி இடக்கான நிருப்பமாகவும் அமையும். அத் தருணங்களில் சுவரை இடித்துவிட்டுப் பிறகு கட்டித் தந்தது உண்டு! உள் நாட்டிலே புதிய மின் நிலையங்கள், சர்க்கரை ஆலைகள் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் முதலிய வற்றை நிறுவ காவேரி ஸ்ட்ரக்சரல்ஸ் பல பாகங்களை உருவாக்கித் தந்திருக்கிறது. அஸ்ஸாம் மாநிலத்தில் கிடைத்த ஆர்டர் ஒன்றினைத் தயாரித்து முடித்து அதனை மலைப் பாதைகள் வழியே கொண்டு செல்ல முடி யாது என்பதால் அதன் பகுதிகளைத் தனித் தனியே எடுத்துப் போய் ஸ்தலத்திலேயே இணைத்துத் தந்திருக்கிறார்கள். பின்னோடு பொறி இயல் நுணுக்கம் தெரிந்த பட்டாளம் ஒன்று போயிற்று. இப்படியே ஒவ்வோர் ஆர்டரும் நிறைவேறுவது பிரும்மப் பிரயத் தனம்தான்.

இவ்வளவு ஆற்றலுக்கும் மூலகாரணமாக உள்ள திரு வி. டி. சுவாமி காரியவாதிதான், யார் இல்லை என்பார்கள்? ஆனால் கருணை உள்ளமும் படைத்தவர். நற்பணிகள் பலவற் றுக்குத் தாராளமாய் உதவுகிறவர். அவை என்னென்ன என்பதற்குப் பட்டியல் போட் டுத் தரவேண்டியதில்லை. அவர் தயாளசிந்தை யைப் புரிந்து கொள்ள ஒரு நிகழ்ச்சி போதும்.

அமாவாசை தர்ப்பணம் செய்து வைக்க வந்தார் சாஸ்திரிகள். சுவாமி கல்கத்தாவாசி யாக இருந்த காலம் அது. '' உங்கள் பெண் ணைப் பார்க்க வரன் வந்ததாகக் கூறினீரே, என்ன ஆச்சு? பிடித்துவிட்டதாமா?'' என்று கேட்டார் சுவாமி. ''பெண்ணைப் பிடிச்சிருக்காம். ஆனால் லௌகிக விஷயம் தான் இழுத்துப் பறிக்கிறது!'' என்றார் சாஸ்திரிகள். ''பத்தாயிரம் இருந்தா கல்யா ணத்தை முடிச்சுடலாம். கையிலே இரண் டாயிரம் இருக்கு; மிச்சத்துக்குக் கடனோ உடனோ வழி பண்ணணும்.''

அன்று சாஸ்திரிகள் தர்ப்பணம் பண்ணி வைக்கத் தமக்குக் கிடைத்த தட்சிணையைப் பார்த்து அடக்க முடியாத ஆனந்தத்தில் விம்மி விம்மி அழுதே விட்டார்!

சுவாமியின் வாழ்க்கை, அவர் கண்ட பெரு நஷ்டங்கள், மகத்தான வெற்றிகள், அளப் பரிய மகிழ்ச்சியும் ஆழ்ந்த துயரமும் தந்த அனுபவங்கள் எல்லாமே அசாதாரண மானவை. அவரும் அசாதாரண மனிதர் தாம். விரிவாக எழுதப் புகுந்தால் அபூர்வச் சுவைகளை உடைய வாழ்க்கை வரலாறு நூல் உருவாகும்.

காவிரிக் கரையில் பொறி இயல் கலை வளர்க்கும் இவர், இசை, நாட்டியக் கலைகளி லும் அளப்பரிய ஆர்வம் காட்டுகிறவர்.

காவேரி ஸ்ட்ரக்சரல்ஸுக்கு நான் விஜயம் செய்த போது இரண்டு கரைகளையும் தொட் டுக் கொண்டு கம்பீர அமைதியுடன் பாய்ந் தது காவிரி.

என் பக்கத்தில் இருந்த சுவாமி அவர்களும் அதே போன்று, நிறைவான சாதனைகள் தரும் கம்பீர அமைதியுடன் தோற்றம் அளித் தார். அந்தக் கம்பீர அமைதிப் புன்னகையை இவ்விதழ் மேலட்டையிலும் காணலாம்.



கால் விரல் நகங்களை விடக் கைவிரல் நகங்கள் நான்கு மடங்கு வேகத்தில் வளருகின்றன. — டிட்பிட்ஸ் — கே. ஆர்.


இணையற்ற எழில்மேனி.
மென்மை. வழவழப்பு. இயற்கையான வனப்பு.
ஆம்! லக்ஸ் ஸுப்ரீம் உங்கள் மேனி எழிலுக்கு
மெருகூட்டுகிறது. நீங்களே அதை
உணர்ந்து மகிழ்வீர்கள். லக்ஸ் ஸுப்ரீம்
மட்டுமே ப்யூடி க்ரீம் உட்கொண்டதாகும்.
பெருகும் அதன் செழுமையான நுரையில்
உள்ள ப்யூடி க்ரீமின் ஸ்பரிசத்தையும்
அதனின்று கமழும் இணையற்ற மெய்மறக்
கச் செய்யும் நறுமணத்தையும் நீங்கள்
உண்மையாகவே அனுபவிக்க முடியும்.
அதன் செழுமையான நுரை உங்களது
சருமத்தைத் தழுவிச்சென்று, மேனி
யைப் பட்டுப்போன்று மிருதுவாக
இயற்கை வனப்புடன் வைக்கிறது.
LUX SUPREME
வேறு எந்த
சோப்பையும் பற்றிய
சிந்தனையும் எழாது
இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு

வளம் தரு வீதியிலே...

ஏற்றுமதித் துறையில் ஏற்றமிகு சாதனை

இந்தியாவின் ஏற்றுமதி ரூ. 3,300 கோடியை எட்டியுள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன் இந்த அளவு ரூ. 805 கோடிதான்.

இந்தியப் பொருள்களுக்கு வெளி-நாடுகளில் புதுக் கவர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதற்கு தர நிர்ணயம் பெருமளவில் உதவியுள்ளது. எஞ்ஜினியரிங் சாதனங்களின் ஏற்றமிகு ஏற்றுமதிச் சாதனையால் கடந்த வருடம் ரூ. 353 கோடி அந்நியச் செலாவணி கிடைத்தது.



நெஞ்சில் உரமும்
செயலில்
திறனும் உறுதுணை
நிற்கும்

davp 78/400



யில் பி. எஸ்ஸி. ஆனர்ஸ் (பௌதிகம்) இறுதித் தேர்வில் ராஜதானியிலேயே முதல் மாணவராகத் தேர்வு பெற்றார். (1940). பின்னர் பெங்களூரில் உள்ள 'இண்டியன் இன்ஸ்டியூட் ஆஃப் சயன்'ஸில் சர் சி. வி. ராமனின் கீழ் பணியாற்றியதைப் பெருமையுடன் நினைவுகூர்கிறார். அடுத்து வானிலை ஆராய்ச்சி நிறுவனத்திலும் சிறிது காலம் பணியாற்றியுள்ளார். விமானப் படையின் வானிலை ஆய்வுப் பகுதியில் பர்மா எல்லையில் பணியாற்றி அனுபவம் பெற்றார். 1947ம் ஆண்டு சுதந்திரப் பாரத அரசு ஐ. ஏ. எஸ். பரீட்சையை முதன் முதலாக அமலுக்குக் கொண்டு வந்த அந்த வருடமே பரீட்சை எழுதி வெற்றி பெற்றார். அஸ்ஸாம் மாநிலத்தில் நீண்டகாலம் நிதித் துறைக் காரியதரிசியாக (இன்றைய ராஷ்டிரபதி அகமத் அவர்களுக்குக் கீழ்) பணியாற்றியுள்ளார்.

பல்வேறு துறைகளிலும் பணியாற்றிப் பழுத்த அனுபவம் பெற்ற திரு சுப்ரமண்யன் ஒவ்வொரு துறையிலும் எந்த உயர் அதிகாரி அல்லது அமைச்சருக்குக் கீழ் பணியாற்றி

ஆளுநரின் ஆலோசகர்...

"பொதுமக்களுக்குப் பிரச்னைகள் ஏற்படும்பொழுதுதான் அதிகாரிகளைத் தேடி வருகிறார்கள். அப்படி வருவோரின் குறைகளை அநுதாபத்துடன் கேட்டு அறிந்து அவர்களுக்கு இயன்ற உதவிகளைச் செய்வதுதான் அதிகாரிகளின் கடமை. மாவட்ட அதிகாரியாக நான் இருந்த சந்தர்ப்பங்களில் இதை மறந்ததே இல்லை. அரசாங்க அதிகாரி என்ற வகையில் நான் ஓரளவு வெற்றி அடைந்துள்ளேன் என்றால் என்னுடைய இந்த அணுகுமுறைதான் காரணம் என்று நினைக்கிறேன்'' என்று வெகு அடக்கமாகக் கூறுகிறார், தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகராக நியமனம் பெற்றுள்ள திரு ஆர். வி. சுப்ரமண்யன்.

கோட்டையில் உள்ள தலைமைச் செயலகத்தில் கல்வி அமைச்சர் இருந்து பணியாற்றி வந்த அதே அறையில் திரு சுப்ரமண்யன் பணியாற்றி வருகிறார். ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பெறும் ஃபைல்கள் அனைத்தும் ஆலோசகர்கள் திரு பி. கே. தவே, திரு ஆர். வி. சுப்ரமண்யன் ஆகிய இருவர் மூலமே செல்ல வேண்டும் என்று ஏற்பாடு. தமிழ் நாடு அரசின் பல்வேறு துறைகளும் இவ்விருவருக்கிடையே பங்கீடு செய்யப்பட்டுள்ளன. நிதி, கல்வி முதலிய துறைகள் திரு சுப்ரமண்யனின் பொறுப்பில் உள்ளவை. கேரளாவில் உள்ள கொல்லங்கோட்டில் பிறந்த இவர் உள்ளூரில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து, திருச்சி செயிண்ட் ஜோஸப் கல்லூரியில் சேர்ந்தார். அக்கல்லூரிக்கே பெருமை தேடித் தரும்வகையேன் என்பதையும் குறிப்பிடுகிறார். எல்லாரும் அரசியல் வானிலும் நிர்வாகத் துறையிலும் ஜொலித்த, ஜொலிக்கிற நட்சத்திரங்கள். ஆக, திரு சுப்ரமண்யன் பெற்ற அனுபவங்கள் மிக ருசிகரமாகவும் பயனுள்ளதாகவும் அமைந்தன. அத்துடன் உலக நாடுகள் பலவற்றைச் சுற்றிப் பார்த்த அனுபவமும் சேர்ந்து கொள்கிறது.

''அரசுக்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டியது அவசியம். மக்களும் அரசாங்க அதிகாரிகளும் ஒருவரை ஒருவர் உணர்ந்து புரிந்து கொண்டு செயல்பட வழிவகுப்பதையே இலட்சியமாகக் கொண்டு நான் பணியாற்றி வந்திருக்கிறேன்'' என்கிறார் திரு ஆர்.வி. எஸ்.


''டெல்லியில்தான் நான் நீண்ட காலம் பணியாற்றியிருக்கிறேன். I have had a long innings in Delhi'' என்று சிரித்தவாறே கூறுகிறார் திரு சுப்ரமண்யன். இவருக்கு இரு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உள்ளனர். ''மூத்த பிள்ளை கான்பூர் ஐ.ஐ.டி.யில் பொறி இயல் (Systems Engineering) பட்டம் பெற்று இப்போது அமெரிக்காவில் இருக்கிறான். இரண்டாவது பையன் டெல்லி ஐ.ஐ.டி.யில் நான்காவது ஆண்டு பயில்கிறான். மூன்றாவது பெண். உயர்நிலைப் பள்ளியில் படித்து வருகிறாள்'' என்கிறார்.

திரு சுப்பிரமண்யன் அவர்கள் பேச்சிலே கனிவும் மனிதாபிமானமும் பழுத்த அனுபவமும் பிரதிபலிக்கிறது. பேட்டி: **'பாணன்'**

அடுத்த வாரம்: திரு தவே

ஒரு மரணத்தைச் சுற்றி!

து.ராமமூர்த்தி



''பஞ்சு ஆம்படையாளிடம் ஆசையாயிருக்கானோ இல்லியோ, டைப் அடிக்கிற மிஷின் இருக்கே, அதுங்கிட்ட உசிரா இருக்கான்!...''

பஞ்சுவின் அம்மா ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

பஞ்சு சர்க்கார் வேலையைவிட்டார். பிராவிடெண்ட் பண்டில் சேர்ந்திருந்த பணத்தில் ஒரு டைப்ரைட்டர் வாங்கினார். புத்தம் புதிய மெஷின். ஒவ்வொருவர் பாதி விலைக்குப் பழைய டைப்ரைட்டர் வாங்குகிறார்களே, அந்த மாதிரி வாங்கவில்லை. புதிய டைப்ரைட்டரிலும் உயர்ந்த மாடல். ரிக்ஷாவில் வைத்து ஊர்வலம் வருகிற மாதிரி வீட்டுக்குக் கொண்டு வந்தார். மேள தாளம் தான் பாக்கி. வீட்டு ரேழியில் ஒரு புதிய டீப்பாய் வாங்கிப் போட்டு, அதன் மேல் டைப்ரைட்டரைக் கடவுள் சிலையைப் பிரதிஷ்டை பண்ணுகிற மாதிரி வைத்தார். டைப்ரைட்டரின் மேல் மூடிக்கு, காக்கித் துணியில் உறை தைத்தார். தினம் தினம் இரண்டு முறையாவது டைப்ரைட்டரைத் தூசி தட்டித் துடைப்பார். ஆயில் போடுவார். தம்மைத் தவிர வேறு யாரும் அதில் டைப் அடிக்கக் கூடாது. தொடவே கூடாது. தொட்டாலே கெட்டுப் போகுமாம். (அவருடைய சைக்கிளையும் அப்படித்தான் அவர் பாதுகாத்து வந்தார்.) ''ஒரு மனுஷனுக்கு டைப்ரைட்டர், சைக்கிள், மனைவி—இது மூன்றும் ஒன்றுதான். வேறெ ஒருத்தரும் தொடப் படாது'' என்பது அவர் சித்தாந்தம்.

அவர் கல்யாண ஃபோட்டோ ஒன்று அவர் வீட்டில் இருந்தது. பாக்கியம் — பெயரளவில் தான் அவள் பாக்கியம் — நாற்காலியில் அமர்ந்திருக்கிறாள். பஞ்சு, மயில் கண் பட்டுக் கரை வேஷ்டியைத் தட்டுச் சுற்றாகக் கட்டி, அரைக்கைச் சட்டை அணிந்து, நாற்காலியை வலது கையால் தொட்டுக் கொண்டு நிற்கிறார். அதே மாதிரி ஒரு ஃபோட்டோ டைப்ரைட்டருடன் அவர் எடுத்துக் கொண்டார். ஆயுத பூஜை அன்று, டைப்ரைட்டருக்கு மாலை போட்டு, சந்தனம் குங்குமம் வைத்து, அதன் பக்கத்தில் அவர் நிற்கிற 'போஸ்'. அந்தப் போட்டோவும் ரேழியில், டைப்ரைட்டருக்கு மேலே, சுவரில் தொங்குகிறது.

இது வரை அம்மா மாட்டியிருந்தது. இனி, அதற்கும் மாலை போடலாம்.

பஞ்சு, பாவம், காலமாய்விட்டார்.

உமாபதி வேளாங்கண்ணி எதிரில் நிற்கிறார்.

நின்றவாறே, கால் செருப்பைக் கழற்றிப் போட்டார் உமாபதி.

''சீக்கிரம் ஆவட்டும். நான் ஜல்தியாப் போகணும் ஆபீசுக்கு. இப்பப் பார்த்து அறுந்து தொலஞ்சிது!''

வேளாங்கண்ணி செருப்பை எடுத்து, நூலுக்கு மெழுகு தடவி, ஊசியில் கோத்து, செருப்பில் துளை போட்டுத் தைக்கத் தொடங்கினான்.

''வரப்ப, தெரு முக்குலே ஒரு பொணம் போச்சு. சந்தடி இல்லாமெ, ரகசியமா எடுத்துட்டுப் போறாப்பலே போறாங்க. யாரு பூட்டது? ஐயிரு ஊடா?''

கழுத்து வேர்வையைக் கைக் குட்டையால் துடைத்துக் கொண்டே கேட்டார் உமாபதி.

வேளாங்கண்ணி, கையில் பிடித்திருந்த ஊசியால் தெருவின் எதிர்ச் சரகைக் காட்டினான்.

'' அவுருதாங்க! டைப் அடிக்கிற அய்யிரு. நேத்து ராத்திரி பூட்டாராம்.''

உமாபதிக்கு ஒரு திடீர் அதிர்ச்சி. நம்ப மானேஜரின் தம்பியாச்சே!

எதிர்ச்சாரியில் இடது பக்கமாய் நாலு வீடு தள்ளிப் போனால் பஞ்சுவின் வீடு. வீட்டுத் திண்ணையின் தூணில், ''Job Typing'' என்றும், ''டைப் அடிக்கப்படும்'' என்றும் எழுதிய அட்டை ஒன்று கயிற்றில் முடிந்து தொங்கும். அந்த வீட்டு ரேழியில் டைப் அடிக்கும் ஓசை அவ்வப்போது கேட்கும். வேலை கிடைத்த போதெல்லாம் பஞ்சு ரேழியில் உட்கார்ந்து டைப் அடிப்பார். பத்திரங்கள் எழுதுகிற வேலையும் உண்டு. அதற்குத் திண்ணையில் உட்காருவார். ரேழியில்

அதிக வெளிச்சம் இல்லே. அவர் பத்திரம் எழுதினால் சுத்தமாக இருக்கும். எழுதி எழுதிப் பழக்கம். ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில், அது சரியில்லே, இது சரியில்லே என்று இருப்ப மாட்டார்கள்.

''த்சொ... த்சொ...'' நாக்கைக் கழித்தார் உமாபதி. ''வயசாகலியே ! என்னவாக் கடந்தாரு ? நேத்தோ முந்தாநாளோகூட இப்படிப் போறப்ப டைப் அடிக்கிற சத்தம் கேட்டாப்பலே இருக்கே ?''

தையல் போட்ட செருப்பை அவர் எதிரில் வைத்தான் சக்கிலி.

''கொஞ்ச நாட்களாவே ஒடம்பு சொகமில்லீங்க அவருக்கு. அரைமணி ஒக்காந்து டைப் அடிச்சா மார் வலிம்பாராம். அவுரு ஒடம்பெ கவனிக்கக்கலே. புள்ள குட்டிக்காரரு. என்ன செய்வாரு ? நேத்து ராத்திரி சாப்பிட்டு, திண்ணேலே வந்து ஒக்காந்தாராம். மார் வலிங்றாராம் ; பூட்டாரு. யாரு வந்தாங்களோ, யாரு வல்லியோ நேத்து ராத்திரி போனாரு; இதோ காத்தாலெ எடுத்தும் பூட்டாங்க.''

உமாபதி வேலேயாக இருந்த ஆபீஸில் பஞ்சுவின் தமையன் கைலாசம்தான் மானேஜர். பஞ்சு சிறிது காலம் கலெக்டர் ஆபீஸில் டைப்பிஸ்டாக இருந்தது எல்லோருக்கும் தெரியும். அவர் வேலேயை விட்டதும் தெரியும். பஞ்சு தகப்பனாரைக் கொள்ளக் கூடாதோ? தாத்தாவைக் கொண்டிருந்தார். பேச்சில் சற்றும் நயம் என்பதே கிடையாது. என்ன பேசினாலும் குதர்க்கமான பேச்சு. மேலதிகாரிகள் என்றால் அலட்சியம். சிலரைப் போலக் கூழைக் கும்பிடு போட வராது. அதனால், டெபுடி கலெக்டர் பக்கிரியா பிள்ளைக்கும் அவருக்கும் ஒத்துக்கொள்ளாமற் போயிற்று. சம்பளம் போதவில்லே என்று மாலேயில் அவர் ஆபீஸ் நேரத்துக்குப் பின் இரண்டொரு கம்பெனிகளில் டைப் அடித்துக் கொடுத்துச் சம்பாதிப்பதை யாரோ டெபுடி கலெக்டரிடம் வத்தி வைத்து விட்டான். ''ஓய்! இது சர்க்கார் சிப்பந்திகளின் காண்டக்ட் ரூல்ஸுக்கு விரோதம். சர்க்கார் சிப்பந்திகள் வேறே வேலெ எதுவும் பார்க்கக் கூடாது. தெரியுமா?''

ஒரு நாள் டெபுடி கலெக்டர் துரை பஞ்சுவை அதட்டினார்.

பஞ்சு பவ்யமாகப் பதில் சொல்லியிருக்கலாம். அந்த வழக்கம்தான் அவரிடம் இல்லேயே.

''சர்க்கார் சட்டங்கள் எனக்குத் தெரியும். என் வீட்டில் என்னோடு ஏழு வயிறுகள். அந்த வயிறுகளுக்கு இது தெரியவில்லேயே?'' இப்படிச் சொன்னதில் சாமர்த்தியமாகப் பதில் சொன்னதாக வேறு எண்ணம். ஒரு சிரிப்பு.

''இந்தப் பேச்செல்லாம் உதவாது. ரூல் இஸ் எ ரூல்! இன்னமே நீங்க வேறெ வேலே பார்க்கறதாச் தெரிஞ்சா ஒம்ம மேலே ஆக்ஷன் எடுக்க வேண்டி யிருக்கும்'' என்றார் பிள்ளேவாள்.

பஞ்சு உடனே 'ஆக்ஷன்' எடுத்து விட்டார். கால் கடுதாசி எடுத்து, ராஜிநாமாக் கடிதம் எழுதி நீட்டினார்.

''இப்படி அவசரப்படலாமா? சம்சாரி. வேறெ வேலே பார்த்துண்டுன்னு இருக்கிற வேலேயை விடணும்?'' என்று கைலாசம் கோபித்தபோது, ''ஒருத்தங்கிட்டயும் இன்னமே கைகட்டிச் சேவகம் பண்ணப் போவதில்லே'' என்று வீட்டிலேயே ''ஜாப் டைப்பிங்'' ஆரம்பித்து விட்டார் பஞ்சு.

பஞ்சுவுக்குக் கல்யாணமான ஏழெட்டு வருஷங்களுக்குள் இரண்டு பெண்கள், மூன்று பிள்ளேகள்.

ராமஸ்வாமி என்கிற மூத்தண்ணு (டெல்லியில் அதிகாரியாக இருக்கும் கே. ஆர். அய்யர்) ரொம்பக் கெட்டிக்காரர். ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்று ஒரே பிள்ளே அவருக்கு. இரண்டாவது பிள்ளே கைலாசத்துக்குச் சாமர்த்தியத்திலும் இரண்டாவது ஸ்தானம். ஒரு பிள்ளே ஒரு பெண்ணோடு நிறுத்திக்கொண்டார். பஞ்சுவுக்கோ அப்பா இருக்கும்போதே ஐந்தும் பிறந்தாச்சு.

தம்பி காரியத்துக்கு ஏற்பாடெல்லாம் கைலாசம் தடபுடலாகச் செய்தார். கிராமத்திலிருந்து பாக்கியத்தின் தமையன் வந்தான். ''வேலேயை உட்டுட்டு இப்படி வீட்டோடெ இருக்கானேன்னு சொல்லிண்டு இருந்தோம். இப்ப அஞ்சு ஜீவன்களெ நட்டாத்துலெ விட்டுட்டுப் போயிட்டான்.'' என்று தங்கையைப் பார்த்து அங்கலாய்த்தான். அவனுக்கும் வசதி இல்லே. செட்டியார் கடையில் குமாஸ்தா. சொல்ப சம்பளம். இத்தனே பெரிய குடும்பத்தைத் தன் காலில் கட்டிக்கொள்ள முடியுமா?

வாத்தியார் கேட்டார்: ''காரியம் ஒம்பதாம் நாள் ஆரம்பிச்சாப் போதுமோ இல்லியோ?''



''ஹுஹும்... எதுக்குங்காணும் ஒம்பதாம் நாள் ஆரம்பிக்கிறது? இப்பவே ஆரம்பிக்க வேண்டியதுதான். எதுக்காக அவனெ ஒம்பது நாள் பட்டினி போடணும்கிறேள்?'' என்று அதட்டினார் கைலாசம்.

''ஒடனே ஆரம்பிக்கிறதுதான் விசேஷம். சௌகரியம் எப்படி இருக்குமோன்னு சொன்னேன்....''

''சௌகரியம் என்ன சௌகரியம்! செலவானால் ஆயிட்டுப் போறது. ரெண்டு தலைமயன்கள் இருக்கோம். வேண மனுஷா இருக்கா. அதுக்கென்ன கொறைச்சல்? அண்ணா அநேகமாப் பத்தாநாள்தான் வருவான். நாம்பபாட்டுக்கு ஆரம்பிச்சுடுவோம். எல்லாரும் புள்ளெ குட்டிக்காரா. நாளக்கி எல்லாரும் நன்னா இருக்க வேண்டாம்?''

கைலாசத்துக்கென்ன? பி. டபுள்யூ. டி. ஆபீசில் மானேஜர். வாயசைச்சாப் போதும். எல்லாம் நடந்துடும்! — எல்லோரும் வியக்கும் வண்ணம் அத்தனை விதரணையாகத் தம்பியின் காரியங்களை நடத்தினார் கைலாசம்.

சும்மாவா அவர் வாயசைத்தார்? ஆபீஸில் ஒரு தர்பாரே நடத்தினார்.

''யாரு? வாண்டையார்வாளா? வாங்கோ வாண்டையார்... உக்காருங்கோ!... ஒங்க பில்தானே?... ரெடியாயிடுத்துன்னு! ஈ. இ. சைட்லேருந்து வந்த ஒடனே கையெழுத்தாயிடும். இருந்து செக்கெக் கையோடெ வாங்கிண்டு போயிடலாம்!''

வாண்டையாருக்குக் குஷி.

''எனக்குத் தெரியும்! இன்னிக்குப் பில் பாஸாயிடும்னு! நீங்க இருக்கிற வரைக்கும் எங்களுக்கு என்ன கொறைச்சல்?''

''என்ன பிரமாதம்? ஒங்களுக்காக நாங்க இருக்கோம். எங்களுக்காக நீங்க இருக்கீங்க; கவர்மெண்ட் வேலையே நடத்திக் குடுக்க. இல்லியா? ஹி...ஹி...ஹி... இன்னிக்கு ஆபீசுக்கு வர முடியுமான்னே சந்தேகமாயிடுத்து. வாண்டையார்வாள்! ஒங்க பில்லெல்லாம் போகணுமேன்னு வந்தேன். என் தம்பி போயிட்டான். கேள்விப்பட்டிருப்பீங்களே?''

''ஆமாம் ஸார். கேள்விப்பட்டேன். ரொம்ப வருத்தமா யிருந்தது...''

''காரியத்தை முடிச்சிண்டு அவசரமா வந்தேன். ஒரு நாள் நான் இங்கே இல்லேன்னா வேலெ ஜாடாவா நின்னு போயிடறது. பில் எதுவும் நகராது. பில் போகலேன்னா, ஒங்களுக்குப் பணம் இல்லே. உங்களுக்கும் பணம் இல்லேன்னா சர்க்கார் வேலெ நகராது. இல்லியா? ஹி...ஹி...ஹி...ஹி... ஆனா, என்னாலெ ஆபீஸ் வேலையும் பார்த்துண்டு இந்தக் காரியத்துக்கும் அலையறதுன்னா முடியல்லே. நீங்க ஒரு சின்ன உதவி பண்ணினாத் தேவலையே வாண்டையார்வாள்!''

''என்ன சொல்லுங்க. ஒங்களுக்கு இல்லாத உதவியா?''

''ஒண்ணும் இல்லே. காரியத்துக்கு வேண்டிய வெத்தலெ, பழம், தேங்கா...''

''அதுக்கென்ன ஸார்? நாளெக் காலையிலே அனுப்பி வைக்கிறேன். பொழுது விடியறதுக்குள்ளார வந்துரும். தேங்கா நூறு போதுமா?''

''ஹெஹேம்! நூறென்னத்துக்குன்னு...''

''பரவாயில்லெ ஸார்! எதுக்கும் இருக்கட்டும். முத்தக் காயா வாங்கினால் கெட்டுப் போகாது.''

வாண்டையார் போன சற்று நேரத்தில் மணிவாசகம் பிள்ளை.

''வாங்கோ பிள்ளைவாள்! என்ன, இந்தப் பக்கமே காணும்? இப்பல்லாம் நீங்க டெண்டர் குடுக்கிறதே அபூர்வமா யிருக்கு! சர்க்காருக்கு ஒங்க தயவு இல்லே!...''

''என்னங்க, அப்படிச் சொல்லிப்போட்டீங்க? டெண்டர் குடுக்கத்தானே வர்றேன். ஈ. இ. ரூமுக்குப் போயி, பொட்டியிலே டெண்டரைப் போட்டுட்டுத்தான் ஒங்க கிட்ட வர்றேன்...''

''எந்த வேலைக்கு?''

''பெத்தபெருமாளூர்ச் சானல்.''

''ம்ம்ம்...''

''என்னங்க, ம்ம்ம்கிறீங்க? எல்லார் கிட்டேயும் சொல்லியாச்சு. அவுங்களும் ஒத்துக்கிட்டாங்க.''

''பலே! ஒமக்குச் சொல்லித் தரணுமா? ஹி...ஹி...ஹி... என்னமோ சொல்லுவாங்களே... மீன் குட்டிக்கு நீஞ்சக் கத்துக் குடுக்கணுமான்னு!... அதிருக்கட்டும், பிள்ளைவாள்! ஒம்மப் பார்த்ததும் ஞாபகம் வறது. ஒம்ம கேட்டாத்தான் நடக்கும். நம்ம தம்பி இருந்தானே? காலமாயிட்டான்.''

''கேள்விப்பட்டேன். ச்சொ, ச்சொ!''

''...காரியத்துக்குப் பத்தாறு ஒரு நாலு ஜோடி, பத்துக்கு எட்டு ஒரு நாலு ஜோடி வேஷ்டி எங்கே வாங்கினால் நல்லதாக் கிடைக்கும்? சொல்லுங்கோ...''

''என்ன ஒணும்னாலும் ராமசாமி சாகிட்டக் கிடைக்கும். நாளெ சாயங்காலம் வாங்கியனுப்பறேன். போறுங்களா?''

''போறும். செக்காக் குடுத்துடவா, இல்லெ....''

''என்னங்க, நீங்க ஒண்ணு! இப்ப என்னங்க அவசரம் செக்குக்கு? பாத்துக்கலாம்!''

''சே சே! அப்படியா?''

''பரவாயில்லீங்க; நீங்க ஒண்ணு!''

அடுத்து, காண்ட்ராக்ட் மணி அய்யர்.

''குட் மார்னிங், மானேஜர் ஸார்!''

''வாங்கோ மணி அய்யர்வாள்! செக் வாங்கிண்டாச்சோன்னோ?''

''ஆச்சு. ஒங்க தயவுலே.''

''உங்க தயவுதான் ஸ்வாமி வேணும், எனக்கு இப்ப!''

''சொல்லுங்கோ.''

''எந்தம்பி காரியம் நடந்திண்டிருக்கு. ஒக்காருங்கோ; நிக்கறேளே!... ம்... இந்த வைதீகாள் சமாசாரம்தான் தெரியுமே? புடுங்கி எடுக்கறான்கள்! ஒரு ராப்பட்டினி எங்கம்மா கிட்டச் சொல்லியிருக்கு, கோதானம் பண்ணினாப் புள்ளெ நேரே சொர்க்கத்துக்குப் போயிடுவான்னு! ஒரு பசு மாடு வேணும். சின்னதா, மட்டமா யிருந்தாப் போறும். தானத்துக்குத்தானே? எனக்கு மாடு வாங்கி அனுபோகம் இல்லெ. ஹெட் கிளார்க் சொன்னார் உங்களைக் கேட்டுப்பாக்கலாம்னு.''

''வெள்ளிக் கிழமை சந்தெலெ வாங்கலாம். என்னோட வாருமே ஸிக; எமகாதகன்! அவங்கிட்ட வாயசைச்சாப் போறும்; மாட்

வின்ஸ்டன் சர்ச்சில் புகைப்படக்காரர்களுக்குப் போஸ் கொடுப்பதற்கு என்று தனியாகப் பையில் பாதி குடித்த சுருட்டு ஒன்றை வைத்திருப்பாராம்.

— பாலி - வீக் எண்ட்



திருநெல்வேலி டாக்டர் S. கோவிந்தன் அவர்கள் சகோதரியும், Dr. G. சுப்பிரமணியம் அவர்கள் குமாரத்தியுமான சௌ. மஞ்சுளாவுக்கும், மதுரை ஸ்ரீ M. N. மீனாட்சிசுந்தரம் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி பிரகாசத்துக்கும் சென்னை சுகன் விஹார் திருமண மண்டபத்தில் 23-1-76 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !



இத்தாலி நாட்டில் கர்ப்பமாக இருக்கும் பெண்களை சிறையில் அடைக்க மாட்டார்கள். 1957ல் அங்கு மாசெட்டியா என்ற பெண்ணுக்குச் சிகரெட் திருடிய குற்றத்துக்காகச் சிறைத் தண்டனை கிடைத்தது. அப்பொழுது அவள் கர்ப்பமாக இருந்ததால் தள்ளிப் போடப்பட்டது. ஆகவே அவள் ஆண்டுக்கு ஆண்டு கர்ப்பமாக ஆரம்பித்தாள். இப்பொழுது அவளுக்குப் பத்தொன்பது குழந்தைகள். இது உண்மையில் நடந்தது. இந்த நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டுதான் 'எஸ்டர் டே, டுடே, டுமாரோ' என்ற படத்தில் சோபியா லாரன் இம்மாதிரி ஒரு பாத்திரத்தில் நடித்தார். — கே. ஆர். - 'வீக் எண்ட்'

டையும் கன்னியையும் கொண்டு வந்து கட்டிப் புடுவன்! என்னிக்கி வேணும்?''

''நாளைக்கு எட்டாம்நாள்! என்ன எழுந்துட்டேன்? காப்பி சாப்பிட்டுப் போகலாம்னு...''

கைலாசம் தம்பியின் கிருத்தியங்களை ஒண்ணுலே ஒண்ணு குறைச்சல் இல்லாமல் சாஸ்திரோக்தமாக நடத்தி விட்டார்.

மூத்த பெண் பாலாவுக்குத்தான் பஞ்சு கல்யாணம் பண்ணி யிருந்தார். அதிலும் அண்ணாவோடு தகராறு. கைலாசம் பொருக்க பண்ணின வரன் அவருக்குப் பிடிக்கவில்லை. அந்த வரன் தஞ்சாவூரில் என்ஜினீயர் ஆபீஸில் ஹெட் கிளார்க். நாற்பத்திரண்டு வயது. சம்சாரம் மூன்று குழந்தைகளை விட்டுவிட்டுப் போய்விட்டாள். கைலாசத்திடம் அவர் முன்பு வேலை செய்தவர். ஹெட் கிளார்க் பிரமோஷன் ஆவதற்கு முன்பு. ''நல்ல மனுஷன். இவனையானாக் கொடுக்கலாம்'' என்றார் கைலாசம்.

''இருபத்திரண்டு வயசு வித்தியாசமாச்சே?''

''அதனால் என்ன? இந்தக் காலத்திலே நாற்பது வயதுக்குத்தான் ஒவ்வொருத்தன் கல்யாணமே பண்ணிக்கிறான்!''

கைலாசம் வார்த்தை எடுபடவில்லை. கும்பகோணம் மகாலிங்க சாஸ்திரியின் பிள்ளையை முடித்துவிட்டார் பஞ்சு. சாஸ்திரிக்கு உபாத்யாயம். பையனும் அவரிடம் வேதம் பயின்று கொண்டிருந்தான்.

கைலாசம் தாயாரிடம் சொன்னார்:

''ஓம்புள்ளே காரியத்தைப் பார்த்தியோன்னோ? படிச்சவனா, உத்தியோகம் பண்றவனாப் பார்த்துச் சொன்னா, ஏத்கல்லே! சாஸ்திரி புள்ளெக்கிக் கொடுக்கிறானாம் தம் பொண்ணெ!''

''சாஸ்திரியானா என்ன? சிறு பையன். கட்டுக் குடுமியோட ராஜா மாதிரி இருக்கான். தினம் வேதம் சொல்லிண்டே இருப்பான். அப்படிப்பட்டவனுக்கு ஒரு கன்னிகையைத் தானம் பண்ணினா எத்தனெ நல்லது குடும்பத்துக்கே. ஒருத்தனுக்கும் அவன் சலாம் போட்டுப் பொழைக்க வேணும். எல்லாரும் அவனுக்குக் காசு பணமாக் குடுத்து அவன் கால்லே விழுந்து அக்ஷதை போட்டுக்கணும்!'' என்றார் பஞ்சு.

பெண் கல்யாணத்துக்கு அவர் தமையன்களிடம் பண ஒத்தாசை கேட்கவில்லை. கேட்பாரோ என்று அவர்கள்தான் பயந்த மாதிரி இருந்தது. டெல்லி அண்ணா எழுதினார்:

''டெல்லியிலே வேலேன்னா அங்கே எல்லோருக்கும் மலைப்பா யிருக்கும். பேர்தான் பெத்த பேரே ஒழிய, உள்ளூர்லே நாறு ரூபா சம்பாதிக்கிறது மாதிரி வராது. இங்கே தொட்டதுக்கெல்லாம் காசு. பணத்தைத் தான் தின்கிற மாதிரி இருக்கு...''

இல்லை என்பதைச் சுற்றி வளைத்துக் கூறினார் கைலாசம்.

''நீயாவது உன் மச்சினன் கிராமத்துக்குப் போயி, ரெண்டாம் பேருக்குத் தெரியாம கல்யாணத்தைப் பண்ணிப்புட்டு வந்துடுவே. நான் கமலத்துக்கு அப்படிப் பண்ணமுடியுமா? 'ஒரு பொண்ணெ வச்சிண்டு, ஆபீஸ் மானேஜர் எங்கேயோ போய்க் கல்யாணம் பண்ணிட்டு வந்துட்டார், நமக்கெல்லாம் சாப்பாடு போடப்படாதுன்னு' என்று சொல்லிக் காட்டுவார்கள். இங்கே பண்றதுன்னா என்ன செலவாகும்னு நினைச்சண்டிருக்கே? தெரியாதவா கிடையாது. யாரைக் கூப்பிடறது, யாரைக் கூப்பிடாம இருக்கிறது? நெனச்சாலே தலையைச் சுத்தறது. செலவுக்கு என்ன பண்ணப் போறோம்னு இருக்கு...''

தம்பியைக் கையேற்றிய கையோடு கைலாசம், அவர் குடும்பத்தை ரயிலேற்றினார். கும்பகோணத்தில் மாப்பிள்ளை பிள்ளையாண்டானோடு அவர்கள் இருக்க வேண்டும் என்பதாக ஏற்பாடு.

இந்தச் சாவு கலாட்டாவில் பஞ்சுவின் டைப்ரைட்டருக்குத்தான் அடித்தது யோகம்! ரேழியில் முடங்கியிருந்தது பெரிய இடத்துக்குப் போயிற்று! பாக்கியத்திடம் மூந்நூறு ரூபாய் கொடுத்துவிட்டுக் கைலாசமே அதை வாங்கிக் கொண்டார். அவர் பிள்ளை ரமணி டைப்ரைட்டிங் லோயரும் ஹையரும் பாஸ் பண்ணி யிருந்தான். தம் வீட்டுக் காம்பவுண்டுக்குள் ஒரு ஷெட் அமைத்தால் அவன் ஒரு டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் நடத்துவான். வாயசைத்தால் போதுமே. எந்த கண்டிராக்டராவது போட்டுத் தர மாட்டானா ஒரு ஷெட்? பழைய டைப்ரைட்டர்கள் நாலு வாங்கிப் போட்டார் கைலாசம். நாலோடு ஐந்தாக இருக்கட்டுமே என்று பஞ்சுவின் டைப்ரைட்டரையும் வாங்கினார்.


சம்சாரம் கேட்டாள்:

''தம்பி கார்யத்துக்கு இத்தனெ வன்னம் செஞ்சது போறாதுன்னா, இது வேறேயா? என்னமோ சொல்லுவாளே, கொழக்கட்டை தின்னப் புள்ளையாருக்குக் குருணி மோர் குரு தக்ஷிணைன்னு...''

அமுத்தலாகச் சிரித்தார் கைலாசம்.

''இப்பல்லாம் டைப் அடிக்கிற மிஷின் என்ன வெலெ தெரியுமோடி நோக்கு?''

ஒட்டைச்சிவிங்கிக்குக் கத்தத் தெரியாது.


Nirlon
அதி அற்புதங்கள் நிறைந்தது!
Nirlon
Interpub/Nir/4/75/TH

யக்ஷி கானம்

ஆவிகள் உலகத்தை நம்புகிறவர்களுக்கு ஓர் அருமையான திரைக் கதை — நம்பாதவர்களுக்கு ஒரு புதுமையான திரைப்படம். தமிழ் நாட்டு ''மேதாவி''யின் மூலக் கதை இம்மலையாளப் படத்தின் திரைக் கதைக்கு ஆதாரம்.


சாவித்திரி, தன் கணவனுடனும் அண்ணனுடனும் அவர்களுடைய எஸ்டேட் பங்களாவுக்குச் செல்கிறாள். அங்கே, தன் கணவனின் காதலியான ரஜனியின் ஆவியைப் பார்க்கிறாள்; அது காலில் அணிந்திருந்த தண்டைச் சிலம்பின் 'ஜல் ஜல்' என்ற ஒலியையும் அடிக்கடி கேட்கிறாள். ஆனால் அந்த ஆவி, அவள் அண்ணனின் கண்களுக்கும், கணவனின் கண்களுக்கும் புலனாகவில்லை; சிலம்பொலியும் கேட்கவில்லை. சாவித்திரி அடிக்கடி ஆவியைக் கண்டு மிரள்கிறாள்; சிலம்பொலியைக் கேட்டு நடுங்குகிறாள்; நள்ளிரவில் விழித்துக் கொண்டு அருவிப் பக்கம் போகிறாள். ரஜனியின் ஆவி சாவித்திரியின் உடலில் புகுந்திருந்தபோது ரஜனியின் தாயாரைப் பார்த்ததும் அவள் மிரண்டு விடுகிறாள். அந்த இடம் படம் ஆக்கப்பட்டிருக்கும் விதம் சிறப்பாயிருக்கிறது. ரஜனியின் ஆவி சாவித்திரியின் உடலில் அடிக்கடி புகுந்து கொண்டு அவளை ஆட்டிப் படைக்கிறது.

சாவித்திரியாக வரும் ஷீலா அருமையாக நடித்திருக்கிறார். சாவித்திரியின் சாதாரண நிலை, ரஜனியின் ஆவி அவளுக்குள் புகுந்த நிலை — இது இரட்டை வேடம் மாதிரிதான். மிகவும் கச்சிதமான நடிப்பு. இப்படத்துக்குத் திரைக் கதை தயாரித்து டைரக்ட் செய்திருப்பவரும் ஷீலாதான். இரு மிகப் பெரிய பொறுப்புக்களை ஏற்று மகத்தான சாதனை புரிந்திருக்கிறார் என்றுதான் கூற வேண்டும். சாவித்திரியை அமைதியான நதி என்றால்; ரஜனியை ஒரு காட்டாறு என்று கூற வேண்டும். இரு வேறு இயல்புகள் கொண்ட பாத்திரங்களை ஏற்று அதியற்புத முகபாவங்களினாலேயே அவற்றுக்கு உயிர் கொடுத்திருக்கிறார், ஷீலா.

ரஜனியின் பூர்த்தியாகாத காதல், கொடுமையாக வஞ்சிக்கப்பட்ட அவளது சோக முடிவு — மிகவும் விறுவிறுப்பான (Flash back) உத்தியில் எவ்விதச் சிக்கலும் இல்லாமல் காட்டப்படுவது பாராட்டுக்குரியது. அடிக்கடி கேட்கும் யக்ஷகானத்தின் இசை கதைக்கு மேலும் மர்மம் சேர்க்கிறது. மலைகளும், மலைவீழ் அருவியும், மலைப் பாதைகளும் படப் பிடிப்பின் தரத்தை உயர்த்துவதாயிருக்கின்றன.

தமிழ்ப் படத்திலே சோபிக்காத உஷா நந்தினி ரஜனியாக மலையாளப் படத்தில் நன்கு சோபிக்கிறார். சாவித்திரியின் கணவன் பாத்திரம் படத்தில் எடுபடவில்லை-மனைவியின் மாறுதலைக் கண்டு எவ்வித உணர்ச்சியையும் காட்டவில்லையே! கணவனாக வருபவர் மது. சாவித்திரியின் அண்ணனாக வருபவர் உம்மர். இவருக்குப் படத்தை முடித்து வைக்கும் பொறுப்பு இருக்கிறது. படத்தின் கோரமான முடிவு வேதனையாகத்தான் இருக்கிறது. ' செக்ஸ் ' கொஞ்சம் அதிகம்தான். ரஜனியை அவளது மாமன் கெடுக்கும் கொடூரமான காட்சியும், அவள் அருவியில் விழுந்து உயிர் துறப்பதும் மிகவும் வேதனையான காட்சிகள். நம் தமிழ்ப்படப் பின்னணிப் பாடகர்களான ஜேசுதாஸ், சுசீலா, ஜானகி, எல். ஆர். ஈசுவரி ஆகியவர்களின் மலையாளப் பாடல்கள் இனிமையாயிருக்கின்றன. மல்லி இரானியின் ஒளிப்பதிவு படத்தின் தனிச் சிறப்பை ரசிகர்களின் மனத்தில் நன்கு பதிவு செய்கிறது. இப்படம் ''மதி ஒளி'' சண்முகத்தின் தயாரிப்பு.

அப்ஸரா கம்பைன்ஸின் ''யக்ஷ கான''த்தைப் பார்ப்பவர்கள் சிலிர்ப்பு அடங்க நீண்ட நேரமாகும்! — காந்தன்





7
ஒரு கோடி
கதை:
கௌசிகன்
சித்திரம்:
ம. செல்வன்
அந்த இடத்தில் அந்த வேளையில் லக்ஷ்மணனைக் கண்ட சாரு திக்கித்துப் போனாள்.
அவளை இழுத்து வா இப்படி...
அவளையுமா...?
சாருவை நோக்கி வரும் லக்ஷ்மணின் கூட்டாளி மீது மாதவன் குபீரென்று பாய்கிறான்.
சாரு! ஓடு, ஓடிவிடு... அவன் சுடமாட்டான். உன்னைக் கொல்ல மாட்டான் அவன். ஓடிவிடு.
மாதவனின் ஆணைப்படி சாரு ஓடலானாள்.
இந்த நிலையில் மாதவனை விட்டுப்பிரிய மனமில்லைதான். ஆனால் அவர்கள் குறி என் மீதல்லவா?
அந்த நாட்டுப் புற உடையும், காலணிகளும் அவளை வேகமாக ஓட விடாமல் செய்தன.
ஆ...ஊ...!
தடுமாறி விழுந்த சாரு சமாளித்து எழுவதற்குள்...
அப்பாவைப் போலவே பெண்ணும். துணிச்சலும் பிடிவாதமும் பகவான் தராதம்மா. இனி தப்பிப் போக முடியாது. உன் அப்பாவும் இனி எங்கள் வழிக்கு வருவார்.
என்னைக் கொன்று அவரைப் பணியவைக்கலாம் என்று கனவு காண வேண்டாம். அது நடக்காது.


சாருவுடன் லக்ஷ்மண் மாதவனிடம் வருகிறான்.
'பயலை தீர்த்து விட்டேன்' பாஸ்! இவளை என்ன செய்யலாம்?
மாதவன்...! நீ.... நீங்கள் அவரைக் கொன்று விட்டீர்களா? ஐயோ...
அவளையும் நம்மோடு தூக்கிப் போகலாம்.
லக்ஷ்மண் கார் தயாராக இருந்தது.
இதபாரும்மா! நல்ல தனமா நடந்துக்க. கூச்சல் கீச்சல் போட்டு உதவிக்கு ஆளைக் கூப்பிட்டே, உன் கூட்டாளி குளோஸ்! புரிஞ்சுக்கோ.
ஐயோ! நெஞ்சுக்கு அஞ்சாத கொடியவர்கள். சொன்னபடி செய்வார்கள்.
இருளைக் கிழித்தபடி கார் போய்க் கொண்டிருந்தது. மாதவனுக்கு நினைவு திரும்பவில்லை. சாருவோ நினைவுகளில் குழம்பிக் கொண்டிருந்தாள்.
'உன் அப்பாவும் இனிமேல் எங்கள் வழிக்கு வருவார்' என்றானே இந்தப் பாவி. என்னைக் காட்டி அவர் உறுதியைக் குலைக்கப் போகிறார்களோ? ஐயோ, அப்பா! நீங்கள் எங்கிருக்கிறீர்கள், எந்த நிலையில்...?
நீண்ட பிரயாணத்துக்குப் பிறகு கார் நின்றது. ஓர் ஏரிக்கரை ஓரமாக. அது ஒரு கிராமம்.
வசதிமிக்க விடுதிக்கு உன்னை அழைத்துப் போக முடியாததற்கு வருந்துகிறேன். கிராமத்துக் குடிசை யானாலும் சுத்தமாக இருக்கும். இரவைக் கழிக்கலாம் நிம்மதியாக.
கிராம வாசிகளிடம் அன்புண்டு. அது போதும்.
சாரு எதிர் பார்த்தபடி அது குடிசையல்ல. மோசமாகவுமில்லை. ஆனால் குளிரைத் தடுக்கும் அமைப்பில் இல்லை.
நிறையக் கம்பளிகளும் போர்வையும் தரச் சொல்லுகிறேன்.
உங்கள் அன்புக்கு மிக்க நன்றி.
நீ எங்களைப் புரிந்து கொண்டது போல உன் அப்பா தெரிந்து கொள்ள வில்லையே. உன் நன்மைக்காகச் சொல்லுகிறேன். அவரைச் சரிப்படுத்துவது உன் பொறுப்பு. ஆனால் மறுபடி தப்பி ஓடி விட நினைக்காதே. உன் கூட்டாளியின் உயிர் எங்கள் கையில் என்பதை நினைவிருக்கட்டும்.
தொடரும்

பொறுமையில்லாமல் கையில் ரவியைச் சுமந்தபடி வாசலில் நின்று கொண்டிருந்தான், ரமேஷ். கையை அடிக்கடி திருப்பி 'ரிஸ்ட் வாட்சில்' மணியைப் பார்ப்பதும், உள்ளே திரும்பி ஜானு வருகிறாளா என்று பார்ப்பதுமாய்த் தவித்தான் அவன். அவன் எரிச்சல் கோபமாக மாறத் தொடங்கியது. 'மூளையில்லை' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

இத்தனைக்கும் காலையில் ஆபீசுக்குப் போகும் போதே அவளிடம், 'சாயங்காலம் ஐந்தரை மணிக்குத் தயாராக இரு' என்று படித்துப் படித்துச் சொல்லியிருந்தான்.

அவன் ஆபீசில் ஏதோ ஓர் உதவி நிதிக்காக



என்று டிக்கட் விற்றார்கள். அவன் இரண்டு டிக்கெட் வாங்கியிருப்பதாக ஜானுவிடம் சொன்ன போது, அவள் முகம் பூவாய் மலரவில்லை. ''இன்னும் இரண்டு டிக்கட்டுகளாவது சேர்த்து வாங்கியிருக்கக் கூடாதா ?'' என்றாள்.

கண்களில் கோபம் பொங்க அவளைத் திரும்பிப் பார்த்தான் அவன். ''எதற்கு இன்னும் இரண்டு டிக்கெட் ?''

''நீலா, மாலா இருவரையும் அழைத்துப் போகலாமே!'' என்றுதான்.

''ஏன், உன் நாத்தனார் இருவரையும் மட்டும் அழைத்துக் கொண்டு போனால் போதுமா ? உன் மாமனார், மாமியார், கொழுந்தன் எல்லோரையும் அழைத்துக் கொண்டு போகலாமே. அவர்களையெல்லாம் ஏன் விட்டுவிட்டாய் ?'' என்றான் ஆத்திரத்தோடு.

'நல்லதைச் சொன்னால்கூட இவருக்கு ஏன் தான் இப்படிக் கோபம் வருகிறதோ?' என்று எண்ணியபடி வாடிய முகத்துடன் உள்ளே சென்றாள் ஜானு.

ரமேஷின் இந்த விசித்திரப் போக்குக்குக் காரணம் இருந்தது. ரிடையரான அவன் தகப்பனார், தாயார், கல்யாணத்துக்கு நிற்கும் இரண்டு தங்கைகள், கல்லூரியில் படிக்கும் தம்பி இவ்வளவு நபர்கள் அடங்கியது அவன் குடும்பம். அவனுக்கு இதனால் பணக் கஷ்டம் என்று ஏதும் இல்லை. அவன் கை நிறையச் சம்பாத்தியம். அவன் தகப்பனாருக்குத் தாராளமாகவே 'பென்ஷன்' வந்தது. தங்கைகள் கல்யாணம் பற்றியும் கவலையில்லை. அவருடைய 'பிராவிடண்ட் பண்டு; இன்ஷ்யூரன்ஸ் சேமிப்பு போன்ற தொகை நிறைய பாங்கியில் இருந்தது. நல்ல வரன்கள் கிடைக்க வேண்டியதுதான் பாக்கி.

அவனுடைய மிகப் பெரிய குறையெல்லாம் இதுதான் ; ஜானுவுடன் அவன் அடிக்கடி தனியாகப் போக முடிவதில்லை. கோயில், குளம் என்றால் அவன் குடும்பமே புறப்படும். ஜானு, அவன் பக்கமே திரும்ப மாட்டாள். மாமியார், நாத்தனார்களுக்கு நடுவில் நல்ல பாதுகாப்பில் வருவாள்.

அவன் குழந்தை ரவியை அவளிடம் கொண்டுவிடும் சாக்கில் அவள் அருகில் போக முயல்வான். அந்த விஷமக்கொடுக்கோ தாத்தாவிடம் ஓடும். இவன் அசடு வழியத் தகப்பனாருடன் வந்து சேர்ந்து கொள்வான். இவன் படும் அவஸ்தையைப் பார்த்து ஜானு தனக்குள் குறும்பாகச் சிரித்துக் கொள்வாள்.

சினிமாவுக்குப் போனாலும் இதே கதை தான். தம்பி, தங்கைகள் நிச்சயம் உண்டு. அவன் பெற்றோர்கள் தம் பேரனை வைத்துக் கொண்டு வீட்டிலேயே இருந்துவிடுவார்கள். தியேட்டரில் ஜானு, நீலா — மாலாவுக்கு நடுவில் உட்கார்ந்துவிடுவாள். எத்தனை சொன்னாலும் அவன் அருகில் உட்காரமாட்டாள். கல்யாணத்துக்கு இருக்கும் பெண்கள் நடுவே அப்படியெல்லாம் நடந்துகொள்வது அசிங்கமாக இருக்குமாம்!

வெளியில் போகும்பொழுது அவர்கள் இருவரும் தனியாகப் போக வேண்டும். அவன்

மேல் உராய்ந்தபடி நடக்க வேண்டும். சினிமா தியேட்டரில் காதல் காட்சிகள் வரும் போது, அவள் தலையில் மல்லிகையை முகர்ந்தபடி இலேசாய் அவள் தோளை அணைத்துக் கொள்ள வேண்டும் என்று அவன் துடியாய்த் துடித்தான்.

ஜானு இதையெல்லாம் விரும்பாதவள் அல்ல. தனியாக இரவில் அவனுடன் இருக்கும்போது 'அவன் விருப்பப்படியெல்லாம் தாராளமாகவே இருந்தாள். ஆனால் அவனுக்கு இரவின் அந்தரங்கங்களைவிட இந்தப் பகலின் மின்மினி வெளிச்சமே அதிக மோக மயக்கத்தைக் கொடுத்தது.


''வெளியூருக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு விடுகிறேன், போகலாமா ஜானு ?'' என்றான் ஒரு முறை. ஜானு பதறிப் போய்விட்டாள். பெற்றோரினும் மேலாய் அவளை நேசிக்கும் மாமனார், மாமியார், 'மன்னி, மன்னி' என்று தோழியர் போல் அவளையே சுற்றி வரும் நாத்தனார்கள், கல்லூரியிலிருந்து வந்த உடனே மன்னியைத் தேடி வந்து அன்று கல்லூரியில் நடந்ததை யெல்லாம் கதை கதையாய்ச் சொல்லும் கொழுந்தன் இவர்களையெல்லாம் விட்டு விட்டுத் தனியே போகவாவது ? 'இவருக்கு ஏன்தான் புத்தி இப்படிப் போகிறதோ ?' என்று தனக்குள் அங்கலாய்த்துக் கொள்வாள் ஜானு. தாத்தாவின் செல்லமான ரவி படுசுட்டி ! தாத்தா இல்லாமல் அவனை மேய்க்க அவளால் முடியுமா ?

ரமேஷுக்கு அவன் குடும்பத்தின் மேல் நிறைய ஆசை இருந்தது. ஆனால் மனைவியுடன் இந்த மாதிரி உல்லாசங்களை அனுபவிக்க முடியாத ஆசை அவனைப் பைத்தியமாய் அடித்தது.

ஜானு நல்ல அழகி. ஆனால் ரொம்ப நாகரிகமாக 'டிரஸ்' செய்து கொள்ளமாட்டாள். அவன் அவளை 'லோஹிப்' கட்டிக் கொள் என்று வற்புறுத்துவான். ஆனால், அவளோ இடையே தெரியாதபடி இழுத்துப் போர்த்திக்கொண்டு வந்து நிற்பாள். 'நன்றாக இருக்கிறது, பெரியவர்கள் நடுவில் 'லோஹிப்' பாம், லோஹிப்'! உங்களுக்கு வேண்டுமானால் இராத்திரி கட்டிக் காண்பிக்கட்டுமா?' என்பாள். 'நான் தூங்கும்போது கட்டிக் கொண்டு நில்லு' என்று எரிந்து விழுவான் அவன்.


எதற்கெடுத்தாலும் தன் பெற்றோர்களையும் தங்கைகளையும் காரணம் காட்டியே அவள் தன்னை ஏய்ப்பதாகப் பொருமுவான். எரியும் தீயில் எண்ணெய் விட்டாற் போல் ஆயிற்று, எதிர்வீட்டுக்கு வந்த குடித்தனம்.

அவர்கள் கணவன் மனைவி இருவரே. இருவரும் வேலைக்குப் போனார்கள். அவன் ஜானுவைவிட ஐந்து வயது பெரியவளாம். ஜானுவைவிட இரண்டு வயது குறைத்துச் சொல்லலாம் போல் மேக்கப்பில் தோற்றம் அளித்தாள்.



முன்னழகும் பின்னழகும் தெளிவாய்த் தெரியும்படி இடையைவிட்டு இறங்கிய சேலை குதிகால் உயர்ந்த செருப்பு, பின்னாமல் வாரி விடப்பட்ட தலை, 'லிப்ஸ்டிக்'கால் சிவந்த உதடுகள். கைப் பையை இலேசாய்ச் சுழற்றியபடி அசைந்து, அசைந்து, அவள் வருவாள். அவன் அவள் பின்னால் வந்து வீட்டைப் பூட்டுவான். அவன் சரியாகப் பூட்டியிருக்கிறானா என்று பார்க்கும் சாக்கில் அவன் தோள் மேல் குனிந்து பூட்டை இழுத்துப் பார்ப்பாள். அப்படி அவளை நெருங்கிவரும் பொழுது அவள் கன்னத்தில் அவன் தன் உதடுகளைப் பதிப்பான். (சே ! இது ரொம்ப மோசம், ரோட்டில் மனிதர்கள் நடப்பதே அவர்களுக்கு ஞாபகம் இருக்காதோ ?) பிறகு ஸ்கூட்டரில் அவன் இடுப்பை வளைத்தபடி அவள் ஒய்யாரமாய் உட்கார்ந்ததும், அவன் 'விர்'ரென்று செலுத்திச் செல்லும் காட்சியை ரமேஷ் கண் கொட்டாமல் பார்த்துப் பொறாமைத் தீயில் மாய்ந்து போவான்.

ஜானுவை ஒரு முறையாவது அப்படி அழைத்துப் போக வேண்டும் என்ற தாபம் அவன் உள்ளத்தில் கொழுந்து விட்டு எரிந்



சம்பந்தி 1: **எங்களுடைய பரம்பரையே தன் சொந்தக் காலில் நின்ற பரம்பரை?**

சம்பந்தி 2: **அப்படியா?**

சம்பந்தி 1: **ஆம்! என் தாத்தா 'லிஃப்ட் ஆபரேடர்', என் அப்பா 'டிராஃபிக் போலீஸ்காரர், நான் 'கோர்ட் பியூன்!**

- சம்பத்குமாரி

தது. அதைச் சாக்காக வைத்து அவன் அப்பாவிடம் மெல்லத் தன் ஆசையை இப்படி வெளியிட்டான். ''அப்பா! எனக்கு ஒரு ஸ்கூட்டர் இருந்தால் ஆபீஸ் போய்விட்டு வர வசதியாக இருக்கும்.''

''நானே நினைத்துக் கொண்டிருக்கிறேன், ரமேஷ்! மாலா நீலா கல்யாணம் முடிந்தவுடன் காரே வாங்கி விடலாம், நம் குடும்பத்துக்கு ஸ்கூட்டர் அவசியம் இல்லையே, கார் என்றால் வசதியாக இருக்கும்.''

மனத்தில் பொங்கிய வெறுப்பை வெளியில் கொட்ட இயலாதவனாய்த் தவித்தான் ரமேஷ்.

'கார் வாங்கி எல்லோருமாய் அடைந்து கொண்டு போகலாம்' என்று அன்றெல்லாம் தனக்குள் பொருமியவண்ணம் இருந்தான்.

அவன் ஏங்கிக் கிடந்த நாளும் வந்தது. அவனுடைய சொந்த சித்தப்பா பெண்ணுக்குக் கல்யாணம். குடும்பத்துடன் எல்லாரும் வந்துவிட வேண்டும் என்று சித்தப்பா லெட்டர் போட்டு விட்டார். இவன் உள்ளம் குதிபோட்டது. ''ஆபீசில் இப்போது 'அவசர சட்டத்தால்' லீவே போட முடியாது'' என்று கதை விட்டான். காலம் இருக்கும் இருப்பில் திருட்டுப் பயம் வேறு'' என்றான்.

''நீ ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்கிறாயா, ரமேஷ்? ஜானு ரவியுடன் தனியே வேலை செய்யத் திண்டாடிப் போவாள். அவளும் எங்களுடன் வந்துவிடட்டும்'' என்றாள் அவன் அம்மா.

ரமேஷ் திடுக்கிட்டு விழித்தான். நல்லவேளையாக ஜானு சமாளித்தாள். ''நான் ரவியைச் சமாளித்துக் கொள்வேன் அம்மா. ஒரு வாரம்தானே. நாங்களும் கல்யாணத்துக்கு இரண்டு நாள் முன்பே வந்துவிடுகிறோம்'' என்றாள்.

ஆயிரம் புத்தி சொல்லிவிட்டு அரை மனத்துடன் எல்லாரும் டாக்ஸி ஏறினார்கள்.

கதவைத் தாளிட்டவுடனே பாய்ந்து வந்து ஜானுவைக் கட்டி முத்தமிட்டான் அவன். ''அப்பா! எனக்கும்'' என்றான் ரவி. துள்ளி விழுந்தவனாய் அசடு வழிய அவனுக்கும் ஒன்று தந்தான்.

ரவியைவிட ரமேஷைச் சமாளிப்பதுதான் ஜானுவுக்குப் பெரிய வேலையாக இருந்தது. இரண்டு நாள் லீவு போட்டுவிட்டு அடக்கி வைத்திருந்த ஆசையெல்லாம் தீர அவளுடன் ஊரெல்லாம் சுற்றினான். மூன்றாம் நாள் மனசே இல்லாமல் ஆபீஸ் போனான். நிஜமாகவே ஆபீஸில் கெடுபிடி அதிகம்தான். தினமும் ஆபீசிலிருந்து வந்தவுடனே சினிமா பீச் என்று அவளுடன் அலைந்தான்.

பூஞ்சையான உடம்பு ஜானுவுக்கு. இவனுடைய இத்தனை ஆட்டங்களையும் தாளவும், ஒண்டியாக வேலை செய்து கொண்டு ரவியைச் சமாளிக்கவும் அவளால் முடியவில்லை.

அன்று இரவு ரமேஷும் அவளுமாகக் கல்யாணத்துக்குப் புறப்பட 'ரிசர்வ்' செய்திருந்த 'டிக்கெட்டை 'கேன்ஸல்' செய்ய வேண்டியதாயிற்று. அவளுக்கு அனல் பறக்கும் ஜுரத்துடன் உடல் வலியும் தாங்க முடியவில்லை. கண் திறக்காமல் படுத்துவிட்டாள். ரமேஷ் தவியாய்த் தவித்தான். டாக்டரை அழைத்து வந்தான். ''ஏதோ புரிபடாத காய்ச்சலாக இருக்கிறது. நல்ல ஓய்வு அவசியம்'' என்று சொல்லி மருந்துகள் எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். ஒரு டம்ளரை நகர்த்திக்கூட இவனுக்குப் பழக்கமில்லை. அம்மா படுத்து விடவே ரவி தாத்தாவை நினைத்துக் கொண்டு அழத் தொடங்கி விட்டான்.

அவன் நச்சரிப்பைத் தாள முடியாமல் அதன் முதுகில் இரண்டு சாத்தினான். அடியே பட்டிராத ரவி மேலும் காட்டுக் கத்தலாய்க் கத்தினான். வெந்நீர் வைப்பதற்குள் நாலு முறை கையைச் சுட்டுக் கொண்டான். இரண்டு நாள் கழிவதற்குள் இரண்டு யுகம் ஆனது போலத் தவியாய்த் தவித்து விட்டான்.

இவர்கள் இருவரும் கல்யாணத்துக்கு வராமல் போகவே, என்னவோ ஏதோ 'என்று அன்று இரவே அவன் குடும்பத்தினர் யாவரும் பதறிக் கொண்டு ஓடி வந்துவிட்டார்கள். மருமகள் இருந்த நிலையைப் பார்த்து அவன் தாயாரின் கண்களில் நீர் தளும்பிவிட்டது. அவள் அருகில் போய்க் கைகளை ஆதரவுடன் பற்றிக் கொண்டாள். எல்லோரையும் பார்த்துப் பரிதாபமாகச் சிரிக்க முயன்றாள் ஜானு.

'' ஜானு! என்னம்மா செய்கிறது?'' என்றபடி தலையில் கை வைத்துப் பார்த்தார். தந்தையின் பரிவுடன் அவள் மாமனார்.

நீலா கஞ்சியோட விரைந்தாள்.

மாலா அவள் முகமெல்லாம் துடைத்து, தலையை இலேசாய்க் கோதிவிட்டு, படுக்கையைச் சீராக்கிவிட்டாள். நீர் தளும்பிய கண்களுடன் நிமிர்ந்த ஜானுவிடம், ''பயப்படாதே, மன்னி, நாங்கள்தான் வந்து விட்டோமே?'' என்று ஆறுதலாய் மொழிந்தாள்.

ரவியைத் தூக்கி விளையாட்டுக் காட்டியபடி டாக்டரிடம் கிளம்பினான் தம்பி.

தன்னைச் சுற்றி வாஞ்சையுடன் நிற்கும் புக்ககத்தாரைப் பெருமையுடன் பார்த்துவிட்டுக் கணவனை அர்த்தமுள்ள பார்வையுடன் ஏறிட்டு நோக்கினாள் ஜானு.

''குடும்பம் என்பது கோயில், அதில் அமைதியுடன் சுடர்விடும் குத்துவிளக்கு நீ. உன்னைப் பகட்டான மின்விளக்காய் மாற்ற நினைத்த எனக்குத்தான் அறிவில்லை. என்னை மன்னித்துவிடு, ஜானு!'' என்று மனத்துள் நினைத்தவனாய், அவளைப் பார்த்துப் பதிலுக்குப் புரிந்து கொண்டவன் போல் கண்ணசைத்துச் சிரித்தான் ரமேஷ்.



பாகிஸ்தான் பிரதமர் திரு ஸல்ஃபகிர் அலி புட்டோ, ஒரு புது வெடிகுண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார்.

''அக்பர் பல மதத்தினரையும், பலதரப் பட்ட மக்களையும் ஒன்றுபடுத்தி ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதில் ரொம்பவும் சமர்த்தர்தான். எனினும் பின்னால் நாடு பிரிவினைப்படுவதற்குரிய சக்திகளையும் வைக்கவிட்ட பொறுப்பும் அவரையே சாரும் என்பது என் கருத்து'' என்று சொல்லியிருக்கிறார்.

பாரத நாட்டிலுள்ள ஹிந்துக்கள் ஓர் முஸ்லிம் பேரரசரைக்கூட நல்லவர் என்று நினைக்கக் கூடாது என்பதில் பாகிஸ்தான் பிரதமர் ரொம்பவும் அக்கறை கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. புட்டோவின் இந்த விஷமத்துக்குப் பாரத மக்கள் பலியாக மாட்டார்கள்.



ஒரு பிடி அவல்

வம்பன்



• • •

எம். ஜி. ஆர். அவர்களை நிருபர்கள் ஒரு கேள்வி கேட்டிருக்கின்றனர்.

''நீங்கள் முதலமைச்சர் ஆவீர்களா?''

அதற்கு திரு எம். ஜி. ஆர். அளித்த பதில் சுவையாக இருக்கிறது.

''நான் படங்களில் மகாராஜாவாக வந்திருக்கிறேன். ஆகவே, மந்திரி பதவிக்கு ஆசைப்படவில்லை.''

''ஆசைப்படப் பட ஆய்வரும் துன்பங்கள்'' என்னும் திருமூலர் வாக்கின் உண்மையை நன்கு உணர்ந்தவர் எம். ஜி. ஆர். என்பது தெரிகிறது.

• • •

''ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டதன் எதிரொலியாகக் கோவில்பட்டி நகரில் பிரதான சாலையை ஆக்கிரமித்துக் கட்டியிருந்த (அதாவது சட்ட விரோதமாகப் புறம்போக்கு நிலங்களில் கட்டப்பட்டிருந்த) கடைகள், வீடுகள் எல்லாவற்றையும் காலி செய்யும் வேலை இரவு பகலாக நடக்கிறது. தி. மு. க. பிரமுகர் ஒருவரின் பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள கடையை அவரது குடும்பத்தினர் இடித்துத் தள்ளி ஆக்கிரமிப்பைக் காலி செய்தனர்.'' (தினமலர் 11-2-76)

ஒருவருக்குக் கஷ்டம் வந்தால் உறவினர் எட்டிக்கூடப் பார்க்க மாட்டார்கள். இந்தப் பிரமுகரின் உறவினர் அந்த விதிக்கு விலக்காகப் பெரிதும் உதவியிருக்கிறார்கள்.

''இடிப்பது உதவியா?''

''அநீதியைத் தவிர்ப்பது உதவியல்லவா?''

• • •

இது விசாரணைக் கமிஷன் யுகம் போல் தோன்றுகிறது!

இதோ பாருங்கள் இன்னொரு விசாரணைக் கமிஷன்.


''டச்சு நாட்டு மன்னர் பெர்ன் ஹார்டு 11 லட்சம் டாலர்களை (சுமார் 88லட்சம் ரூபாய்) அமெரிக்க லாக்ஹீட் விமான கார்ப்பரேஷனிடமிருந்து பெற்றதாகக் கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கக் கமிஷன் அமைக்க டச்சு மந்திரி சபை விசேஷ கூட்டத்தில் முடிவு செய்தது!''


• • •

முன்னாள் சட்டசபை அங்கத்தினரான திரு சீனிச்சாமி சென்னைக்கு வந்துள்ள நிர்வாக அதிகாரிகளுக்கு ஒரு நல்ல யோசனை சொல்லியிருக்கிறார். திரு ஈ. வெ. ரா. சிலையின் கீழ் ஆஸ்திக மக்களின் மனம் புண்படும் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றை எடுத்துவிட வேண்டும் என்று யோசனை சொல்லியிருக்கிறார்.

• • •

தில்லியில் இளைஞர் காங்கிரஸ் தலைவருக்கு அணிவிக்கப்பட்ட இரண்டு மாலைகளையும் ஏலம் விட்டதில் ரூ. 51,000 கிடைத்ததாம். இவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்தவர்கள் அதைவிட நான்கு மடங்கு அதிகமாகச் சம்பாதிக்கத் திறமையில்லாமலா கொடுத்திருப்பார்கள் என்று கேட்கிறார் ஒரு கல்கத்தா வாசி.





இன்பத் தென்றல்

22

குல்ஷன் நந்தா

அநூபுக்குச் சிந்தனை ஓடவில்லை. இங்கும் அங்கும் சிறிது நேரம் அலைபாய்ந்தவாறு நடை பயின்றான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவன்போல், டியூட்டி ரூமுக்குச் சென்று, நர்ஸிடம் ''தயவுசெய்து எனக்காக ஒரு காரியம் செய்ய முடியுமா?'' என்று கேட்டான்.

''என்ன?''

''உள்ளேயிருந்து ரூபாவைச் சற்று வரச் சொல்லுங்களேன்!''

''அவள் இங்கு இல்லை!'' என்று நர்ஸ் அலட்சியமாகப் பதில் சொன்னாள்.

''எங்கே போயிருக்கிறாள்?''

''வெளியே!'' நர்ஸ் தன் கையிலிருந்த தர்மாமீட்டரை உதறியவாறே விடை அளித்தாள்.

''எப்பொழுது வருவாள்!''

''என்ன தெரியும்? ஒரு மாசம், இரண்டு மாசம்கூட ஆகலாம்!''

''என்ன?'' — தூக்கிவாரிப் போட்டுத் துள்ளிக் குதித்தான் அநூப்.

நர்ஸும் தன்னைக் கேலி செய்கிறாளா, என்ன?

''ஆமாம்!''

''ஓ மை காட்!''

''அவளுக்கு வேற்றூரில் வேலை கிடைத்து விட்டது. இன்று காலை அவள் இங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டாள்.''

''எந்த ஊரில் வேலை கிடைத்திருக்கிறது?''

''எனக்குத் தெரியாது'' என்றுகூறிவிட்டு நர்ஸ் தர்மா மீட்டரையும் மருந்து டிரேயையும் எடுத்துக் கொண்டு ரோஸியின் அறையை நோக்கிச் சென்றாள். அறைக்குள் நுழைந்து உள் பக்கமாகக் கதவைத் தாழிட்டுக்கொண்டாள்.

வாசலுக்கு வெளியே தொங்கிக்கொண்டிருந்த 'டோண்ட் டிஸ்டர்ப்' பலகை அநூப்புக்கு ஆத்திரத்தை வரவழைத்துக் கொண்டு கொட்டு கொட்டென்று விழித்துக்கொண்டிருந்தது. சிறிது நேரம் வெறித்த பார்வையோடு அவன் அந்தப் பலகையையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு திரும்பி வராந்தாவில் நீட்டக் கால் போட்டு நடந்து வெளியேறினான்.

ஆஸ்பத்திரியின் நிசப்தமான சூழலில் அவன் காலடியோசை சிறுகச் சிறுகக் கரைந்து தேய்ந்து மறைந்தது.

''உங்களை யாரோ பார்க்க வந்திருக்கிறார்கள், அம்மா.''

''யார்?''

''இந்தக் கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள்!''

க்ஷமா வேலைக்காரனின் கையிலிருந்து அந்தக் கடிதத்தை வாங்கிப் பிரித்து அவசரம் அவசரமாகப் பார்த்தாள். அப்புறம் அந்தக் கடிதத்தைப் படித்த வண்ணமே வேலைக்காரனுடன் வெளியே வந்தாள். ரூபா படபடக்கும் நெஞ்சுடன் குறுகுறுவென்று விழிகளை ஓட்டியவாறு அங்கே நின்றுகொண்டிருந்தாள்.

சில கணங்கள் க்ஷமா அவள் முகத்தை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். கள்ளங் கபடில்லாத முகம், எளிய உடை, நேர் வகிடு, துறுதுறுவென்ற கண்கள், எளிமையும் எழிலும் இணைந்த உருவமாகத் தோன்றினாள். அந்தச் சில கணங்களில் அவள் பலமுறை அவளைத் தலையிலிருந்து கால்வரை பார்த்துவிட்டாள். க்ஷமாவின் இந்தச் செயல் ரூபாவுக்கு விந்தையாகப் பட்டது. அவள் கவனத்தை ஈர்ப்பதற்காக, ''நீங்கள் தான் ஸ்ரீமதி சசிபாலாவா?'' என்று கேட்டாள்.

''நீ ரோஸியின் மகள் ரூபாதானே?''



தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

''ஆமாம். நீங்கள் அம்மாவுக்குக் கடிதம் எழுதியிருந்தீர்கள் அல்லவா?''

''ஆமாம். எழுதியிருந்தேன். உன் அம்மாவின் மடியில்தான் என் பிள்ளைப் பருவம் கழிந்தது. எத்தனை தடவை அவளுக்கு இங்கே வந்து விடுமாறு கடிதம் எழுதியிருப்பேன், தெரியுமா? ஆனால் அவள்தான் வரவில்லை. ஒருவேளை உன் படிப்பின் காரணமாகத்தானோ, என்னவோ...''

''ஆமாம். என் படிப்பு அவளை ஆஸ்பத்திரி வரைக்கும் கொண்டு போய்விட்டிருக்கிறது!''

இதைக் கூறும்பொழுது ரூபாவின் குரல் கனத்து ஒலித்தது.

''அடடா! நான் கேட்கவே மறந்து விட்டேனே! உன் அம்மா இப்பொழுது எப்படி இருக்கிறாள்?''

''முன்னைக்காட்டிலும் தேவலை. ஆனாலும் ஆஸ்பத்திரியில் வெகு நாட்கள் இருக்க வேண்டியிருக்கும்!''

''எனக்குத் தெரியும். அதனால்தான் அவள் உன்னை என்னிடம் அனுப்பிவிடத் துடித்தாள். தன் வாழ்க்கையில் ஒரு கவலையாவது குறையட்டுமே என்பதற்காக!''

''அவள் உடல்நிலை எப்படிச் சீர்கெட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?''


''நன்றாகத் தெரியும். நர்ஸைக்கொண்டு அவள் எல்லாவற்றையும் எழுதிவிட்டாள். நீ உன் கவலையையும் விடு. அவள் கவலையையும் விடு. நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்!''

ரூபா க்ஷமாவை ஊன்றிப் பார்த்தாள். இருவருடைய பார்வைகளும் உறவாடவே, க்ஷமா மென்னகை புரிந்து, ''வா, வா! இங்கேயே நிற்கிறாயே, உள்ளே வா!'' என்றாள். எசமானியின் சமிக்ஞை அறிந்து ஹர்நாம் ரூபாவின் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளே போனான்.

''பெட்டியை மாடியறைக்குக் கொண்டு போய் வை!'' க்ஷமா அவனுக்கு உரத்த குரலில் உத்தரவிட்டாள்.

ரூபாவும் க்ஷமாவும் உள்ளே வந்தார்கள். க்ஷமா ஒரு சோபாவில் அமர்ந்தாள். ரூபா அவளுக்கு அருகில் போய் நின்றுகொண்டாள்.

''அட நிற்கிறாயே, உட்காரு! அங்கே அதிலே போய் ஏன் உட்காருகிறாய்? இங்கே வந்து இந்த நாற்காலியில் உட்காரு!''



"ஊரிலிருந்து வந்த விருந்தினரைச் சென்னையில் A to Z வரை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டினேன்."

"அது என்னப்பா A to Z?"

"அண்ணா சமாதி முதல் 'ஜூ' வரை"

'பூச்சரம்' நாடகத்தில் கேட்ட வசனம். —ஆர்.எம்.

ரூபா ஒரு முக்காலியில் போய் உட்காருவதைக் கண்டு க்ஷமா கூறினாள்.

"ஆனால்...."

"ஆனால் கீனால் எல்லாம் வேண்டாம். நீ இங்கே வேலைக்கு வந்திருக்கிறாய் என்பது மெய்தான். ஆனால் இந்த வேலை உன்னைச் சின்னவளாக நினைத்துச் சிறுமைப்படுத்திக் கொள்ளுகிற வேலையில்லை. நீ படித்த பெண். படிப்புக்கு எப்பொழுதுமே நான் மதிப்புக் கொடுப்பவள். தெரிந்து கொள்!" என்றாள்.

"நீங்கள் எத்தனை மதிப்பு மிக்கவர்கள்! எத்தனை சிறந்த நோக்கம் கொண்டவர்கள்! உங்களுக்குத் தலை வணங்குகிறேன்!"

"உன்னைப் போன்ற ஆதரிச நோக்கம் கொண்ட பெண்களால் எங்களைப் போன்றவர்கள் ஊக்கம் பெறுகிறோம் என்றால்..."

ரூபாவுக்கு இதைக் கேட்க வெட்கமாகி விட்டது. இதற்கு முன் அவளுக்கு இத்தனை மதிப்பும் மரியாதையும் யாருமே கொடுத்ததில்லை. மகிழ்ச்சியில் அவள் கண்கள் பனித்துப் பளிச்சிட்டன.

"ஆமாம், நான் என்ன வேலை செய்ய வேண்டியிருக்கும்?" இங்கும் அங்கும் பார்த்தவாறே அவள் கேட்டாள்.

"என் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கும்!"

"அவர்கள் எங்கே?"

அவள் இப்படிக் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே, வாசற்புறம் ஜீப்பின் ஒலி கேட்டது. அது வந்து நின்றதும் யாரோ உரக்கக் குரல் கொடுத்து ஹர்நாமைக் கூப்பிட்டார்கள். அவன் விழுந்தடித்துக் கொண்டு வேகமாக ஓடினான்.

க்ஷமாவின் கண்களில் ஒளி மின்னியது. "அவர் வந்து விட்டார்!" என்று கூறிக் கொண்டே எழுந்தாள்.

அதற்குள்ளாக இரண்டு குழந்தைகளையும் தோள்களில் தூக்கிக் கொண்டு ஹர்நாம் உள்ளே வந்து விட்டான். இரண்டு குழந்தைகளும் இரட்டைக் குழந்தைகள். உருண்டையான முகம், நீண்ட கேசங்கள், கரிய வட்ட விழிகள். இரண்டு குழந்தைகளும் ஒரே மாதிரியான உடை அணிந்திருந்தார்கள். இணை பிரிக்க முடியாத அவற்றின் அழகைக் கண்டு ரூபாவின் கண்கள் இணைந்து அவற்றையே நோக்கின.

ஹர்நாம் தோளிலிருந்து குழந்தைகளை இறக்கி விட்டான். இரண்டும் 'மம்மி, மம்மி' என்று கூவியவாறே க்ஷமாவை வந்து கட்டிக் கொண்டன. அப்புறம் திரும்பி ரூபாவைக் கூர்ந்து பார்க்கலாயின.

ரூபா இளநகை புரிந்து கைநீட்டி அவற்றைத் தன்னிடம் வருமாறு அழைத்தாள். இரண்டும் வெட்கத்தோடு அம்மாவிடம் ஒட்டிக் கொண்டன.

"இவள் யார் தெரியுமா? உங்கள் அக்கா!" என்று க்ஷமா கூறவே, ஓரக்கண்ணால் அவளையே பார்த்தவாறு உள்ளே ஓடிவிட்டன. ரூபாவின் விழிகள் வீட்டுக்குள் அவை ஓடி மறையும்வரை அவற்றையே பின்தொடர்ந்தன. பிறகு தன் நினைவு திரும்பியவளாக, "ரொம்ப அழகான குழந்தைகள்!" என்றாள்.

"இவர்களைத்தான் நீ பார்த்துக்கொள்ள வேண்டும். என் கணவர் ஐந்து வயது ஆகும் வரை இவர்களை எந்தப் பள்ளிக்கூடத்துக்கும் அனுப்பக் கூடாது என்று பிடிவாதமாக இருக்கிறார்!" என்றாள் க்ஷமா.

"இரண்டு பேருக்கும் பெயர் என்ன?"

"லவன், குசன்!"

"அப்படியானால் உங்கள் பெயர் சீதை என்றல்லவா இருக்க வேண்டும்!" ரூபா சட்டென்று ஏதோ பேச்சுக்குச் சொல்லி வைத்தாள்.

அதற்குள் யாருடைய காலடி ஓசையோ இருவருடைய கவனத்தையும் கவர்ந்தது. அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். அஜீத் கையில் இரண்டு மூன்று பொட்டலங்களைத் தூக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

"சரியாகச் சொன்னாய் நீ! அவளுக்குச் சீதை என்றுதான் பெயர் வைத்திருக்க வேண்டும். சீதையைப் போலவே தங்கமான குணம் இவளுக்கு!" என்றான் அஜீத்.

"ஆமாம், எனக்கு எத்தனை பெயர்தான் மாற்றுவீர்களாம்!" க்ஷமா முறுவலித்துக் கொண்டே கேட்டாள். "சசிபாலா என்கிற பெயரைத்தான் க்ஷமா என்று மாற்றிவிட்டீர்களே!"

"என்ன செய்வது? இந்தக் குழந்தைகளுக்கு அம்மாவான பிறகு உன்னைப் பாலா—லா என்று சொல்வது என்னவோ போல் இருந்தது. 'பாலா' என்றால் 'குமரி' என்றல்லவா பொருள்?"

அஜீத்தின் பேச்சைக் கேட்டு ரூபாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. கலகலவென்று சிரித்துவிட்டாள். அப்புறம் என்ன நினைத்துக் கொண்டாளோ, சட்டென்று சிரிப்பை அடக்கிக் கொண்டாள். சூழலில் தன்னை மறந்து விட்டோமே என்று அவளுக்கு உறைக்கவே, நாணிக் கோணித் தரையை நோக்கினாள்.

"உங்கள் பெயர்?"

"ரூபா! நம் குழந்தைகளின் கவர்னெஸ். சிம்லாவிலிருந்து வந்திருக்கிறாள்!" என்று க்ஷமா அறிமுகம் செய்து வைத்தாள்.

"இவள் உன் பழைய...ரோஸியின் மகளா? ரொம்ப அழகாக இருக்கிறாளே!" அஜீத்தும் தன்னை மறந்து ரூபாவின் அழகுக்கு ஒரு பாராட்டு வழங்கி விட்டான்.

"ஆமாம், ஏழைகள் என்றால் அழகாயிருப்பதில்லையா?" என்று க்ஷமா கேட்கவே

உங்கள் அன்னையின் அறிவுரையை நம்புங்கள்



உங்கள் குழந்தை
அழும் போது
உங்கள் பாட்டி
சொன்னதைப் போலவே
உங்களையும்
உபயோகிக்கச் சொல்வார்
உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டரை

100 ஆண்டுகளுக்கும் மேலாக
தாய்க்குலம் நம்புவது



OPCM-1-75 TAM



அஜித்துக்கு வெட்கமாகப் போய்விட்டது. அவன் தன் பார்வையை ரூபாவின் மீதிருந்து அகற்றினான். பிறகு பேச்சை மாற்றுவதற்காக, "அப்படி நான் எங்கே சொன்னேன்? இவள் நல்ல சமயத்தில்தான் வந்திருக்கிறாள். குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதோடு, நான் ஊரில் இல்லாத நேரத்தில் உனக்கு ஓர் உறுதுணையாகவும் இருப்பாள் அல்லவா?" என்றான்.

அதன் பின்னர், தான் கொண்டு வந்திருந்த பொட்டலங்களைத் தூக்கிக்கொண்டு தன் அறைக்குச் சென்று விட்டான். இருவரும் திரும்பி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ரூபாவின் முகத்தில் ஒரு கம்பீரம் இழையோடுவதாகக் க்ஷமாவுக்குப் பட்டது. தன் கணவன் சொன்ன சொற்கள் அவள் மூளையைச் சுற்றி வட்டமிடுவதாகவும் அவள் அதன் பொருளை எடை போட்டுப் பார்ப்பதாகவும் தோன்றியது.

"அவர் பேச்சைத் தவறாக எடுத்துக்கொள்ளாதே! அவர் எப்போதுமே இப்படித்தான்! இன்னார் இனியார் என்று பாராமல் கேலிப் பேச்சுப் பேசத் தொடங்கி விடுவார். ஆனால் அவர் உள்ளம் வெள்ளை!" என்று க்ஷமா உதடுகளில் இளநகை இழையோடத் தன் கணவனுக்காக வக்காலத்து வாங்கிப் பேசினாள்.

"இதையெல்லாம் நான் எதற்காகத் தவறாக எடுத்துக் கொள்ளப் போகிறேன்!" என்றாள் ரூபா.

"அவர் சொன்னதும் தப்பில்லை. நான் கூட உன்னைப் பார்த்தபொழுது அப்படித்தான் நினைத்தேன். உண்மையில் நீ கொள்ளை அழகி!"

ரூபாவுக்கு வெட்கமாகி விடவே தலையைக் கவிழ்ந்து கொண்டாள். க்ஷமா அவளைத் தன்னோடு அழைத்துக் கொண்டு குழந்தைகள் இருந்த அறைக்குப் போனாள். அங்குதான் ரூபாவின் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன.

பேச்சோடு பேச்சாகக் க்ஷமா அந்த வீட்டின் வரை படத்தையே ரூபாவுக்கு விளக்கி விட்டாள். அதோடு அந்த வீட்டில் இருக்கும் நபர்களைப் பற்றியும் சிறு குறிப்புக் கொடுத்து விட்டாள். அவள், அவள் கணவன், இரண்டு குழந்தைகள், ஒரு வேலைக்காரன். இவ்வளவு பேர்கள்தான் அந்த வீட்டில் இருந்தார்கள். அடுத்த வாரம் அவள் கணவன் லண்டன் போகப் போகிறான் என்பதையும், அங்கே அவன் தமையன் நோய்வாய்ப்பட்டிருக்கிறான் என்பதையும் சொன்னாள். அதனால்தான் ரூபாவைப் பார்த்ததும் அவள் கணவனுக்கு அத்தனை மகிழ்ச்சி! தான் ஊரில் இல்லாத நாட்களில் தன் மனைவிக்கு ஒரு துணை கிடைத்துவிட்ட மகிழ்ச்சியே அவனை அப்படிப் பேச வைத்தது. க்ஷமா எல்லாவற்றையும் சாங்கோபாங்கமாக விளக்கி விட்டாள்.

க்ஷமாவின் வீட்டுக்கு வந்த பின், ரூபா தன்னை யாரோ மண்ணிலிருந்து விண்ணில் ஏற்றி உட்கார வைத்தாற்போல் உணர்ந்தாள். அவளுடைய அம்மா நினைத்தது சரிதான். சபிபாலாவின் வீட்டில் அவளுக்கு உதவிமட்டுமின்றி, மதிப்பும் மரியாதையும் கிடைக்கும் என்று அவள் போட்ட கணக்கு நூற்றுக்கு நூறு சரியாக அமைந்து விட்டது. வந்த சில நாட்களுக்குள்ளேயே அவளும் அந்த வீட்டின் நபரில் ஒருத்தியாகி விட்டாள்.

நேற்றுவரையில் அவளைக் கண்டால் வெட்கத்தோடு ஓடி ஒளிந்துகொண்ட குழந்தைகள் 'அக்கா' என்று உறவு கொண்டாடிக்கொண்டு அவள் சேலைத் தலைப்பில் கண்ணாமூச்சி விளையாடலாயின.

சண்டிகரிலிருந்து ஏறக்குறைய இருபது இருபத்திரண்டு மைல் தொலைவில் அவர்களுடைய பண்ணை இருந்தது. அதற்கு அருகிலேயே அவர்கள் குடியிருக்கும் மாளிகையும் அமைந்திருந்தது. வெகு தொலைவுக்கு வெகு தொலைவு குடியிருப்புக்களே கிடையாது. எழில் கொஞ்சும் இயற்கை அழகு. மனம் கவரும் சூழ்நிலை, கண்கவரும் பருவச்செழிப்பு. யாருக்கும் அஞ்சி வாழ வேண்டிய நிலையில்லை. யாருடைய தடைக்கும் ஈடுகொடுக்க வேண்டிய தேவையில்லை. மூச்சு முட்டும் அடைப்புக்குள்ளிருந்து விடுபட்டு வெளியே வந்து சுதந்திரச் சூழலில் நிம்மதியாக நெடுமூச்சு விடுவது போன்ற இன்பம்! ரூபா மெய் மகிழ்ந்து போனாள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேல் என்ற வயல்களும் தோப்புக்களும் விழிகளுக்கு விருந்து வைத்

அடுத்த இதழில்

குப்பைக்கூளம் கலைக்கூடமாகிறது!





ஜோக் ஜாக்கிரதை!
"ராஜா"

சிறுகதை:
முகங்கள்...
—சுசித்ரா





ஆபத்சகாயேசுவரர் திருப்பணி

சோழ மன்னரால் கட்டப் பெற்ற ஆபத்சகாயேசுவரர் ஆலயம் மிகப் பழமை வாய்ந்தது. இக்கோயில் புதுப்பிக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெறப் போகிறது. இதன் திருப்பணியில் ஆஸ்திக பக்தர்கள் கலந்து கொண்டு ஈசனருளுக்குப் பாத்திரராகக் கோருகிறோம். காஞ்சிப் பெரியவர்களின் அனுக்கிரகம் பெற்ற திருப்பணி இது.

பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: திரு சி. ராஜப்பா, பி.ஏ., நிர்வாக அதிகாரி, ஆபத்சகாயேசுவரர் ஸ்வாமி கோயில், கோவில்பத்து கிராமம், பூதலூர், தஞ்சை தாலுகா.

தன. 'எத்தனை இன்பம் வைத்தாய் இறைவா!' என்று பாடி மகிழாத தோஷம்தான்!

ஆனால் இரவின் தனிமையில், அவள் தன் அறையில் படுக்கையில் படுத்துத் தூக்கம் வேண்டித் தவம் இருக்கும்பொழுது அவள் உள்ளத்திலே ஒரு வேதனை கிளர்ந்தெழும். 'அநூப் அவனை எத்தனை நம்பியிருந்தான்? அவனுடைய அத்தனை நன்றியையும் கொன்று போட்டு விட்டோமே!' நினைக்க நினைக்க அவளுக்கு நெஞ்சம் வலி கண்டது; உறக்கம் அவள் விழிகளுக்குத் தட்டுப்படாமல் ஓடி ஒளிந்து கொண்டது!

அஜீத் புறப்படுவதற்கு இரண்டு நாட்கள் தான் பாக்கியிருந்தன. க்ஷமா அவனுக்குத் துணிமணிகளை எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள். அவள் அருகில் அமர்ந்து ரூபா சட்டைக்குப் பொத்தான்கள் வைத்துத் தைத்துக் கொண்டிருந்தாள். சற்றுத் தொலைவில்லலனும் குசனும் போரெனக் குவிந்திருந்த விளையாட்டுப் பொருள்களை வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

''ஒன்று கேட்கலாமா, அக்கா?'' திடீரென்று ரூபா கேட்டாள்.

''என்ன?''

''உங்களுக்குக் கல்யாணம் ஆகி எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?''

''கிட்டத்தட்டப் பதினைந்து ஆண்டுகள்!''

''ஆனால் லவனுக்கும் குசனுக்கும் ஐந்து வயதுகூட ஆகவில்லையே!''

''ஆமாம். அதனால் கல்யாணத்துக்குப் பிறகு எத்தனை பேருடைய வாயில் புகுந்து புறப்பட வேண்டியிருந்தது. தெரியுமா? எல்லோரும் என்னைக் குத்தாமல் குத்திக் துளைக்காமல் துளைத்து எடுத்து விட்டார்கள்!''

''ஆனால் உங்கள் கணவர் உங்களிடம் ஒரு குறையும் காணவில்லை; கூறவில்லை!''

''உனக்கு யார் சொன்னார்கள்?''

''யாரும் சொல்லவில்லை. அவர் நடந்து கொள்ளும் முறையைக் கொண்டே அறிந்தேன். அவர் உங்களை உயிருக்குயிராக நேசிக்கிறார் என்று தெரிகிறது. நேற்றிலிருந்து எத்தனை தடவை என்னிடம் சொல்லி விட்டார், தெரியுமா?''

''என்ன சொன்னார்?''

''எசமானியம்மாளை நன்றாகக் கவனித்துக்கொள். அவளுக்கு ஒரு கணமும் வருத்தம் ஏற்படாமல் நடந்து கொள்'' என்றார்.

''ஆமாம், ரூபா! அவருடைய பெருந்துணைதான் என் வாழ்க்கைக்கே ஆதாரம். அவர் என்னிடம் அன்பு பாராட்டி எனக்கு மரியாதை தராமல் இருந்திருந்தால், நான் எப்பொழுதோ செத்துப் போயிருப்பேன். உற்றாரும், உறவினரும், ஊராரும் என் தலையில் ஒரு சக்களத்தியைக் கொண்டு வந்து கட்ட ஒற்றைக் காலில் நின்றார்கள். அவர் அதற்குச் சிறிதும் இடம் கொடுக்கவில்லை!''

''ஆண்டவன் உங்கள் மானத்தைக் காப்பாற்றி விட்டான். ஒன்றல்ல; இரண்டு குழந்தைகளைக் கொடுத்து. லவனுக்கும் குசனுக்கும் ஒரு தங்கச்சிப் பாப்பாவும் பிறந்து விட்டால் என் மகிழ்ச்சி பிடிபடாது!''

''ஆனால் இனி அப்படி ஓர் ஆசையை வளர்ப்பதற்கில்லை!''

''ஏன்?''

''அடுத்த குழந்தை பிறந்தால் என் உயிருக்கு ஆபத்தாக முடியும் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள்! என் கணவருக்குக் குழந்தைகளைக் காட்டிலும் என்மேல்தான் உயிர்!'' என்றாள் க்ஷமா.

இதைக் கேட்டதும் ரூபாவின் முகம் வாடிவிட்டது. க்ஷமா அவளுடைய மன வருத்தத்தைக் கண்டாள். எனவே, பேசாமல் துணி மணிகளைப் பெட்டியில் எடுத்து வைப்பதில் முனைந்தாள்.

''ஒன்று சொல்லட்டுமா, எசமானியம்மா?'' சிறிது நேரம் பேசாமல் இருந்த ரூபா திடீரென்று கேட்டாள்.

''எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன், உனக்கு? எசமானி அம்மா என்று சொல்லாதே. அக்கா என்று கூப்பிடு என்று!'' க்ஷமா அவளைக் கடிந்து கொண்டாள்.

''ஓ! ஸாரி, அக்கா!''


''நீ என்ன சொல்ல வந்தாய், சொல்லு!''

''நான் இந்த இரண்டு குழந்தைகளுக்கும் அக்காளாகி விடட்டுமா?'' ரூபா வெகு சகஜமாகவே கேட்டாள். அப்புறம் தன் கேள்வியைத் தானே எண்ணிப் பார்த்து உள்ளுக்குள் கூசினாள். ஆனால் அவள் வாயிலிருந்து இந்தச் சொல்லைக் கேட்ட க்ஷமாவின் உள்ளத்திலே விந்தைமிகு கிளுகிளுப்பு ஒன்று திவலை எடுத்தாற்போல் ஏற்பட்டது. அவள் கண்களிலே அன்பு பொங்கிப் பிரவாகமெடுத்தது. உதடுகள் துடிக்க, ''அடி பைத்தியமே! இன்று தானே உனக்கு இந்த எண்ணம் ஏற்பட்டிருக்கிறது? என்றைக்கு நீ இவர்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றாயோ, அன்றைக்கே நான் உன்னை இவர்களுடைய அக்காள் என்று தீர்மானித்துவிட்டேன்!'' என்றாள்.

வெளியே காரின் ஹாரன் ஒலிக்கவே, இருவரும் பரபரத்தார்கள்.

''எசமானர் வந்துவிட்டாற் போலிருக்கிறது!'' ரூபா உடையை நீவி விட்டுக் கொண்டே எழுந்தாள்.

க்ஷமா பதில் ஏதும் சொல்வதற்கு முன்பாகவே, வேற்று மனிதன் ஒருவன் உள்ளே நுழைந்தான். அதைக் கண்டு ரூபா சற்றுத் திகைத்துப் போனாள். (தொடரும்)


அப்பாடா! தணிந்தது ஜலதோஷம்!
மூக்கிலும் மார்பிலும் அடைபட்ட சளியை
அதி விரைவில் அகற்றி, இலகுவாக
மூச்சு விட உதவுகிறது ரபெக்ஸ்—காரணம்
ஆறுதலளிக்க அதிலுள்ள 6 மருந்துப் பொருள்கள்.
மெந்தால்
வலி தணிக்கிறது... குளுமையான இதமளிக்கிறது.
கேம்ஃப்பர்
தைமால்
டர்ப்பென்டைன்
யூகலிப்டஸ்
நட்மெக்
RUBEX
RUBEX
ரபெக்ஸ்
விறுவிறுப்பு-மிகுந்த ஜலதோஷ
நிவாரணக் களிம்பு.
Alembic
அலெம்பிக்—பல தரப்பட்ட நல்ல மருந்துகளுக்கென
டாக்டர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது.



பொது அறிவுக் கேள்விகள் !

(கற்பனைபுரி சர்வாதிகாரியின் மகனுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்த ஆசிரியர், விசேஷ பரீட்சை வைத்தார். அதில் நூற்றுக்கு நூறு மார்க் பெற்றான் மாணவன். ஆசிரியருக்குச் சம்பளம் இரண்டு மடங்காக உயர்ந்தது. ஆசிரியர் தயாரித்த கேள்வித்தாள் இதோ தரப்படுகிறது.)

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிப்பிடவும்.

1. சிலப்பதிகாரத்தின் கதாநாயகி:
(அ) கண்ணகி (ஆ) பொற் கொல்லன் (இ) கோவலன்.

2. கம்பராமாயணம் எழுதியவர்:
(அ) மில்டன் (ஆ) கார்ல் மார்க்ஸ் (இ) கம்பர்.

3. மகாத்மா காந்தி பிறந்த வருடம்:
(அ) 1982 (ஆ) 1869 (இ) 1994.

4. விஜய் அமிர்தராஜ் ஒரு டென்னிஸ் விளையாட்டு வீரர்:
(அ) ஆம் (ஆ) ஆமாம். (இ) நிச்சயமாக.

5. சந்திர மண்டலத்தில் முதலில் இறங்கியவர்:
(அ) குப்புசாமி (ஆ) சின்னக் கண்ணு அம்மாள் (இ) ஆர்ம்ஸ்ட்ராங்.

6. முதல் பானிபட் போர் எப்போது நடந்தது?
(அ) இரண்டாவது பானிபட் போருக்கு முன்பு (ஆ) இரண்டாவது போருக்குப் பிறகு (இ) வியட்நாம் போருக்குப் பிறகு.

7. ஃப்ளவர் என்ற ஆங்கில வார்த்தைக்குப் பொருள்:
(அ) பூ (ஆ) புஷ்பம் (இ) மலர்.

8. 'ழ' என்பது எந்த மொழி எழுத்து?
(அ) தமிழ் (ஆ) புஷ்டு (இ) ஸ்வாஹிலி.

9. அரிசி உப்புமா செய்யத் தேவையானது:
(அ) கோதுமை (ஆ) முருங்கைக் காய். (இ) அரிசி.

10. கடிகாரம் என்பது:
(அ) காரமான பொருள் (ஆ) மணி காட்டும் கருவி (இ) கடிக்கும் யந்திரம்.

11. இந்தியாவின் தேசியப் பறவை:
(அ) மயில் (ஆ) மான் (இ) திமிங்கிலம்.

12. 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' – இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல்:
(அ) வளையாபதி (ஆ) குண்டலகேசி (இ) திருக்குறள்.

13. முதல் தமிழ் நாவல்:
(அ) பிரதாப முதலியார் சரித்திரம் (ஆ) பாரடைஸ் லாஸ்ட் (இ) அன்னு கரீனினா.

14. இந்த நாட்டின் சர்வாதிகாரி:
(அ) தங்கமானவர் (ஆ) அன்பே உருவானவர் (இ) தெய்வப் பிறவி.



Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

தேவைகளை சொந்தமாகப் பூர்த்தி
செய்வதை நாங்கள் வலியுறுத்துவது
எஃகுத் தயாரிப்புத் துறையுடன்
மட்டும் நிற்கவில்லை.

ஆதித்யபூரில் உள்ள எங்களது
மாபெரும் பராமரிப்புத் தொழிற் கூடம்
ஒன்றிலேயே நாங்கள் சிக்கலான
மிஷின்களையும் துணை பாகங்களையும்
சொந்தமாக உருவாக்குவதன் மூலம்
இவற்றின் இறக்குமதியைத் தடுத்து
ஆண்டுதோறும் தேசத்திற்காகப்
பெருமதிப்புள்ள அன்னியச்
செலாவணியை மீதப்படுத்துகிறோம்

ஆண்டுகள் பல உருண்டோடினும்,
நாங்கள் இளமை குன்றாது திறம்படச்
செயல்படுவதற்கு இது ஓர் சீரிய
எடுத்துக்காட்டாகும்

தேவைகளை சொந்தமாகப் பூர்த்தி
செய்யும் துறையில் நாங்கள்
வளருகிறோம்.

எஃகினை
யொத்த


உறுதியான
குறிக்கோள்

டாடா ஸ்டீல்

TTL 8730



